Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 266 பிலவ வருடம், ஆனி மாதம் 16ஆம் திகதி புதன்கிழமை (30.06.2021) ஹிஜ்ரி - 1442, துல்கஹ்தா பிறை - 18, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30

## நக்கல் நமசிவாயம்




# ஜூனில் 1,546 மரணங்கள்

•யோ.தர்மராஜ்

புத்தாண்டு கொவிட் கொத்தணியில் ஜூன் மாதத்தில் மாத்திரம் ஆயிரத்து 546 மரணங்கள் பதிவாகியுள்ளன. புத்தாண்டுக்கு முன்னர் நாட்டில் ஓரிரு மரணங்கள் பதிவாகிய நிலையில், தற்போது, நாளுக்கு நாள் 40 – 50இற்கும் மேற்பட்ட மரணங்கள் பதிவாகியுள்ளன. அதற்கமைய, ஏப்ரல் மாதத்தில் 110 மரணங்களும் மே மாதத்தில் 806 மரணங்களும் பதிவாகிய நிலையில், ஜூன் மாதத்தில் நேற்று மாலை 6 மணிவரை ஆயிரத்து 546 மரணங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. 02≫

# இலங்கை விமானப்படைக்கு நவீன தொழில்நுட்ப வசதிகள் வழங்குகிறது சீன அரசு

- இலங்கை வான்பரப்பு 24 மணிநேர கண்காணிப்பில்
- அனுமதியின்றி நாட்டுக்குள் வரும் ட்ரோன்களை சுட முடிவு

•நமது விசேட செய்தியாளர்

இலங்கை விமானப்படையினருக்கு அதிநவீன தொழில்நுட்ப வசதிகளை செய்துகொடுக்கவும் அதற்குரிய நவீன உபகரணங்களை இலங்கைக்கு வழங்கவும் சீனா தீர்மானித்துள்ளது.

இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு பேச்சுவார்த்தைகளையடுத்து இந்த உதவிகளை செய்ய சீனா முடிவுசெய்துள்ளது.

இதேவேளை, இலங்கை வான்பரப்பில் 24 மணிநேர கண்காணிப்பு நடவடிக்கைகளில் இலங்கை விமானப்படை ஈடுபட்டு வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அதேசமயம், சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குள் ட்ரோன் கெமராக்கள் ஊடுருவுமானால் அவற்றை சுட்டுவீழ்த்தவும் முடிவுசெய்யப்பட்டுள்ளதாக அறிய முடிந்தது.



# எரிபொருள் விலைக்காக வருந்துகிறோம்

## அரசாங்கம்

•யோ.தர்மராஜ்

எரிபொருள் பிரச்சினை தொடர்பாக நாங்கள் மிகவும் வருத்தமடைகின்றோம். எங்களுக்குக் கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே எரிபொருள் விலையை குறைப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். இதனை செய்வதற்கு பெசில் ராஜபக்ஷ நாடாளுமன்றம் வரும்வரை நாங்கள் காத்திருக்கவேண்டிய தேவையில்லை - என அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (29) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோது, பெசில் ராஜபக்ஷ நாடாளுமன்றம் வருகை தந்தால் எரிபொருள் விலையும் குறையும் என்றால் தற்போது குறைக்க முடியாதா? அவர் வரும்வரை காத்திருக்க வேண்டுமா? என ஊடகவியலாளரினால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,... 02≫

# சீன இராணுவ சீருடையை யாரும் அணியவில்லை

## திஸ்ஸமஹாராம வாவி பணியாளர்கள் குறித்து அரசாங்கம் விளக்கம்



•யோ.தர்மராஜ்

திஸ்ஸமஹாராம வாவி அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டிருந்தவர்கள் அணிந்திருந்த ஆடை, சாதாரண ஆடை என குற்றப்புலனாய்வுப் பிரிவு மற்றும் இராணுவ புலனாய்வுப் பிரிவினால் முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் இவ்வாறான ஆடைகளை அணிய முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளதாக... 02≫

# பெசிலின் நியமனம் கட்சியின் தீர்மானமே

## கேட்கும் உரிமை ஊடகருக்கும் இல்லையென்கிறார் கெஹேலிய

•யோ.தர்மராஜ்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பெசில் ராஜபக்ஷவின் நாடாளுமன்ற பிரவேசம் அல்லது அமைச்சர் பதவிப்பிரமாணம் குறித்து அரசாங்கம் என்ற ரீதியில் எந்தவித தீர்மானத்தையும் இதுவரை எடுக்கவில்லை. எதிர்வரும் நாட்களில் அமைச்சரவையில் மாற்றங்கள் இடம்பெறுமா, இல்லையா என்பது தொடர்பில் ஜனாதிபதியே தீர்மானிப்பார் என அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார். 02≫

# குற்றமிழைத்த கிரிக்கெட் வீரர்கள் நாடு திரும்பினர்

## விமான நிலையத்தில் வரவேற்கப்படாத சோகம்



•மணிராஜ் சசிதரன்

இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களான தனுஷ்க குணதிலக்க, நிரோஷன் டிக்வெல்ல மற்றும் குசல் மெண்டிஸ் ஆகியோர் நேற்று நாடு திரும்பினர். பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வருகைதந்த அவர்களை ரசிகர்கள் எவரும் கண்டுகொள்ளவில்லை. இங்கிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம்... 02≫

# 150 கடலாமைகளின் உடல்கள் இதுவரை கரையொதுங்கின



எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் தீ பரவியதையடுத்து, நாட்டின் வெவ்வேறு கடற்பிராந்தியங்களில் இதுவரை 150 கடலாமைகளின் உடல்கள் கரையொதுங்கியுள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, 15 டொல்பின்களும் இவ்வாறு கரையொதுங்கியுள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உயிரிழந்த கடலாமைகளின் உடற்பாகங்கள் மேலதிக பரிசோதனைகளுக்காக அரச இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

# அரச நிறுவனங்களின் தலைவர்களை அடிக்கடி மாற்றம் செய்யக்கூடாது

## அமைச்சர்களுக்கு ஜனாதிபதி செயலர் அதிரடி பணிப்புரை



•நா. தினுஷா

அரச கூட்டுத்தாபன, சபை மற்றும் திணைக்களங்களின் தலைவர்களை நினைத்த நினைத்தபடி மாற்ற முடியாதென்ற ஜனாதிபதியின் நிலைப்பாட்டை அமைச்சர்களுக்கு எடுத்துக்கூறுமாறு ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர, அனைத்து அமைச்சுகளின் செயலாளர்... 02≫

# வளைகுடா நாடுகளிலிருந்து இலங்கைக்கு வருவதற்குத் தடை

•நா. தினுஷா

ஜூலை மாதம் முதலாம் திகதிமுதல் மத்திய கிழக்கிலுள்ள 6 நாடுகளிலிருந்து வருகைதரும் விமானப்பயணிகள் இலங்கையில் தரையிறங்க அனுமதிக்க வேண்டாமென அனைத்து விமான சேவைகளுக்கும் சிவில் விமான சேவைகள் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

பஹ்ரைன், கட்டார், ஐக்கிய அரபு இராச்சியம், சவூதி அரேபியா, குவைத் மற்றும் ஓமான் ஆகிய நாடுகளிலிருந்து வருவோருக்கே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது. 02≫

# அத்தியாவசிய பொருட்கள் 3 மாதங்களுக்கு கையிருப்பில்

## சிவப்பு எச்சரிக்கையில்லையென அரசாங்கம் திட்டவட்டம்

•யோ.தர்மராஜ்

நாட்டில் மூன்று மாதங்களுக்கு தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் கையிருப்பில் உள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (29) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோது, அத்தியாவசிய உணவு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதா என்பது குறித்து ஊடகவியலாளரினால்... 02≫

# அமைச்சரவை தீர்மானங்கள்!

2021.06.28 அன்று இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள் உள்ளே... 05≫

# கால்பந்து சம்மேளன தேர்தல் இன்று



•அகீல் சிஹாப்

இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் அடுத்த நான்கு ஆண்டுகளுக்கான புதிய நிர்வாகத்தை தெரிவுசெய்வதற்கான தேர்தலானது, இரு தடவைகள் ஒத்திவைப்பின் பின்னர் இன்று நடைபெறவுள்ளது. இத்தேர்தலானது மூன்று மத்திய நிலையங்களில் நடைபெறும் - என இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் தற்போதைய தலைவர் அநுர டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஒன்பது மாகாணங்கள் மூன்று வலயங்களாக பிரிக்கப்பட்டு, காலி, கண்டி, பொலன்னறுவை ஆகிய இடங்களில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு தேர்தல் நடைபெறவுள்ளது. 02≫

# பெசிலை எம்.பி.யாக்குக!

## 113 உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு கடிதம்

•யோ.தர்மராஜ்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பெசில் ராஜபக்ஷவை நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கும் வகையில் அக்கட்சியைச் சேர்ந்த 113இற்கும் அதிகமான உறுப்பினர்கள் கையெழுத்திட்ட கடிதம் ஒன்று ஜனாதிபதி... 02≫

# டெல்ட்டா திரிபு வேகமாக பரவும்

## 10 நாட்களில் ஆபத்து அதிகமென இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி எச்சரிக்கை



•யோ.தர்மராஜ்

நாட்டில் தற்போது டெல்ட்டா திரிபு பரவும் ஆபத்து அதிகரித்துள்ளது. சுகாதார விதிமுறைகளை முறையாக கடைப்பிடிக்காவிட்டால் எதிர்வரும் 10 நாட்களில் நாட்டில் டெல்ட்டா திரிபு மிக வேகமாகப் பரவக்கூடுமென விசேட வைத்திய நிபுணர்கள்... 02≫






தனியார் பல்கலைக்கழகங்களை சட்டமயமாக்குதல், கல்வித்துறையை இராணுவமயமாக்கும் கொத்தலாவல சட்டமூலத்தை கைவிடுமாறு கோரி கிரிபத்கொடையில் முன்னிலை சோஷலிச கட்சியினர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே)

# நாடாளுமன்ற அமளி அறிக்கை அடுத்த வாரம் சபாநாயகரிடம்

2021 ஏப்ரல் 21ஆம் திகதி நாடாளுமன்றத்தின் சபா மண்டபம் மற்றும் நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் ஆராய்ந்து, அதற்காக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்த பரிந்துரைகளை முன்வைப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையை அடுத்த வாரம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கையளிப்பதற்கு அக்குழு தீர்மானித்துள்ளது.

பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவின் தலைமையில் இக்குழு கூடியதாக நாடாளுமன்றத்தின் உதவிச் செயலாளர் நாயகம் டிக்கிரி ஜயதிலக்க தெரிவித்தார்.

அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, கெஹேலிய ரம்புக்வெல்ல, இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, நாடாளுமன்ற உறுப்பினர்களான அநுர பிரியதர்ஷன யாப்பா, இம்தியாஸ் பாக்கீர் மாக்கர், ஆர்.எம்.ரஞ்சித் மத்துமபண்டார, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாகச் செயற்படுகின்றனர்.

ஏப்ரல் 21ஆம் திகதி ஏற்பட்டதுபோன்று குழுப்பமான சூழ்நிலை மீண்டும் நாடாளுமன்றத்தில் ஏற்படாதிருப்பதற்கு எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதை பரிந்துரைப்பதற்காக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவால் கடந்த ஏப்ரல் 23ஆம் திகதி இந்தக் குழு நியமிக்கப்பட்டது.

இதற்கமைய இதுபோன்ற சம்பவங்களினால் ஒட்டுமொத்த நாடாளுமன்றத்திலும் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள் குறித்து விரிவாக ஆராய்ந்த இக்குழு, எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்களைத் தடுப்பதற்கான நீண்டகால மற்றும் குறுகியகால நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளது. இது தொடர்பான முழுமையான அறிக்கையை சபாநாயகரிடம் கையளிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# சேதனப் பசளை தயாரிப்பில் ஈடுபடுவோருக்கு அரச மானியம் வழங்குவதற்கு தீர்மானம்



(வாழைச்சேனை நிருபர்)

காலநிலை மாற்றத்திற்குரிய நிலைபேறான தீர்வுக்காக பசுமையான சமூக பொருளாதாரத்தை நோக்கிய இலங்கையின் தன்மை மாற்றம் எனும் தொனிப்பொருளில் விவசாயிகளை தெளிவூட்டுவதற்கான கலந்துரையாடல் அமர்வு நேற்று கிரான் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தனின் தலைமையில் நடைபெற்ற இந்த அமர்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.ஸ்ரீகாந், பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாவு, தவிசாளர் சோபா ஜெயரஞ்சித், திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.புண்ணியமூர்த்தி, கலாநிதி சந்திரகாந்த மகேந்திரநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதியின் நஞ்சற்ற உணவு உற்பத்தி எனும் தொனிப்பொருளில் சேதனப் பசளையின் உற்பத்தி அவசியம் பற்றியும் ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்பட்டுள்ள இத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும், உற்பத்தி செய்யப்படும் பசளையை தரமானதாக உற்பத்தி செய்வதன் அவசியம் பற்றியும் அபிவிருத்திக் குழுத் தலைவர் தமது உரையின்போது கருத்து தெரிவித்தார்.

சேதனப் பசளை தயாரிப்பில் ஈடுபடுவோருக்கு, 5 ஏக்கரில் செய்கைபண்ணுவோருக்கு 30,000 ரூபாவும் 2 ஏக்கரில் செய்கை பண்ணுவோருக்கு 10,000 ரூபாவும் உதவித் தொகையாக அரச மானியம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. விவசாயிகள் மற்றும் சேதனப் பசளை தயாரிப்போர் தாம் பசளை தயாரிப்பில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிய விடயங்களை முன்வைத்தனர்.

சேதனப் பசளை உற்பத்தி நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கான இயந்திர சாதனங்கள், பயிற்சிகள், பணத்தேவையைப் பெற்றுக்கொள்ளல் போன்ற விடயங்கள் முன்வைக்கப்பட்டன. இதற்கான தீர்வைப் பெற்றுக்கொள்ள அரச, தனியார் வங்கிகளின் அதிகாரிகள், பல்கலைக்கழக விடயம் சார்ந்த விரிவுரையாளர்கள் மற்றும் விவசாயிகளை அழைத்து ஆக்கபூர்வமான கலந்துரையாடல் நிகழ்வொன்றை ஏற்படுத்தி ஆலோசனைகளை பெறுவது, கடன் வழங்கல் தொடர்பான விடயங்களுக்கு தீர்வு பெறுவது போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

கலந்துரையாடல் முடிவின் பின்னர் அபிவிருத்திக் குழுத் தலைவர், மேலதிக அரசாங்க அதிபர், அதிகாரிகள் ஆகியோர் கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் சேதனப் பசளை தயாரிப்பு உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடும் விவசாயி பு.சுரேஸ் என்பவரது பசளை தயாரிப்பு நிலைய செயற்பாடுகளை நேரில் சென்று பார்வையிட்டனர்.

## குற்றமிழைத்த...

மேற்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் கடந்த ஞாயிறு இரவு டர்ஹம் நகரில் சுற்றித்திரிந்ததாக தெரிவிக்கப்பட்டு குறித்த மூவர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் குறித்த மூன்று வீரர்களுக்கும் எதிராக தற்காலிக போட்டித்தடை விதித்து அவர்களை மீண்டும் நாட்டிற்கு அழைப்பதற்கு ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் தீர்மானித்தது.

இதனடிப்படையில் நேற்று பிற்பகல் 1.15 மணிக்கு ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான யூ.எல். 504 என்ற விமானத்தில் அவர்கள் மூவரும் லண்டனில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தந்துள்ளனர். இவ்வாறு விமான நிலையத்தை வந்தடைந்தவர்கள் நீர்கொழும்பில் உள்ள ஹோட்டல் ஒன்றில் 14 நாட்களுக்கு தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

## ஜூனில் 1,546...

இதேவேளை, நேற்று மாலை மேலும் 45 மரணங்கள் பதிவாகியதையடுத்து நாட்டில் மரணங்களின் எண்ணிக்கை மூவாயிரத்தைத் தாண்டியுள்ளது. அதன்பிரகாரம் மொத்த மரணங்கள் மூவாயிரத்து 30 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பெசிலை எம்.பி.யாக்குக...

கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பெசில் ராஜபக்ஷ நாடாளுமன்றம் வரவேண்டும் என ஆளுந்தரப்பு பின்வரிசை உறுப்பினர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்ற நிலையில், தற்போது, இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் ஆளுந்தரப்பு பின்வரிசை உறுப்பினர்களென 113இற்கும் அதிகமான உறுப்பினர்கள் குறித்த கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளனர். இந்தக் கடிதம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, பெசில் ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினராக பதவி ஏற்கவேண்டும் எனக் கூறி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமை தாங்கும் பல உள்ளூராட்சி மன்றங்களிலும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

எனினும், தான் நாடாளுமன்ற வருகை தருவது குறித்து இதுவரை எவ்வித பதிலையும் பெசில் ராஜபக்ஷ வழங்கவில்லை என்றும் அவ்வாறு அவர் தன்னுடைய நிலைப்பாட்டை அறிவித்த பின்னர் அடுத்தகட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் ‘தமிழன்’ செய்திகளிடம் தெரிவித்தார்.

## அரச நிறுவனங்களின்...

மார்களுக்கு விசேட சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தியுள்ளார்.

அரச நிறுவனமொன்றின் தலைவரை அந்தப் பதவியிலிருந்து நீக்கப்படவேண்டுமாயின், அதற்குரிய முறையான காரணங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டுமெனவும், அரச நியமனங்களை பரிசீலிக்கும் விசேட குழுவின் கவனத்திற்கும் அது கொண்டுசெல்லப்பட வேண்டுமெனவும் ஜனாதிபதியின் செயலாளர் அதில் சுட்டிக் காட்டியுள்ளார்.

அரச நிறுவனங்களின் தலைவர்மார் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் அடிக்கடி மாற்றம் செய்யப்படுவது குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்கு பலரும் கொண்டுசென்றதையடுத்தே ஜனாதிபதி செயலாளரின் இந்தப் பணிப்புரை வந்திருப்பதாக சொல்லப்பட்டது.

## எரிபொருள் ...

பெசில் ராஜபக்ஷ நாடாளுமன்றத்திற்கு வருகைதந்தால் எரிபொருள் விலை குறைவடையும் என கூறியவரிடமே இது குறித்து கேட்க வேண்டும். ஆனால், எரிபொருள் விலை தொடர்பில் நாங்கள் மிகவும் வருந்துகின்றோம். இந்நிலையில், இதனைத் தீர்ப்பதற்கு பெசில் ராஜபக்ஷ வருவாரா அல்லது வேறொருவர் வருவாரா என்பதற்கப்பால், எரிபொருள் பிரச்சினை தொடர்பாக நாங்கள் மிகவும் வருத்தமடைகின்றோம்.

ஆகவே, எங்களுக்குக் கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே எரிபொருள் விலையை குறைப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். இதனைச் செய்வதற்கு யாரும் வரும்வரை நாங்கள் காத்திருக்கவேண்டியதில்லை. இது தொடர்பாக அமைச்சரவையில் முடிவுகள் எடுக்கப்பட்டிருந்தால் அதன் முழுப் பொறுப்பையும் நான் ஏற்றுக்கொள்வேன்.

மாறாக, வெளியில் கூறும் கருத்துகளுக்கு பொறுப்பேற்க முடியாது. எனினும், எரிபொருள் விலை விடயத்தில் நாங்கள் அனைவரும் வருந்துகின்றோம். இது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை முன்னெடுப்போம். மக்களின் வாழ்வாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் அதனைத் தடுப்பதற்கு முன்னெடுக்கும் நடவடிக்கைகளை முதல் சந்தர்ப்பத்திலேயே எடுப்போம் - என்றார்.

## வளைகுடா...

இதற்கமைய, ஜூலை மாதம் முதலாம் திகதி நள்ளிரவிலிருந்து ஜூலை மாதம் 13ஆம் திகதி நள்ளிரவு 12 மணிவரை குறித்த நாடுகளிலிருந்து எந்தவொரு நபரும் இலங்கைக்குள் பிரவேசிக்க முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இலங்கையூடாக வேறு நாடுகளுக்கு பயணிக்கும் குறித்த மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு இந்தக் கட்டுப்பாடு பொருந்தாது என சிவில் விமான சேவைகள் அதிகாரசபை மேலும் தெரிவித்தது.

## கால்பந்து சம்மேளன...

மேல், வடமேல், தென் ஆகிய மாகாணங்களுக்குட்பட்ட லீக் பிரதிநிதிகள் காலி சர்வதேச கிரிக்கெட் விளையாட்டரங்கில் தங்களுடைய வாக்குகளை பதிவுசெய்யவுள்ளனர்.

மத்திய, ஊவா, சப்ரகமுவ ஆகிய மாகாணங்களுக்குட்பட்ட லீக் பிரதிநிதிகள் கண்டி பல்லேகலை சர்வதேச கிரிக்கெட் விளையாட்டரங்கிலும், வடக்கு, கிழக்கு, வடமத்திய மாகாணங்களுக்குட்பட்ட லீக் பிரதிநிதிகள் பொலன்னறுவை பொது விளையாட்டரங்கிலும் தங்களது வாக்குகளை பதிவுசெய்யவுள்ளனர்.

இந்த மூன்று இடங்களிலும் இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் தேர்தல் குழு பிரதிநிதிகள், விளையாட்டுத்துறை அமைச்சின் பிரதிநிதிகள் ஆகியோரின் மேற்பார்வையில் வாக்களிப்பு நடைபெறவுள்ளது.

வாக்கெடுப்பின் பிரதான நிலையமாக காலி அமைந்துள்ளது. அங்கு தேர்தல் குழுவின் தலைவர் நீதியரசர் ரோஹினி மாரசிங்க கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதுடன், மற்றைய இரண்டு நிலையங்களிலிருந்தும் முடிவுகளைப் பெற்று ஒட்டுமொத்த தேர்தல் முடிவை உத்தியோகபூர்வமாக அறிவிப்பார்.

குறித்த தேர்தலில் தற்போதைய செயலாளர் நாயகம் ஜஸ்வர் உமர் தலைமையிலான குழுவினரும், களுத்துறை லீக் தலைவர் மணில் பெர்னாண்டோ தலைமையிலான குழுவினரும் போட்டியிடுகின்றனர்.

## டெல்ட்டா திரிபு...

எச்சரிக்கை விடுத்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

நாட்டின் கொவிட் தொற்று குறித்து நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் பரவிய அல்பா திரிபினால் 60 வயதிற்கு மேற்பட்டவர்களே அதிக எண்ணிக்கையில் உயிரிழந்துள்ளனர். இதன் காரணமாகவே, தடுப்பூசி வழங்கும் திட்டத்தில் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என அரசாங்கம் தீர்மானித்தது. மேலும், இதுவரை 12 கர்ப்பிணிகள் கொவிட் தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, நாட்டில் தற்போது டெல்ட்டா திரிபு பரவும் ஆபத்து அதிகரித்துள்ளது. அறிமுகப்படுத்தியுள்ள சுகாதார விதிமுறைகளை முறையாக கடைப்பிடிக்காவிட்டால் எதிர்வரும் 10 நாட்களில் நாட்டில் டெல்ட்டா திரிபே முக்கிய திரிபாக இருக்கும் என விசேட வைத்திய நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஆகவே, எச்சரிக்கை குறையவில்லை என்பதை மக்கள் கவனத்திற்கொள்ள வேண்டும். மற்றொரு எதிரி நாட்டுக்குள் புகுந்துள்ளதை கவனத்திற்கொண்டு மக்கள் செயற்பட வேண்டும். குறிப்பாக, தேவையற்ற விதத்தில் வீட்டைவிட்டு வெளியேற வேண்டாம். முறையான சுகாதார விதிமுறைகளை கடுமையாக பின்பற்ற வேண்டும். எதிர்வரும் நாட்களில் செயற்படுவதைக்கொண்டே நாட்டின் நிலைமை தீர்மானிக்கப்படும் - என்றார்.

## சீன இராணுவ...

அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

அத்தோடு, திஸ்ஸமஹாராம வாவி அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டிருந்தவர்கள் சீன இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைகத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோது, திஸ்ஸமஹாராம வாவி அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டிருந்தவர்கள் மற்றும் அவர்கள் அணிந்திருந்த ஆடை குறித்து ஊடகவியலாளரினால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய பாதுகாப்பு குறித்து பேசிவிட்டு, திஸ்ஸமஹாராம வாவி அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டிருந்தவர்கள் குறித்து அமைதியாகவும் கண்டுகொள்ளாமலும் இருக்கின்றோம் என்ற கருத்தை முற்றாக நிராகரிக்கின்றோம். உங்களுக்கு கண்டுகொள்ளாமல் இருப்பதுபோன்றிருக்கலாம். ஆனால், தொல்பொருள் சட்டம் மீறப்பட்டுள்ளதென்றால் நாட்டில் சட்ட கட்டமைப்பொன்று உள்ளது. நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் சாதாரண ஒரு விடயத்திற்கு கூட நீதிமன்றத்திற்கு செல்லும் நிலைமை காணப்படுகிறது. எனவே, நாட்டில் இயங்குகின்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சுயாதீன அமைப்புகள் இதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்திருக்கலாம்.

இதேவேளை, இது தொடர்பில் இராணுவத்தினராலும் புலனாய்வுப் பிரிவினராலும் முழுமையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆனால், பல பாதுகாப்புப் பிரிவினர் இவ்வாறான ஆடைகளை அணிந்துகொண்டு கடமையில் ஈடுபடுகின்றனர். குறிப்பாக, கடற்படையினருக்குச் சொந்தமான ஆடையை போன்ற ஆடைகளையும் அணிந்துகொண்டு பணியாற்றும் நிறுவனங்களும் இருக்கின்றன.

ஆகவே, இந்த விடயத்தில் ஒருசில தரப்பினர் ஏதேனுமொன்றை தேட முயற்சிக்கின்றனர்.

எனினும், சிலர் கூறுவதைபோன்று தொல்பொருளியல் சட்டம் முழுமையாக மீறப்பட்டிருக்கிறதென்றால் 24 மணித்தியாலங்களுக்குள் சட்ட நடவடிக்கை எடுத்திருக்க முடியும். அதற்கு தேவையான அனைத்து சந்தர்ப்பங்களும் இருக்கின்றன.

இது தொடர்பில் அரசாங்கம் என்ற ரீதியில் நாமும் முழுமையான விசாரணைகளை முன்னெடுத்துள்ளோம். அதன்படி அந்த நிறுவனத்தாலும் எங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதன்படி, அது அந்த நிறுவனத்திற்குச் சொந்தமான ஆடையாகும். ஆகவே, இதுவரை முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் அவர்கள் அணிந்திருந்தது இராணுவ சீருடை அல்ல என்றும் சாதாரண ஆடை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த ஆடையை அணிய முடியும் என்று குற்ற விசாரணைப் பிரிவும், இராணுவ புலனாய்வுப் பிரிவும் அறிவித்துள்ளது. இந்த ஆடையை அணிந்திருந்தவர்கள் சீன இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல – என்றார்.

## பெசிலின் நியமனம்...

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோது, பெசில் ராஜபக்ஷவின் நாடாளுமன்ற வருகை குறித்து ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பெசில் ராஜபக்ஷவின் நாடாளுமன்ற வருகை, எவ்வாறு நாடாளுமன்றத்திற்கு வருகை தரமுடியும், அவருக்கு என்ன பதவிகள் வழங்கப்படும் என்பன முற்றுமுழுதாக கட்சியின் உள்ளக விவகாரமாகும்.

இந்த விடயம் தொடர்பில் கட்சி மட்டத்தில் இறுதித் தீர்மானங்களை எடுத்து அதனை மக்களுக்கு அறிவிப்போம். இந்த விடயம் குறித்து தற்போது பெரிதும் பேசப்படுகின்றது. குறிப்பாக, மக்கள் மத்தியில் இது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு காணப்பட்டாலும், கட்சி ரீதியில் ஸ்திரமான தீர்மானத்தை எடுத்த பின்னரே அது உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்.

பெசில் ராஜபக்ஷவுக்கு நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு பொறுப்பு வழங்கப்படவிருப்பதாக பத்திரிகைகளில் குறிப்பிடப்படும் விடயங்களைக்கொண்டு கேள்வி எழுப்புவது பொருத்தமான விடயமல்ல. இந்தக் கேள்வியை நீங்கள் என்னிடம் கேட்கவும் உரிமை இல்லை.

இந்த விடயம் முற்றுமுழுதாக கட்சியின் உள்ளக விவகாரமாகும். எந்த அமைச்சு பதவியை யாருக்கு வழங்க வேண்டும் என ஜனாதிபதியே தீர்மானிப்பார். எனினும், இவற்றை முன்னெடுப்பதற்கு முன்னர் முடிவுகள் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இதுவரை அவ்வாறான முடிவுகள் எடுக்கப்படவே இல்லை.

இதேவேளை, பெசில் ராஜபக்ஷவின் நாடாளுமன்ற பிரவேசம் அல்லது அமைச்சர் பதவிப்பிரமாணம் குறித்து அரசாங்கம் என்ற ரீதியில் எந்தவித தீர்மானத்தையும் இதுவரை எடுக்கவில்லை. அதேபோன்று, அமைச்சரவையில் மாற்றங்களை மேற்கொள்வது ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரமாகும். அவ்வாறு மாற்றங்கள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டிருந்தால் அது குறித்து ஜனாதிபதி எமக்கு அறிவிப்பார் - என்றார்.

## அத்தியாவசிய...

கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அத்தியாவசிய உணவுப் பொருட்கள் தொடர்பாக அமைச்சரவையில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. குறிப்பாக, தட்டுப்பாடுகள் ஏற்படுகின்றனவா என்பது குறித்து அதிகம் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. நாட்டில் கையிருப்பில் இருக்கவேண்டிய தொகை குறித்து முக்கிய அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. நாட்டில் அந்நிய செலாவணி இருப்பு தொடர்பான பிரச்சினை இல்லையென்று கூற முடியாது. எனினும், இது தொடர்பில் நாம் கடும் அவதானத்துடன் செயற்படுகின்றோம். ஜூலை 26ஆம் திகதிக்குள் சுமார் ஒரு பில்லியன் டொலர் கடன் மீள செலுத்தவேண்டியுள்ளது. தற்போது நாட்டில் நான்கரை பில்லியன் டொலர் அந்நிய செலாவணி இருப்பே காணப்படுகிறது. இது குறித்து நாங்கள் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி, இதனைத் தீர்ப்பதற்கு முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அதிகம் கவனம் செலுத்தி வருகின்றோம்.

இதேவேளை, அத்தியாசிய உணவு தட்டுப்பாடு ஏற்படும் சிகப்பு எச்சரிக்கையில் நாங்கள் இல்லை. அதனை நாங்கள் கவனத்திற்கொள்ளாமலும் இல்லை. நாட்டில் மூன்று மாதங்களுக்கு தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் கையிருப்பில் இருக்கின்றன. எனினும், இதனை முறையாக முன்னெடுத்துச்செல்வது பெரும் சவாலாகும்.

எங்களுக்கு வருமானம் ஈட்டித்தரும் துறைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக அந்நிய செலாவணி. உதாரணமாக ஆடை தொழிற்துறையில் 23 வீதம் அந்நிய செலாவணி கிடைக்கப்பெறுகிறது. வெளிநாடுகளிலுள்ள இலங்கை பணியாளர்கள் ஊடாக 65 வீத அந்நிய செலாவணி கிடைக்கப்பெறுகிறது. ஆனால், பெற்றோலியம், அத்தியாவசிய பொருட்கள் உள்ளிட்ட தேவைகளும் காணப்படுகின்றன. ஆனால், அத்தியாவசிய உணவுப் பொருட்கள் தட்டுப்பாட்டில் நாங்கள் சிவப்பு எச்சரிக்கைக்கு வரவில்லை. அந்த நிலைமைக்கு வராதிருப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துகின்றோம். குறிப்பாக, தட்டுப்பாடுகள் ஏற்படாதவாறு அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றோம்.

உணவு பாதுகாப்பு தொடர்பான வேலைத் திட்டங்களையும் சர்வதேச ரீதியில் முன்னெடுத்துள்ளோம். இதற்கான நிதி தேவை தொடர்பிலும் தொடர்ந்தும் அவதானம் செலுத்தி வருகின்றோம். அதற்கமைய உணவு பற்றாக்குறை ஏற்படும் நிலைமை ஏற்படாமல் தடுப்பதற்கான சவாலை ஏற்று செயற்படுகின்றோம் - என்றார்.

# புதிய வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க ஈரானிய தூதுவர் இணக்கம்





இலங்கைக்கான ஈரானிய தூதுவர் அயோப் எய்தாரிக்கும் சூரியசக்தி, காற்று மற்றும் நீர் மின்னுற்பத்தி கருத்திட்ட இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றது.

இதன்போது புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறையின் வளர்ச்சி தொடர்பில் இரு தரப்பினருக்குமிடையில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும், பல்வேறு வேலைத்திட்டங்களை இலங்கையில் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் தூதுவர் இராஜாங்க அமைச்சரிடம் சுட்டிக்காட்டியுள்ளர். இந்த கலந்துரையாடலில் இராஜாங்க அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட தூதரகத்தின் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

# சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 30 இலட்சம் ரூபா பெறுமதியான நெய் சுங்கப்பிரிவினரால் மீட்பு

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 30 இலட்சம் ரூபா பெறுமதியான 1500 கிலோ நிறையுடைய நெய், சுங்கப்பிரிவு மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அதிகாரிகளினால் நேற்று கைப்பற்றப்பட்டதாக சுங்கப்பிரிவின் ஊடகப் பேச்சாளர் பிரதி சுங்கப் பணிப்பாளர் சுதந்த சில்வா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

வேறு திரவங்களின் பெயர்களை குறிப்பிட்டு இந்தியாவின் பட்டுப்பள்ளி துறைமுகத்திலிருந்து இந்த நெய் தொகை இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. 20 அடி உயரமான கொள்கலனொன்றில் தீப எண்ணெய் என குறிப்பிட்டு 100 கேன்களில் மிகவும் சூட்சுமமான முறையில் இந்த நெய் தொகை மறைத்து வைக்கப்பட்டிருந்தது,

இந்த நெய்த் தொகையின் சந்தைப் பெறுமதி 28 இலட்சத்து 42 ஆயிரத்து 500 ரூபா என்பதுடன்,



அந்தக் கொள்கலன் சுங்கப்பிரிவினரால் விடுவிக்கப்பட்டிருக்குமாயின் அரசுக்கு 13 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா நஷ்டம் ஏற்படும்.

கொழும்பு-13 பிரதேசத்தைச் சேர்ந்த வியாபாரியொருவரினால் முன்வைக்கப்பட்ட சுங்கக்குறிப்பேட்டில் குறித்த கொள்கலனில் 120 கிலோ ஓடிஸ், 2500 கிலோ பூஜைக்கு பயன்படுத்தபடும் தூள் மற்றும் 1600 தீபமேற்றும் எண்ணெய் கேன்கள் என்பன இருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. இந்நிலையில், அந்த கொள்கலனை ஒருகொடவத்தை சுங்கப்பிரிவின் ஆர்.சி.டி. கொள்கலன் பரிசோதனை பிரிவில் பரிசோதனைக்குட்படுத்திய போதே இந்த நெய் தொகை கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் வியாபாரியொருவரினூடாக உள்நாட்டு வியாபாரியொருவர் இந்த பொருட்களை பெற்றுக்கொண்டுள்ளதுடன், இதுதொடர்பிலான மேலதிக விசாரணைகளை சுங்கப் பிரிவின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவு முன்னெடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# கொழும்பு - கம்பஹா மாவட்டங்களில் மேலும் சில பிரதேசங்கள் முடக்கம்

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களின் இரண்டு கிராமசேவையாளர் பிரிவுகள் நேற்று (29) காலை 06 மணி முதல் தனிமைப்படுத்தப்பட்டதாக இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், இதற்கமைய, கொழும்பு மாவட்டத்தின் கொலன்னாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிங்கபுர கிராம சேவையாளர் பிரிவின் சங்ஹிந்த செவன தவிர்ந்த ஏனைய பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. கம்பஹா மாவட்டத்தின் களனி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்பொரளை 100 ஆம் இலக்கத் தோட்டம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, நுவரெலியா, கம்பஹா, காலி, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் 11 பகுதிகள் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பொலிஸ் பிரிவின் புதிய வளத்தாப்பிட்டி கிராமம், மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவின், மீராவோடை கிழக்கு 207, மீராவோடை மேற்கு 207 டீ, மாஞ்சோலை பதுரிய 207 டீ கிராமசேவகர் பிரிவு ஆகியன தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

நுவரெலியா மாவட்டத்தின் கொத்மலை களுதமத, ஹப்புகஸ்தலாவ, வீரபுர மற்றும் கீழ் கொறக்க ஓய கிராமசேவையாளர் பிரிவுகளும், பியகம பொலிஸ் பிரிவின் சில பகுதிகளும் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

# நாட்டில் மேலும் 1,320 பேருக்கு கொரோனா

**நாட்டில் நேற்று மேலும் ஆயிரத்து 320 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.**

**இவர்கள் அனைவரும் புதுவருட கொவிட் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,**

**இந்நாட்டு மொத்த கொவிட் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 256,828 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 2 இலட்சத்து 23 ஆயிரத்து 471 பேர் பூரணமாக குணமடைந்து வைத்தியசாலைகளிலிருந்து வெளியேறியுள்ளனர்.**

**மேலும் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 2 ஆயிரத்து 985 ஆக அதிகரித்துள்ளது.**

# வருட இறுதிக்குள் 1500 கி.மீ. நீளமுடைய யானை வேலிகளை நிர்மாணிக்க நடவடிக்கை

## தேவையான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் ரத்நாயக்க தெரிவிப்பு

நாட்டில் இந்த வருடத்துக்குள் 150 கிலோ மீற்றர் நீளமுடைய யானை வேலிகளை நிர்மாணிக்கும் பணிகள் முடிவடையுமென வனஜீவராசிகள் மற்றும் காட்டு வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் சீ.பி.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

தற்போது வரையில் இந்த வேலிகளை நிர்மாணிப்பதற்கான பொருட்களை கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன. அனுராதபும், பொலன்னறுவை, ஹம்பாந்தோட்டை, புத்தளம் உள்ளிட்ட பிரதேசங்களில் இந்த வேலிகளை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த வேலியில் 1000 கிலோ மீற்றரை இராணுவத்தனரின் உதவியுடன் நிர்மாணிக்கவும், 500 கிலோ மீற்றரை தனியார் பிரிவுகளினூடாக நிர்மாணிக்கவும் நடவடிக்கை



எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நிர்மாணிக்கப்படவுள்ள வேலிகளைச் சுற்றி சேனைப் பயிர்ச்செய்கை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கமைய 50 மில்லியன் சேனைப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளோம். தேவையானளவு பயிர்களை மக்களிடம் விலைமனுக்கோரலுக்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

அந்த பாரியளவான நிலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் சேனைப் பயிர்கள் உள்ளூர் கைவினைப்பொருள் தயாரிப்புக்கு பயன்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படும். நாளொன்றுக்கு 2 கிலோமீற்றர் தூரத்துக்கு பயிரிடவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அதேபோன்று வேலிகள் உள்ளிட்ட அந்த பிரதேசத்திலுள்ள மக்களின் தொழிலாக தேனீ வளர்க்கும் தொழிலை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாவும், அதற்காக பிரதேச மக்களிடையே தேனீகள் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பல்கலைக்கழக மாணவர்களுக்கு கொவிட் தடுப்பூசி வழங்க கோரிக்கை

பல்கலைக்கழக மாணவர்கள் அனைவருக்கும் கொரோனா தடுப்பூசியை பெற்றுக் கொடுக்குமாறு உபவேந்தர்கள், கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

கல்வி அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, பல்கலைக்கழக கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கும் கொரோனா தடுப்பூசியை பெற்றுக்கொடுக்க வேண்டும் என உபவேந்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# குற்றம் தவிர்

## ஹெரோயினுடன் ஒருவர் கைது – மட்டக்குளிய

கொழும்பு வடக்கு, குற்றவியல் தடுப்புப் பிரிவினால் நேற்று முன்தினம் இரவு 9.15 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, மட்டக்குளிய பொலிஸ் பிரிவு ஷாந்த மரியா உருவச்சிலைக்கு அருகில் ஒரு கிலோ 71 கிராம் 890 மில்லிகிராம் ஹெரோயின், 2 இலட்சத்து 89 ஆயிரம் ரூபா மற்றும் இரு தொலைபேசிகளுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மட்டக்குளி பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## ஹெரோயினுடன் ஒருவர் கைது – கல்கிஸை

கல்கிஸை பொலிஸாரால் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 50 கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இரத்மலானை பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## ஹெரோயினுடன் ஒருவர் கைது – கிராண்ட்பாஸ்

கிராண்ட்பாஸ் பொலிஸாரினால் நேற்று முன்தினம் மாலை 4.35 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 18 கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மாதம்பிட்டிய வீதி, கொழும்பு-14 ஐச் சேர்ந்த 54 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## ஹெரோயினுடன் ஒருவர் கைது – காலி

காலி பொலிஸாரினால் நேற்று முன்தினம் பிற்பகல் 12.50 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 5 கிராம் 170 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்டவர் கராப்பிட்டிய பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கார் ஒன்றிலிருந்த பெண்ணின் தங்க ஆபரணங்கள் உள்ளிட்ட சில பொருட்களைத் திருடிய சம்பவத்தின் முக்கிய சந்தேகநபர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

காலி பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## ஹெரோயினுடன் ஒருவர் கைது – கிராண்ட்பாஸ்

கிராண்ட்பாஸ் பொலிஸாரினால் நேற்று முன்தினம் மாலை 4.10 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 4 கிராம் 834 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வெல்லம்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, கிராண்ட்பாஸ் பொலிஸாரினால் நேற்று முன்தினம் இரவு 8.50 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 3 கிராம் 650 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புளுமண்டல் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## வாகன விபத்து – மாஹவெல

மாஹவெல பொலிஸ் பிரிவில் மாத்தளை, கலேவெல வீதி, அகுரம்பட பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் கலேவெல நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டையிழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்தில் சிக்குண்ட மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அகுரம்பட பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

## வாகன விபத்து – கெபித்திகொல்லேவ

கெபித்திகொல்லேவ பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் காலை 7.30 மணியளவில் இஹளஉஸ்கொல்லேவ பகுதியிலிருந்து கெபிதிகொல்லேவ பகுதியை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளொன்று பாதையில் பயணித்த ஒருவரை மோதுண்டு இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த பாதசாரி மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் ஆகியோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் பாதசாரி உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கெபிதிகொல்லேவ பகுதியைச் சேர்ந்த 53 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

## வாகன விபத்து – பிங்கிரிய

பிங்கிரிய பொலிஸ் பிரிவில் குருநாகல் – சிலாபம் வீதியில் நேற்று முன்தினம் முற்பகல் 11.30 மணியளவில் குருநாகலை நோக்கிச் சென்ற லொறி, எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேருக்கு மோதி இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டபோது, உயிரிழந்துள்ளார்.

பிங்கிரிய பகுதியைச் சேர்ந்த 59 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

## வாகன விபத்து – வலப்பனை

வலப்பனை பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் கலகன்வத்த நோக்கிச் பயணித்த மோட்டார் சைக்கிள் பெண்ணொவரை மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டர் சைக்கிள் ஓட்டுநர் மற்றும் குறித்த பெண் ஆகியோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக நுவரெலிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட போது, குறித்த பெண் உயிரிழந்துள்ளார்.

கலகன்வத்த பகுதியைச் சேர்ந்த 72 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

## வாகன விபத்து – கம்பஹா

கம்பஹா பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் மாலை 5.15 மணியளவில் உக்கல்கொடை பகுதியிலிருந்து யாகொடமுல்லை பகுதியை நோக்கி பயணித்த மண் ஏற்றும் லொறி ஒன்று முன்னே சென்ற பாதசாரி ஒருவர் மீது மோதுண்டதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

இவ்விபத்தில் படுகாயமடைந்த பாதசாரி கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கம்பஹாவைச் சேர்ந்த 58 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

## வாகன விபத்து – மீகஹவத்த

மீகஹவத்த பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் இரவு 9.15 மணியளவில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் ஒன்று பாதையில் சென்ற ஒருவர் மீது மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த பாதசாரி மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் ஆகியோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி பாதையில் பயணித்த பாதசாரி உயிரிழந்துள்ளார்.

தெமலகம பகுதியைச் சேர்ந்த 61 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

## வாகன விபத்து – மாலிம்பட

மாலிம்பட பொலிஸ் பிரிவில் மாத்தளை அக்குரஸ்ஸ வீதியில் நேற்று முன்தினம் இரவு 7.15 மணியளவில் மாத்தறை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வலது பக்கத்திற்கு திருப்பும்போது, கெப் வாகனத்துடன் மோதுண்டதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் மாத்தறை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட போது, உயிரிழந்துள்ளார்.

பாலடுவ பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

## வாகன விபத்து – மஹியங்கனை

மஹியங்கனை பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் இரவு 8.45 மணியளவில் திக்கேந்தயாய பகுதியிலிருந்து திஸ்ஸபுர பகுதி நோக்கிப் பயணித்த லொறி மற்றும் எதிரே வந்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மஹியங்கனை பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

## ரயில் மோதி விபத்து – பல்லெவெல

பல்லெவெல பொலிஸ் பிரிவில் கொழும்பிலிருந்து குருநாகல் நோக்கி பயணித்த ரயிலில் கனேகொடை புகையிரத நிலைத்திற்கு அருகில் ஒருவர் மோதுண்டதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் 72 வயதுடைய வெயான்கொடை பகுதியைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தொகுப்பு : யோ. தர்மராஜ்

தமிழன்
THAMILAN தமிழன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2021, ஜுன் 30ஆம் திகதி, புதன்கிழமை

# இணையவழி கல்வியின் நன்மையை பார்ப்போம்!

நாட்டின் அனைத்து மாணவர்களுக்கும் ஒன்லைன் கல்வி சம அளவில் கிடைக்காமையால் மாணவர்களின் உரிமைகள் மீறப்படுவதாக தெரிவித்து இலங்கை ஆசிரியர் சங்கம், மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ உள்ளிட்ட சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அனுராதபுரம் அலுவலகத்தில் இந்த முறைப்பாட்டை மேற் கொண்டுள்ளனர்.

இரண்டு வருடங்களாக மாணவர்கள் கல்வியை தொடர்வதற்கான சந்தர்ப்பம் அற்றுப்போனமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளு மாறு இலங்கை ஆசிரியர் சங்கம் தனது முறைப்பாட்டில் வேண்டுகோள் விடுத்துள்ளது. இணையவழி கற்றல் குறித்து விமர்சனங்கள் இல்லாமல் இல்லை. ஆனால், பொதுவாக எல்லாவற்றையும்போல் அதில் நல்ல பக்கமும், கூடாத பக்கமும் உள்ளன. அவற்றை சீர்தூக்கி நோக்கவேண்டி யிருக்கிறது.

இணையவழி கல்விக்கு மடிக்கணினி (Laptop) அல்லது இணைய இணைப்பு கொண்ட திறன் கைபேசிகள் (Smartphone) மட்டுமே தேவைப் படுவதால், மாணவர்கள் எந்த நேரத்திலும் எங்கும் கற்றுக்கொள்ள முடியும். அவர்கள் வார இறுதி நாட்களிலோ அல்லது ஓய்வுநேரத்திலோ கற்றுக்கொள்ளலாம். அனைத்து பாட விடயங்களும் மாணவர்களின் விரல் நுனியில் எளிதாகக் கிடைக்கும். வழக்கமான கல்வி பாடநெறியை முடிப்பதைவிட இணையவழி கல்வி மிகவும் செலவு குறைந்ததாகும். வழக்கமான பல்கலைக்கழக பட்டம் பெறமுடியாத மாணவர்களுக்கு தங்கள் கனவை நிறைவேற்ற இது உதவுகிறது.

ஒவ்வொருவரும் வேறுவேறு வேகத்தில் கற்றுக்கொள்கிறார்கள். ஒரு வகுப்பறையில் அனைத்து மாணவர்களும் ஒன்றாக பாடத்தைப் பின்பற்று வது கடினமாக இருக்கலாம். இது பாரம்பரிய கல்வியின் தீமை. ஆனால், இணையவழி கல்வி இந்தச் சிக்கலை தீர்க்கிறது. இணையவழி கல்வியில் அனைத்து பாட விடயங்களும் முன்பே வழங்கப்படுகின்றன, மேலும் மாணவர்கள் தங்களுக்குத் தேவையான நேரத்தை எடுத்துக்கொள்வதன் மூலம் கற்றுக்கொள்கிறார்கள். நேரடி அரட்டைகள் (Chat) அல்லது மன்றங்கள் (Forums) மூலமாகவும் அவர்கள் தங்கள் ஐயங்களைத் தெளிவுபடுத்தலாம்.

அதேபோல் இணையவழி கற்றலால் தீமைகளும் இல்லாமலில்லை. கவனச்சிதறல் வாய்ப்புகள் மிக அதிகம். சாதாரண வகுப்பறையில் மாணவர் களின் கவனத்தை ஈர்த்தே ஆசிரியர் கற்பிக்கவேண்டும். அல்லது அவர் கள் தமக்குள் கதைத்தல் அல்லது கவனக்குறைவாக இருப்பர். இணைய வழியில் கற்பிக்கும்போது மாணவர்களின் கவனச்சிதறலுக்கான வாய்ப்பு அதிகம். ஆசிரியரும் கற்பிக்க பயன்படுத்தும் மென்பொருள்பற்றி பூரண அறிவினைப் பெற்றிருப்பது அவசியம். கற்பிப்பதைக் கவனிக்காமல் மாண வர்கள் தங்களுக்குள் அரட்டையடித்தல், தேவையற்ற விதத்தில் தமது திரையை பகிர்தல் (Screen sharing), ஆசிரியர் கற்பிக்கும்போது நித்திரை கொள்தல் அல்லது இணைத்துவிட்டு எங்காவது செல்வது, கணினி விளையாட்டுகளில் ஈடுபடுவது என பல்வேறு சம்பவங்களைக் கேள்விப் படுகிறோம். இவை சாதாரண வகுப்பறைகளிலும் நடைபெறுவனதான். ஆனால், அந்த குழப்படியின் வடிவம் வேறு. இங்கு மாற்றம் தேவைப் படுவது கல்வி முறையில் அல்ல, முக்கியமாக மாணவர்களின் நடத்தை யில்தான்.

பாட விடயங்களை மாணவர்கள் தேடி கற்கவேண்டும், ஆசிரியர் அதற்குத் தூண்டுதலாக இருக்கவேண்டும் என்பதுதான் பொதுவான மற் றும் காலங்காலமாக இருந்துவரும் நடைமுறை. ஆனால், இப்போது மாணவர்களைச் சிந்திக்கவிடாமல் முழுநேரமும் கற்பிக்கும்போது இதெல் லாம் எதிர்பார்க்கவேண்டியதொன்றாகத்தான் மாறுகிறது. மாணவர்களுக்கு கல்வியில் விருப்பத்தை உண்டாக்கி அவர்களைச் செயற்படவைத்து வழிகாட்டும் கல்விமுறையிலிருந்து விலகியது யார் குற்றம்? அது இணையவழிக் கல்விமுறையின் குற்றமில்லை. இணையவழி கல்வி சுயசிந்தனையுடன் தேடும் மாணவர்களுக்கு ஒரு கொடையாகவே அமைகிறது.

வறுமையின் பிடியிலிருக்கும் குழந்தைகளுக்கு இதெல்லாம் எட்டாத கனி என்கிறார்கள். ஆனால், தேவையற்ற விதத்தில் செலவு செய்யாத வறிய குடும்பங்களின் பெற்றோர்கள் இணையவழிக் கல்வியை ஒரு வாய்ப்பாகவே பயன்படுத்துகிறார்கள். பிள்ளைகளை கண்காணிக் கிறார்கள். பிள்ளைகளின் எதிர்காலமே தங்கள் கனவு என பிள்ளைக்கு ஒரு தோழனாக வழிகாட்டுகிறார்கள்.

நடுத்தரக் குடும்பங்களில் பிறந்த மாணவர்களிடம் ஓரளவு தொழில்நுட்ப வசதியுள்ள தொலைபேசி காணப்பட்டாலும் அவற்றைப் பயன்படுத்து வதற்கான தொலைபேசிக் கட்டணங்களைச் செலுத்தும் வசதியுடன் பெரும்பாலான குடும்பங்கள் காணப்படுவதில்லை. ஓரளவு வசதியுள்ள மாணவர்கள் இதனைப் பயன்படுத்திக் கற்கின்றனர் என்பதனை அவ தானிக்கக்கூடியதாகவுள்ளது. அதேசமயம் வசதியுள்ள மாணவர்கள் உள்ள குடும்பங்களிலும் ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள் உள்ளபோது ஒன்றுக்கு மேற்பட்ட தொழில்நுட்ப வசதியுள்ள தொலைபேசிகள் தேவை. இதுவும் ஒரு பாதகமான விடயமாகும்.

இது எவ்வாறிருப்பினும், இலங்கையில் இணைய வேகம், நகர, கிராமப் புறங்களுக்கு இடையில் வேறுபாடுகளைக் கொண்டமைந்துள்ளது. சில தொலைத்தொடர்பு நிறுவனங்களின் இணைப்புகள் இலங்கையில் எல்லாப் பிரதேசங்களுக்கும் இன்றும் வழங்கப்படவில்லை என்பதுவும் ஒரு சவாலான விடயமாகும்.

மறுபக்கம், இடர்காலச் சூழலில் மாணவர்கள் தமது குடும்பத் தொழில் களில் ஈடுபடுகின்றமையால் கற்றல் கற்பித்தல் மேலும் ஒரு சவாலாகவே காணப்படுகிறது. இலங்கை கரையோரப் பிரதேசங்களைக் கொண்ட ஒரு விவசாய நாடாக இருப்பதனால், பாடசாலைகள் இயங்காத இடர்காலங்களில் மாணவர்கள் தந்தை மற்றும் உறவினர்களுடன் இணைந்து மீன்பிடி, விவசாயம் போன்றவற்றில் ஈடுபடுவதன் ஊடாக தமது குடும்பங்களின் பொருளாதார உயர்ச்சிக்கு உதவிபுரிகின்றனர். இவர் களை இணையவழிக் கல்வியின்பால் திருப்புதல் சவாலான விடயமாகவே காணப்படுகின்றது. இனிவரும் காலங்களில் பாடசாலை இடைவிலகலும் அதிகரிக்கக்கூடிய சூழல் உருவாகியுள்ளது.

இணையவழிக் கற்றலை மேற்கொள்கின்ற மாணவர்கள் கூடுதலாக தொலைபேசியூடாகவே கற்கின்றனர். தொலைபேசியின் திரை சிறியதாக இருப்பதால் தொடர்ச்சியாக அதனை அவதானிப்பதன் மூலம் கண், காது போன்ற உறுப்புகளில் கோளாறு ஏற்படலாம் என மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர். மாணவர்கள் பெரிய திரைகளையுடைய கணினிகளில் கற்கும் வாய்ப்பு குறைவாகவே காணப்படுகின்றது. இது ஒரு சவாலான விடயமாகும். அத்துடன், மாணவர்கள் இணையத்துக்கு அடிமையாகக் கூடிய சாத்தியமும் காணப்படுகின்றது. இதேவேளை, கடந்த நல்லாட்சி அரசாங்கம் பெரிய திரைகளைக்கொண்ட கணினிகளை மாணவர்களுக்கு இலவசமாக விநியோகிக்க முயற்சி எடுத்தது அரசியல் காரணங்களுக்காக அது கைவிடப்பட்டு இருந்திருக்காவிட்டால் இன்று இணையக்கல்வி அடுத்தகட்டத்திற்கு நகர்ந்திருக்கும் என்பது வெளிப்படையானது.

மாணவர்கள் தொடர்ச்சியாக இணைய இணைப்பை பயன்படுத்துவதன் ஊடாக தேவையற்ற இணையத்தளங்களுக்கு நுழையக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. இதனைத் தடுப்பதற்கான வழிமுறைகள் உள்ளபோதும் பெற்றோருக்கு இவை தொடர்பான தொழில்நுட்ப அறிவு குறைவாகவே இருப்பது இணையம் மூலமான கற்றலில் ஒரு சவாலான விடயமாகும்.

மறுபக்கம், இன்று ஆரம்ப இடைநிலை வகுப்பு மாணவர்களுக்கும் இணையம் மூலமான பரீட்சைகள் நடைபெறுவது அவர்களின் மனநிலையைப் பாதிக்கின்ற விடயமாகும். தொடர்ச்சியாகக் கற்றலில், ஈடுபடாமையினால் பாடத்தை மறந்து விடுவார்கள். எனவேதான் இணைய வழிப் பரீட்சை என்கிறார்கள். கல்வி என்பது மனப்பாடக் கல்வியாக இருப்பதனையே இது குறிக்கின்றது. ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு சூழுலுடன் இணைந்த கற்றலே முக்கியமானது. உண்மைப் பொருட்கள் மற்றும் நேரடி அனுபவங்கள் ஊடாக கற்றல் அனுபவங்களை வழங்குகின்றபோதே ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு எண்ணக்கரு விருத்தி ஏற்படும்.

இன்று இலங்கையில் நடைபெறும் இணையவழி வகுப்புகள் காலநேரம் அற்று காலை 3 மணி தொடக்கம் இரவு 11 மணிவரை நடை பெறுகின்றது. வசதி வாய்ப்புள்ள மாணவர்கள் இதனை பயன்படுத்தும் போது களைப்படைகின்றனர். பொருத்தமான ஆசிரியரை தேர்ந்தெடுப் பதிலும் இடர்படுகின்றனர். அத்துடன், சில பிரபல ஆசிரியர்கள் இதை சாட்டாக வைத்து பெற்றோரின் உழைப்பை சுரண்டுகின்றனர். அதே வேளை, தேசிய கல்வி நிறுவகம், மாகாண கல்வித் திணைக்களங்கள், வலயக்கல்வி அலுவலகங்கள் போன்ற அரச நிறுவனங்கள் தமக்குள் ஓர் இணைந்த நேர அட்டவணையின்றி சமநேரத்தில் இணையவழி வகுப் புகளை நடத்துவதால் மாணவர்கள் எந்த வகுப்பில் கலந்து கற்பது என் பதில் இடர்படுகின்றனர். அத்தோடு அரச நிதியும் வீண்விரயம் செய்யப் படுகின்றது.

அடுத்ததாக, ஆசிரியர் சார்ந்த சவால்களை நோக்குகின்றபோது இன்றைய ஆசிரியர்கள் பலர் நவீன தொழில்நுட்பம் சார்ந்த அறிவு குறைந்த வர்களாகக் காணப்படுகின்றனர். இது இணையவழிக் கல்வியின் ஒரு சவாலாக காணப்படுகின்றது. ஓர் ஆசிரியர் ஒவ்வொரு நாளும் தங்களைப் புதுப்பித்துக் கொள்ளவேண்டும். ஏனெனில், கற்கும் மாணவர்கள் வேகத் துடன் இருக்கின்றனர். நவீன தொழில்நுட்பங்களை வேகமாக உள்வாங்கிக் கொள்கின்றனர். எனவே, ஆசிரியர் அதே வேகத்துடன் ஓடியாக வேண்டும் ஆசிரியர் மட்டுமல்ல, ஏனைய தொழில்துறையினரும் அதே வேகத்துடன் ஓடவேண்டும். ஆனால், பெரும்பாலான ஆசிரியர்கள் இணையவழி மூலம் தமது மாணவர்களுக்கு கல்வியை கற்கும்போது தமது சொந்த பணத்தை செலவிட்டு இணையக் கல்வியை வழங்குவதை இங்கு மறந்து விடமுடியாது. அதை பாராட்டியாக வேண்டும்.

கொரோனா பரவல் காரணமாக பாடசாலை மாணவர்களுக்கு தான் படித்த பாடசாலைகள்கூட மறந்துபோகும் அளவுக்குத்தான் நிலைமை உள்ளது. பாடசாலைகள், கல்லூரிகள் தொடர்ந்து மூடப்பட்டுள்ளதால், மாணவர்கள் மகிழ்ச்சியாக இல்லை. இப்படியொரு நெடிய விடுமுறையை அவர்கள் அனுபவித்ததிலை என்பதால், அவர்களுக்கு இது புதுமையாகத் தான் இருக்கிறது.

உண்மையில், முந்தைய காலத்தை விட இப்போதுதான் மாணவர்களுக்கு கல்வியின் அருமை, பாடசாலையின் பெருமை தெரிய துவங்கியுள்ளது. கற்றலில் ஆர்வம் அதிகரித்துள்ளது. அதனால், பாடசாலைகள் திறந்த பின் பிள்ளைகள் எப்படி படிப்பார்களோ என்ற பீதி பெற்றோருக்கு வேண் டாம். அவர்கள் நன்றாக படிப்பர்.

பஞ்சபாண்டவர்கள் 12 ஆண்டுகள் வனவாசம் அனுபவித்ததால், அவர்கள் தங்கள் பலத்தை இழந்துவிடவில்லை. அவர்கள் தங்கள் பலத்தை முழுவதும் அந்த காலத்தில் உணர்ந்துகொண்டனர்; பலவீனத் தையும் அறிந்துகொண்டனர். அதுபோல் நம் பிள்ளைகளுக்கும் இந்தக் காலம் பல படிப்பினைகளை கொடுத்துள்ளது. இணையவழி கல்வியில் நல்ல பக்கங்களை மட்டும் பார்ப்போமே.

# மனிதர்களைப் படிப்போம்!



அன்றாட வாழ்வில் நாம் எண்ணற்ற மனிதர்களை சந்திக்கிறோம். பலருடன் உரையாடுகிறோம், சேர்ந்து பணியாற்றுகிறோம். அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு உணர்வு, தனித்தனி வாழ்க்கைப் பாதை அமைந்திருக்கின்றது. மனிதர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக விந்தையிலும் விந்தையாக விரிந்து கிடக்கிறார்கள். கொரோனா தீநுண்மியின் மரபு உருமாறிக்கொண்டே இருப்பதுபோல் மனிதர்களுக்குள் இருக்கும் மரபும் அவ்வப்போது மாறிக்கொண்டே இருக்கிறது.

'இவர் இப்படித்தான்' என நாம் யாரையும் வரையறுத்துக் கூறமுடியாது. நாம் பசு என்று நினைப்போம், பசுவல்ல, பசுந்தோல் போர்த்திய புலி என நிரூபித்துவிடுவர் சிலர். ஆட்டுக்கூட்டத்தை எதிர்நோக்கும் சிங்கம் என சிலரை நினைப்போம்; அவர்கள் தந்திரத்தில் நரி என பின்னர் தெரியவரும். ஆனால், எவ்வளவுக்கு எவ்வளவு மக்களை சந்திக்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு நாம் நம் வாழ்க்கைப் பாதையை மேம்படுத்திக் கொள்ளலாம்.

தனக்குக் கீழுள்ளோரைப் பற்றி தெரியாதவன் நல்ல தலைவனாக இருக்கமுடியாது. தன்னிடம் வரும் வாடிக்கையாளர்களின் சிந்தனைகளைக் கணிக்கத் தெரியாதவன் நல்ல வணிகனாக இருக்க முடியாது. தன்னிடம் பயிலும் மாணவர்களைப் புரிந்துகொள்ளாதவர் நல்ல ஆசிரியராக இருக்க முடியாது.

ஒவ்வொரு கிராமத்திலும் ஊர் பெரியவர் என ஒருவர் இருப்பார். அவரிடம் வரும் பஞ்சாயத்துகளை பிணக்கின்றி தீர்த்து வைப்பதை கண்ணென கருதுவார். அவர் பெரிய அறிவாளியாகவோ மெத்த படித்தவராகவோ இருப்பார் என்று கூறமுடியாது. ஆனால், அவர் அந்த ஊர் மனிதர்களைப் படித்திருப்பார்.

அதனால் சம்பந்தப்பட்ட நபர் தவறு செய்திருப்பாரா மாட்டாரா என்பதை அவரால் சீர்தூக்கிப் பார்க்க இயலும். அவரவர் நிறை குறைகளைத் தெரிந்து கொள்வதோடு, அனைத்தையும் சமன் செய்து பார்க்கும் தன்மையும், பரந்த மனப்பான்மையும் அவருக்கு இருக்கும்.

சரி, மனிதர்களை எவ்வாறு படிப்பது? இதற்கென்று வகுப்பு ஏதாவது எடுப்பார்களா எனக் கேட்பவர்களிடம் சொல்ல என்னிடம் ஒரு செய்தி இருக்கிறது. ஆம், மனித நூலகம்தான் அது. கேட்பதற்கு முற்றிலும் புதிது அல்லவா? எண்ணற்ற புத்தகங்களை வாசித்திருக்கிறோம். மனிதர்களை அதுபோல் வாசிப்பது சாத்தியமா? அதனால் ஏற்படும் நன்மைகள் எப்படி இருக்கும்?

சமீபகாலங்களாக இந்தியாவில் பிரபலமாகிவரும் மனித நூலகம் இதற்கு வழிகாட்டுகிறது. இந்த நூலகத்தில் இருப்பவை அனைத்தும் பேசும் புத்தகங்கள். இங்கு மனிதர்களே நூல்கள். அவர்களின் அனுபவங்களும், கூறும் செய்திகளுமே தகவல்கள். அவற்றை வாசகர்கள் நேரில் சென்று கேட்டறிவார்கள்.

நம் சமூகத்தில் புரையோடிப் போயிருக்கும் ஒரு கருத்தை, ஒருவர் மீது மற்றொருவர் சுமத்தியிருக்கும் முத்திரைகளை, அடையாளங்களை, சமூக மதிப்பீடுகளை சம்பந்தப்பட்டவர்களிடமே கேட்டறிந்து அது சரியா? தவறா? என்பதை புரிந்துகொள்ளும் புதுமைதான் இந்த மனித நூலகத்தின் அடிப்படை.

உலகின் முதல் மனித நூலகம், டென்மார்க்கின் கொபன்ஹேகன் நகரத்தில் ரூனி அபர்கெல் என்பவரால் 2000இல் தொடங்கப்பட்டது. அது, இந்தியாவில் தற்போதுதான் அங்கொன்றும் இங்கொன்றுமாக முளைவிடத் தொடங்கியிருக்கிறது. இந்த மனித நூலகம் முற்றிலும் வித்தியாசமானது.

புத்தகங்களை அடுக்கிவைத்திருக்கும் நம் நூலகத்தில் கீழே குண்டூசி விழுந்தால்கூட சத்தம் கேட்க வேண்டும் என்பது விதி. அவ்வளவு அமைதியாக இருக்கும். ஆனால், மனித நூலகத்தில் ஒவ்வொரு மனிதப் புத்தகத்தை சுற்றிலும் ஐந்தாறு இருக்கைகள் போடப்பட்டிருக்கும். அங்கே இடைவிடாத பேச்சு சத்தம் கேட்கும்.

இந்த மனிதப் புத்தகங்கள் என்போர் பல்வேறு ஊர்களிலிருந்து பல்வேறு விதமான அனுபவங்களை பெற்றவர்களாக இருக்கிறார்கள். பிரபலமானவர்கள் மட்டுமல்ல, தம் செறிவான அனுபவங்களை சுவாரஸ்யமாக வெளிப்படுத்தத் தெரிந்த பல சாமான்ய மனிதர்களும் இப்படி மனித நூல்களாக உருமாறியிருக்கிறார்கள். வாசகர்களின் அகம் நிறையும் வண்ணம் இவர்களைத் தேர்ந்தெடுப்பதில் பல கட்ட பரிசீலனைகள் நடைபெறுகின்றன.

இந்நூலகத்தை முன்நின்று நடத்துபவர்கள், பிறருக்குப் பயன்படும் அனுபவங்கள் கொண்டவர்களையே இப்படி மனிதப் புத்தகமாக அனுமதிக் கிறார்கள். திருமணமாகாத 45 வயது பெண்ணாக இருப்பது, மலைநாடுகளில் வாழக்கூடிய மனிதர், வலிப்புநோயிலிருந்து மீண்டவர், தீராத பயண வேட்கை கொண்டவர், தாவரங்களின் காதலர் இப்படி வகை வகையான மனிதர்கள் நமக்கு அங்கே கிடைப்பார்கள்.

அவர்கள் தங்கள் அனுபவங்களை நேர்மையாகப் பகிர்ந்துகொள்பவர்களாக இருப்பார்கள். நாமும் அவர்களிடம் உரையாடலாம். சந்தேகங்களுக்கு தெளிவு பெறலாம். ஒரு மனித நூலுடனான அமர்வு சுமார் அரைமணிநேரம். அதிலும் இரண்டிலிருந்து மூன்று மாதங்களுக்கு ஒரு முறைதான் அமைக்கப்படுகிறது. ஆர்வமுள்ளவர்கள் ஒரேநாளில் 10 முதல் 15 நூல்களை வாசிக்கலாம்.

மனித நூலகத்துக்கான வாசகர்கள் அதிகரித்தவண்ணம் உள்ளார்கள். பாடசாலை, கல்லூரிகளில் இதுபோன்ற நூலகத்தை பிரபலப்படுத்தினால் பாடப்புத்தகங்களையே வாசித்துக் கொண்டிருக்கும் மாணவ மாணவிகளுக்கு மனதுக்கு நெருக்கமான ஒன்றாகவும் புதுமையாகவும் இருக்கும்.

உலகில் கோடானுகோடி மனிதர்கள் வாழ்ந்தாலும் எல்லாருடைய அனுபவங்களும், எல்லாரும் கற்றுக் கொண்ட பாடங்களும் நூல்களாவதில்லை. அதனால் இதுபோன்ற முயற்சிகள் தேடல் உள்ளவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது.

தற்போதைய கொரோனா காலத்தில் அடிபட்டுப்போன பலவற்றுள் மனித நூலகமும் ஒன்று. ஆனால், இது மீண்டும் புத்துயிர் கொள்ளும் என்பதில் ஐயமில்லை. இந்தத் தகவலைப் பகிரும்போது 'கற்றலின் கேட்டலே நன்று' என்னும் பழமொழிதான் நினைவுக்கு வருகிறது. 'நூலறிவைவிட கேட்டறிதலே சிறந்தது' என்னும் கூற்று இன்றைய தகவல் தொழில்நுட்ப உலகில் பொருத்தமானதுதான்.

கற்றலின் கேட்டலே நன்று என்பதை மூலமாகக்கொண்டு இன்று எண்ணற்ற கதைகள் சொல்லிகள் கிளம்பியிருக்கிறார்கள். இணையத்திலும் தனிப்பட்ட இணைப்பிலும் இவர்கள் சொல்லும் கதைகளைக் கேட்க ஒரு கூட்டமே ஆவலாய் காத்திருக்கிறது. வயதானவர்களுக்கும், பார்வை குறைபாடு இருப்பவர்களுக்கும் இது ஒரு வரப்பிரசாத தான்.

***நூல்பயில் இயல்பே நுவலின் வழக்குஅறிதல்***
***பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்***

என்னும் நன்னூல் பாடல் கேட்டலை முன்னிறுத்திச் சொல்கிறது.

அதாவது, வழக்கு இரண்டு வகைப்படும். ஒன்று, உலக வழக்கு. உலகம் இதுவரை எப்படி நினைத்துக்கொண்டிருக்கிறது என்பது ஒரு வழக்கு. இன்னொன்று, படிக்கும் புத்தகம் என்ன சொல்லுகிறதோ அது இரண்டாவது வழக்கு.

புத்தகம் உலக வழக்கோடு ஒத்துப் போகலாம் அல்லது அதை மறுத்து புதிய கருத்தைச் சொல்லலாம். கற்கும் மாணவன் இரண்டையும் அறிய வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

இப்படி சகமனிதர்களைப் படித்து புரிந்துகொள்பவர்களே வாழ்வில் வெற்றியாளர்களாக மாறுகிறார்கள். ஆம், நாம் எதற்கு மனிதர்களை படிக்க வேண்டும்? ஏனெனில், மனிதர்களின் இயல்புகளைப் புரிந்துகொள்வதற்குத்தான். 'துஷ்டனைக் கண்டால் தூர விலகு' என்றனர் நம் முன்னோர். யார் நல்லவர், யார் அல்லவர் எனத் தெரிந்துகொள்ளவே மனிதர்களைப் பற்றிய படிப்பினை நமக்கு அவசியம்.

'இறைவா, நண்பர்களிடமிருந்து என்னைக் காப்பாற்று; எதிரிகளை நான் பார்த்துக்கொள்கிறேன்' என்னும் புகழ் பெற்ற வசனம்தான் எத்துணை உண்மை. முகத்துக்கு முன் சிரித்துப் பேசி முதுகுக்குப் பின் குத்துபவர்கள்தானே இன்று அதிகம்.

போர்க்களத்தில் முன்னோக்கி எதிர்கொள்ள நாம் வினையாற்றிக்கொண்டு இருக்கும்போது, முதுகில் வந்து குத்துபவர் களிடமிருந்து நாம் நம்மை கவனமாக தற்காத்துக்கொள்ள வேண்டும் அல்லவா?

கிராமத்தில் கொம்பேரி மூக்கன் எனும் பாம்பைப் பற்றி வேடிக்கையாக ஒரு கதை சொல்லுவார்கள். தன்னால் கடிக்கப்பட்டவன் உயிரிழந்து சுடுகாட்டில் எரிவதை மரத்தில் இருந்து பார்த்த பிறகே அது அங்கிருந்து செல்லுமாம்.

இது நம் அறிவு ஏற்கமுடியாத விஷயமாக இருந்தாலும் நம்மைச் சுற்றியிருக்கும் மனிதர்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாக, நாம் வேதனைப்படுவதை நின்று வேடிக்கை பார்க்கும் நபர்களாக இருக்கிறார்கள். அதன் பொருட்டே நாம் மனிதர்களைப் பற்றி அதிகம் புரிந்துகொள்ள வேண்டிய தேவை இருக்கிறது. இதனால் வாழ்வில் ஏற்படும் பல சிக்கல்களைத் தவிர்க்கலாம்.

பாடசாலைகளில் தொடர் மதிப்பீடு, முழு மதிப்பீடு என்ற அளவில் கற்றல் - கற்பித்தல் முறை இருப்பது நாம் அறிந்ததே. இதன்மூலம் ஒவ்வொரு மாணவரைப் பற்றியும் அகழ்ந்து பார்த்து அவருக்கான தரம் நிர்ணயிக்க இயலும். மாணவர்களைப் பற்றிய முழுமையான புரிதல் மட்டுமே இதை சாத்தியப்படுத்தும்.

ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்று சொல்லப்படுவதுண்டு. நம் பிள்ளைகள் நிறைய நூலறிவு பெற்றவர் களாக இருந்தால் மட்டும் போதாது. இரத்தமும் சதையுமாய் உலவும் மனிதர் களைப் பற்றியும் அறிந்தவர்களாக இருக்க வேண்டும்.

**பவித்ரா நந்தகுமார்**
**கட்டுரையாளர்**

# அமைச்சரவை தீர்மானங்கள்!

## 2021.06.28 அன்று இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்




**01. மனிதவள அபிவிருத்தி புலமைப் பரிசிலுக்கான ஜப்பான் உதவித்திட்டம் - 2021**

அரச துறையில் நிறைவேற்றுத் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கு ஜப்பானில் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகங்களில் பட்டப்பின் படிப்பை மேற்கொள்வதற்காக ஜப்பான் அரசாங்கத்தால் மனிதவள அபிவிருத்தி புலமைப் பரிசிலுக்கான ஜப்பான் உதவித்திட்டம் 2010ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் இதுவரை 180 பட்டப்பின் படிப்பு வாய்ப்புகள் மற்றும் தத்துவார்த்தவியல் பாடநெறிகள் 08இற்குமான வசதிகள் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளன. 2021 செப்டெம்பர் மாதம் கற்கை நடவடிக்கை களை ஆரம்பிக்கவுள்ள மாணவர் குழுக்களுக்காக 271 மில்லியன் ஜப்பான் யென் (அண்ணளவாக 488 மில்லியன் ரூபா) நிதியுதவியை வழங்குவதற்கு ஜப்பான் அரசாங்கம் உடன்பாடு தெரிவித்துள்ளது. குறித்த புலமைப்பரிசிலைப் பெற்றுக்கொள்வதற்கான பரிமாற்றக் கடிதத்தை ஜப்பான் அரசாங்கத்துடன் கைச்சாத்திடுவதற்கும், குறித்த நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்து வதற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்துடன் (JICA) ஒப்பந்தத்தை எட்டுவதற்காக நிதி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. கொவிட்-19 தொற்று நிலைமையால் பாதிப்புக்குள்ளாகியுள்ள சுற்றுலாத்துறைசார் நிறுவனங்களுக்கு சலுகைகள் வழங்கல்**

கொவிட்-19 தொற்று நிலைமையால் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துவரும் துறைகளில் ஒருசில நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களின் தொழிலை இழக்கச்செய்யாமல் பேணிக் கொண்டுசெல்வதற்காக சலுகை வழங்கும் நோக்கில் தொழில் வழங்குனர்கள், ஊழியர் தொழிற்சங்கப் பிரதிநிதிகள், தொழில் அமைச்சு மற்றும் தொழில் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களை உள்ளடக்கியதாக உருவாக்கப்பட்ட செயலணி மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனைக்காக அமைச்சரவை இதற்கு முன்னர் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய அனைத்து ஊழியர்களுக்கும் பணிபுரிவதற்காக சமமான வாய்ப்புகளை வழங்கல், ஊழியர்கள் வீடுகளில் தங்கியிருக்க வேண்டுமாயின், இறுதியாக செலுத்தப்பட்ட மொத்த மாதாந்தச் சம்பளத்தின் 50 வீதம் அல்லது 14,500 ரூபா தொகையில் அதிக நன்மை கிட்டும் தொகையை வழங்கல் மற்றும் குறித்த சம்பளத்திற்காக தொழில் வழங்குனரால் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குப் பணம் செலுத்தல், உலகளாவிய ரீதியில் சர்வதேச விமானப் பயணங்களுக்கான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருப்பதால், குறிப்பாக, எமது நாட்டில் சுற்றுலாத்துறையை வழக்கமான வகையில் பேணிச்செல்ல இயலாததுடன், குறித்த துறையில் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் சலுகைகளை 2021 ஜூலை மாதம் தொடக்கம் 2021 டிசம்பர் மாதம் இறுதிவரைக்கும் மேலும் நடைமுறைப்படுத்தும் வகையில் தொழில் உறவுகள் அமைச்சர் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சரவை உடன்பாடு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது.

**03. வெலிக்கடை சிறைச்சாலையை மீள்கட்டமைப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட பி.சீ.சீ. லங்கா கம்பனிக்குச் சொந்தமான காணியை மீள எடுத்தல்**

வெலிக்கடை சிறைச்சாலையை மீள்கட்டமைப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட பி.சீ.சீ. லங்கா நிறுவனத்துக்கு சொந்தமான 6 ஏக்கர் 3 ரூட் 8.77 பேர்ச்சஸ் காணித்துண்டில் மீள்கட்டமைப்பதற்காக 2016 ஜூன் மாதம் 27ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனாலும் தற்போது வெலிக்கடை சிறைச்சாலையை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான ஹொரன பிரதேசத்தில் அமைந்துள்ள காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடத் தொகுதியில் மீளமைப்பதற்கு அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுத்துள்ளது. அதற்கமைய நகர அபிவிருத்தி அதிகாரசபை யால் தயாரிக்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டத்திற்கமைய குறித்த காணித்துண்டு பி.சீ.சீ. லங்கா கம்பனியின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துதல் தொடர்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராக பிரதமரின் உடன்பாட்டுடன் கைத்தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. சேதன மற்றும் இயற்கை உர உற்பத்தி மற்றும் பாவனையின் முக்கியத்துவம் பற்றி தெளிவூட்டுவதற்கான தேசிய மட்டத்திலான ஊடக நிகழ்ச்சித் திட்டம்**

இரசாயன உரப் பாவனைக்குப் பதிலாக சேதன மற்றும் இயற்கை உரங்களை விவசாய நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துவதற்கு அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுத்துள்ளது. இரசாயன உரப் பாவனை, உற்பத்தியை அதிகரித்துக்கொள்வதற்கான ஒரே மாற்றுவழியென நம்பிக்கைகொண்டிருக்கும் விவசாயிகள் மற்றும் ஏனைய தரப்பினர்களுக்கு அது தொடர்பான உண்மை நிலைமையை விளக்கிக்கூறல், சேதனப் உரப் பாவனையை அதிகரிப்பதற்காக விவசாயிகளிடையே அறிவை மேம்படுத்துவதற்கும், சேதன மற்றும் இயற்கை உர உற்பத்தி, மேம்பாடு போலவே சூழல் நேயமிக்க நிகழ்ச்சிகளுக்காக அனுசரணை வழங்குதல் போன்ற விடயங்கள் தொடர்பான துரித விழிப்புணர்வூட்டும் நிகழ்ச் சித்திட்டத்தை நடைமுறைப் படுத்தவேண்டிய தேவை எழுந்துள்ளது. அதற்கமைய, விவசாயிகள், இளைஞர்கள் உள்ளிட்ட ஏனைய ஏற்புடைய தரப்பினர்களைத் தெளிவூட்டுவதற்காக ஒலி, ஒளி, அச்சு மற்றும் டிஜிட்டல் ஊடகங்கள் வாயிலாக குறித்த விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக விவசாய அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. எம்.வி. எக்ஸ்பிரஸ் - பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீயால் இடம்பெற்றுள்ள கடல் மாசுறல் தொடர்பான சட்ட ரீதியான நடவடிக்கை களுக்காக வசதியளித்தல்**

எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீயால் இடம்பெற்றுள்ள கடல் மாசுறல் தொடர்பான சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்காக தேவையான வசதிகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய நீதி அமைச்சர், குறித்த ஏனைய அமைச்சர் மற்றும் சட்ட மா அதிபரின் பங்குபற்றலுடன் ஆலோசனை நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது. அதற்கமைய, குறித்த ஆலோசனை வேலைத்திட்டத்தின்கீழ் இதுவரை கீழ்க்காணும் படிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காப்புறுதி இழப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற் காகவும், தீயால் ஏற்பட்ட பாதிப்பை மதிப்பீடு செய்வதற்காகவும் ஐந்து உபகுழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இழப்பீடு கோரல் மற்றும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக மும்மொழிகளிலும் பத்திரிகை விளம்பரம் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

சட்ட மா அதிபரால் கப்பல் உரிமையாள ருக்கும் கப்டனுக்கும் மற்றும் பிரதிநிதி நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கும் எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கைகளுக்குத் தேவையான விடயங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடல்வாழ் உயிரினங்கள் உயிரிழந்தமை தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள் வதற்காக வனஜீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலி மற்றும் அகழி நிர்மாணித்தல் உள்ளிட்ட பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் மற்றும் காடுகள் மீள வளர்த்தல் மற்றும் வனவளப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளரின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இவ்வகையான விபத்துகளின்போது நடவடிக்கைகளை மேற்கொண்டு அனுபவம் கொண்ட சட்ட வல்லுனர்களின் சேவையை எதிர்கால சட்ட நடவடிக்கைகளுக்கு அவசியமாவதால், அதற்கு பொருத்தமான நிறுவனத்தைத் தெரிவுசெய்வதற்காக விருப்பத் தெரிவிப்பு கோரப்பட்டுள்ளதுடன், 08 சர்வதேச சட்ட நிறுவனங்கள் அதற்காக தமது விருப்பைத் தெரிவித்துள்ளன.

சட்ட மா அதிபரால் குறித்த கப்பலின் காப்புறுதி யாளரான லண்டன் நகரிலுள்ள பி என்ட் ஐ கழகத்துடன் மேற்கொண்ட கலந்துரையாடல் களில் இடைக்கால இழப்பீட்டுத் தொகையாக 720 மில்லியன் ரூபாவை செலுத்துவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, நீதி அமைச்சர் தலைமையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஆலோசனை செயன்முறை மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட படிமுறைகள் தொடர்பாக தமது உடன்பாடுகளை வழங்குவதற்கும் சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காக விருப்பம் தெரிவித்துள்ள நிறுவனங்களிடையே மிகவும் பொருத்தமான நிறுவனத்தைத் தெரிவு செய்வதற்காக சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலான குழுவொன்றை நியமிப்பதற்காக அங்கீகாரம் வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

**06. தானம் பெற்றுக்கொள்வதற்கு சிரமமாக வுள்ள பின்தங்கிய வணக்கத்தலங்களுக்காக தானம் வழங்குதல்**

நாடளாவிய ரீதியில் நிலவும் கொவிட்-19 தொற்று நிலைமை மற்றும் அடிக்கடி விதிக்கப்பட்ட பயணத்தடை காரணமாகவும் அறங்காவலர்களால் தானம் வழங்குவதற்கு சிரமமாகவுள்ள வணக்கத்தலங்களுக்கு உலருணவுப் பொருட்களைப் பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டம் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அமைச்சால் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, லங்கா சதொச லிமிடெட் நிறுவனத்திடம் கொள்வனவு செய்யப்படும் 5000 ரூபா பெறுமதியான உலருணவுப் பொருட்கள் உள்ளிட்ட பொதிகளை குறித்த நிறுவனத்தின் விநியோகப் பிரிவால் அடையாளங்காணப்பட்டுள்ள விகாரைகள் மற்றும் வணக்கத்தலங்களுக்கு விநியோகிப்பதற்காக புத்தசாசன, சமய மற்றும் கலாசார அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. விசேட வைப்புக் கணக்குகளுக்கான மேலதிக வட்டியை வழங்குவதற்காக ஏற்பாடுகளை வகுத்தல்**

வெளிநாட்டு நாணயத்தை எமது நாட்டுக்கு அனுப்புவதை ஊக்குவிக்கும் வகையில் 2020 ஏப்ரல் மாதம் 07ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் விசேட நிலையான கணக்கு ஆரம்பிப்பதற்கும் குறித்த கணக்குகளில் காணப்படும் வைப்புகளைத் தொடர்ந்து பேணுவதற்காகவும் மேலதிக வட்டியை செலுத்துவதற்கு இதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதற்கமைய, 2017ஆம் ஆண்டு 12ஆம் இலக்க அந்நிய செலாவணி சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் குறித்த கட்டளைகள் வெளியிடப்பட்டுள்ளதுடன், தற்போதுள்ள ஏற்பாடுகளின்கீழ் 06 மாதம் அல்லது 12 மாத காலத்துடன் விசேட வைப்புக் கணக்குகளில் மீளவும் முதலிடுவதற்கும், அவ்வாறான விசேட வைப்புக் கணக்குகளுக்கான மேலதிக வட்டியை வழங்குவதற்கும் இயலுமை உள்ளது. ஆனாலும், 12 மாதங்களுக்கு அதிகமாக மீளவும் முதலிடப்படும் விசேட வைப்புக் கணக்குகளுக்காக மேலதிக வட்டி வீதத்தைச் செலுத்துவதற்கு ஏற்பாடுகள் இன்மையால், அதற்காக ஏற்பாடுகளை உள்வாங்கி 2017ஆம் ஆண்டு 12ஆம் இலக்க அந்நிய செலாவணிச் சட்டத்தின் 7(1) உறுப்புரைக்கமைய கட்டளையை வெளியிடுவதற்கும், குறித்த கட்டளைகளின் அங்கீகாரத்திற்காக நாடாளுமன்றில் சமர்ப்பிப் பதற்காகவும் நிதி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. எமது நாட்டுக்கு வெளியே இடம்பெறும் அந்நிய செலாவணிப் பரிவர்த்தனைகளைக் கட்டுப்படுத்துவதற்காக 2017ஆம் ஆண்டு 12ஆம் இலக்க அந்நிய செலாவணிச் சட்டத்தின் 22ஆம் உறுப்புரையின்கீழ் வெளியிடப்பட்டுள்ள கட்டளையை தொடர்ந்தும் நீடித்தல்**

கொவிட் தொற்று நிலைமையால் நாட்டின் வெளிநாட்டு நாணய இருப்பு மற்றும் அந்நிய செலாவணிச் சந்தைக்கு ஏற்படக்கூடிய எதிர்மறை யான பாதிப்புகளைக் கருத்திற்கொண்டு ஒரு சில பரிவர்த்தனைகளுடன் தொடர்புடைய வெளியகப் பரிவர்த்தனைகளை நிறுத்துவதற்காக 2017ஆம் ஆண்டு 12ஆம் இலக்க அந்நிய செலாவணிச் சட்டத்தின் 22ஆம் உறுப்புரையின் கீழ் கட்டளை விதிக்கப்பட்டுள்ளது. குறித்த கட்டளைகள் செல்லுபடியாகும் காலம் 2021 ஜூலை மாதம் 01ஆம் திகதி நிறைவு பெறவுள்ளதால், அந்நிய செலாவணிச் சந்தையில் ஏற்படக்கூடிய ஆபத்து நேர்வைக் குறைப்பதற்கும் நிதிப்பிரிவின் நிலைபேற்றுத்தன்மையைப் பேணவும் குறித்த கட்டளைகளை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இலங்கை மத்திய வங்கி கருத்துத் தெரிவித்துள்ளது. அதற்கமைய, அந்நிய செலாவணி வெளியகப் பரிமாற்றலின் அடிப்படையில் ஒருசில மட்டுப்பாடுகள்/தடைகள் விதிக்கப்பட்டு 2017ஆம் ஆண்டு 12ஆம் இலக்க அந்நிய செலாவணிச் சட்டத்தின் 22ஆம் உறுப்புரையின் கீழ் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகளை தொடர்ந் தும் 2022 ஜூலை மாதம் 02ஆம் திகதி தொடக் கம் 06 மாத காலத்திற்கு நீடிப்பதற்காக நிதி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. இலங்கை அரசாங்க சர்வதேச பிணைமுறி களில் முதலிடுவதற்காக இலங்கையில் நிறுவப்பட்டுள்ள கம்பனிகளுக்கு வசதிகளை வகுத்தல்**

அனுமதிபெற்ற வர்த்தக வங்கிகள் சிலவும் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகள் சிலவும் இலங்கை அரசாங்கத்தின் சர்வதேச பிணைமுறிகளில் முதலிடுவதற்கு இலங்கைக்கு வெளியே கடன் பெற்றுக்கொள் வதற்கு விருப்பம் தெரி விக்கப்பட்டுள்ளது. எமது நாட்டுக்குப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒட்டுமொத்த நன்மைகளைக் கருத்திற்கொண்டு, ஒருசில நிபந்தனை களுக்கமைய, இலங்கை அரசாங்கத்தின் சர்வதேச பிணைமுறிகளை / இலங்கை அபிவிருத்தி பிணைமுறிகளைக் கொள்வனவு செய்வதற்காக அனுமதிபெற்ற வர்த்தக வங்கிகளுக்கு தேசிய சேமிப்பு வங்கி மற்றும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு 2007ஆம் ஆண்டு 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள நிதியல்லா நிறுவனங்களுக்கான அனுமதியை வழங்கவும் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை உடன்பாடு தெரிவித்துள்ளது. அதற்கமைய, நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு 2007ஆம் ஆண்டு 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள நிதியல்லா நிறுவனங்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்காக 2017ஆம் ஆண்டு 12ஆம் இலக்க அந்நிய செலாவணிச் சட்டத்தின் 7(1) உறுப்புரையின் கீழ் கட்டளைகளை வெளியிடுவதற்கும், குறித்த கட்டளைகளை நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப் பதற்காகவும் நிதி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. 1998ஆம் ஆண்டு 53ஆம் இலக்க இலங்கை நீரியல்வாழ் வேளாண் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்திருத்தம்**

நீரியல்வாழ் வேளாண் ஒழுங்குபடுத்தல்கள், மேம்பாடு மற்றும் முகாமைத்துவப்படுத்தலின் முழு அதிகாரமும் இலங்கை நீரியல்வாழ் வேளாண் அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்திற்குக் கிடைக்கும் வகையில் 1998ஆம் ஆண்டு 53ஆம் இலக்க இலங்கை நீரியல்வாழ் வேளாண் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக 2017 ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதிய அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய மேற்கொள்ளவேண்டிய திருத்தங்கள் தொடர்பான விடயங்களை ஆராய்ந்து பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் குழுவொன்றை நியமித்துள்ளார். குறித்த குழுவால் சட்டத்திருத்தத்திற்குத் தேவையான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த பரிந்துரைக்கமைய 1998 ஆம் ஆண்டு 53 ஆம் இலக்க இலங்கை நீரியல்வாழ் வேளாண் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டமும், அதற்கு இணையாக 2006 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தப்பட்ட 1996ஆம் ஆண்டு 02ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல்வள சட்டம் திருத்தப்பட வேண்டுமெனவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, குழுவால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்தை அடிப்படையாகக்கொண்டு, 1998ஆம் ஆண்டு 53ஆம் இலக்க இலங்கை இலங்கை நீரியல்வாழ் வேளாண் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம் மற்றும் 1996ஆம் ஆண்டு 02ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல்வள சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக கடற்றொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. அபாயகர விலங்குகள் கட்டளைச் சட்டத் திருத்தம்**

அபாயகர விலங்குகள் கட்டளைச் சட்டம் சமகாலத் தேவைகளுக்கேற்ப திருத்தம் செய்யப்படவேண்டுமென நீதி அமைச்சின் விசேட அலகின் குற்றவியல் சட்ட மறுசீரமைப்புக்கான உபகுழுவால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, 1921ஆம் ஆண்டு 38ஆம் இலக்க அபாயகர விலங்குகள் கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**12. குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்தின் விசா வழங்கும் செயன்முறை தொடர்பாக தற்போதுள்ள விசா செல்லுபடியாகும் காலத்தை திருத்தம்செய்வதற்காக குடிவரவு - குடியகல்வு சட்டத்தை திருத்தம் செய்தல்**

குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்தின் விசா வழங்கும் செயன்முறைக்கமைய சமகாலத்தில் நிலவும் விசாவுக்கான காலப்பகுதியை திருத்தம் செய்வதற்காக குடிவரவு - குடியகல்வு சட்டத்தை திருத்தம் செய்வதற்காக சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கான அங்கீகாரத்திற்காகவும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காகவும் பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி அமைச்சரவைக்கு இதற்கு முன்னர் யோசனையொன்றை முன்வைத்துள்ளார். குறித்த சட்டமூலம் தொடர்பாக விடயங்களை ஆராய்ந்து மேலும் மேற்கொள்ளவேண்டிய திருத்தங்கள் இருப்பின் அது தொடர்பாக அமைச்சரவைக்கு கருத்துகளை முன்வைக்குமாறு 2021 ஏப்ரல் மாதம் 05ஆம் திகதிய அமைச்சரவைக் கூட்டத்தில் நீதி அமைச்சர் வேண்டியிருந்தார். அதற்கமைய, குறித்த தரப்பினருடன் நீதி அமைச்சர் கலந்துரையாடியுள்ளதுடன், குறித்த சட்டமூலம் அவ்விதத்திலேயே நாடாளுமன்றத்தால் நிறைவேற்றுவது சிறந்ததென அமைச்சரவைக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. குறித்த பரிந்துரைகளைக் கருத்திற்கொண்டு குடிவரவு - குடியகல்வு சட்டத்தைத் திருத்தம்செய்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிட்டு நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதியால் 2021 பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**13. மீட்புப் பதிலளிப்பு கொவிட் - 19 தடுப்பூசி ஏற்றும் கருத்திட்டம் (RECOVER) இற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியைப் பெற்றுக்கொள்ளல்**

மீட்புப் பதிலளிப்பு கொவிட்-19 தடுப்பூசி ஏற்றும் கருத்திட்டம் (RECOVER) இனை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கம் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 150 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனுதவியைப் பெற்றுக்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த நிதியில் 84 அமெரிக்க டொலர்கள் ஆசிய - பசுபிக் தடுப்பூசி அணுகல் வசதியின் கீழும், மிகுதி 66 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பொது மூலதன நிதியத்தின் நிரந்தர உள்ளூர் ஒதுக்கீட்டின் கீழும் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இக்கருத்திட்டத்தின் மொத்தச் செலவு 161.85 மில்லியன் அமெரிக்க டொலர்களாவதுடன், இலங்கை அரசாங்கம் 11.85 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பங்களிக்கின்றது. தடுப்பூசி ஏற்றுவதற்கான செலவுகள், தடுப்பூசி தொடர்பான கண்காணிப்புக் கட்டமைப்பை நிறுவுதல், குளிரூட்டிகளுடன் கூடிய போக்குவரத்து வசதிகளை ஏற்பாடுசெய்தல், மற்றும் சிகிச்சைக் கழிவு முகாமைத்துவத்தைப் பலப்படுத்தல் உள்ளிட்ட மேலதிக உப செயற்பாடுகளுக்காக குறித்த கடன் தொகையை பயன்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த கடன்தொகையைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிதி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**14. உள்ளூர் கம்பனிகளுக்கு வெளிநாட்டு நிதி திரட்டுவதற்கான வசதிகளை வழங்கல்**

இலங்கையிலுள்ள உள்ளூர் கம்பனிகளுக்கு வெளிநாட்டு நிதி திரட்டலை அதிகரிப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்கில், இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட கம்பனியால் வெளியிடப்பட்டுள்ள வெளிநாட்டு நாணயத்தில் பெயர் குறிப்பிட்ட பங்குகள், கொழும்பு பங்குச்சந்தையில் பட்டியல்படுத்துவதற்கான யோசனை கொழும்பு பங்குப் பரிவர்த்தனை மூலம் முன்வைக்கப்பட்டுள்ளது. 2021ஆம் ஆண்டு 02ஆம் இலக்க அந்நிய செலாவணிக் கட்டளைகளுக்கமைய, வெளிநாட்டு நாணயத்தில் வெளியிடப்பட்டுள்ள கடன் பத்திரங்களோ அல்லது அடிப்படைப் பங்குகள் அல்லது பங்குலாபம் செலுத்துதல் அல்லது வெளிநாட்டு நாணய பகிர்ந்தளிப்பதன் மூலம் கிடைக்கும் தொகை, வெளிநாட்டு நாணய வர்த்தகக் கணக்குக்கு (Business Foreign Currency Account) வைப்பிலிடுவதற்கு அனுமதியில்லை. இலங்கையில் பட்டியல் படுத்தப்பட்டுள்ள கம்பனிகள் மீதான வெளிநாட்டு முதலீட்டாளர்களின் ஆர்வத்தை அதிகரிப்பதற்காகவும், நாட்டில் வெளிநாட்டு நாணயத்தை கவர்ந்திழுப்பதற்காகவும் அதில் பங்கெடுப்பவர்களை அதிகரிப்பதற்காகவும், இலங்கை ரூபா மீதான அழுத்தத்தைக் குறைப்பதற்காகவும், வெளிநாட்டு நாணயத்தை திரட்டுவதற்காக இலங்கைக் கம்பனிகள் வெளிநாட்டு பங்குச் சந்தைக்கு செல்வதற்குப் பதிலாக மாற்றுவழியை உருவாக்குதல் போன்ற விடயங்களைக் கருத்திற்கொண்டு, கொழும்பு பங்குப் பரிவர்த்தனையால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனையை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை பரிந்துரைத்துள்ளது. அதற்கமைய, குறித்த யோசனையை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளை வகுப்பதற்காக தற்போது வெளியிடப்பட்டுள்ள 2021ஆம் ஆண்டு 02ஆம் இலக்க கட்டளைகளைத் திருத்தம் செய்து 2017ஆம் ஆண்டு 12ஆம் இலக்க அந்நிய செலாவணிச் சட்டத்தின் 7(1)ஆம் உறுப்புரையின்கீழ் கட்டளைகளை வெளியிடுவதற்கும், குறித்த கட்டளைகளின் அங்கீகாரத்திற்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காகவும் நிதி அமைச்சரராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



# கொரோனாவால் ஒரே குடும்பத்தில் மூவர் பலியான விவகாரம்; விசாரணை நடத்துமாறு அமைச்சர் பவித்ரா பணிப்பு

பேராதனை முருத்தலாவவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் கொவிட் -19 தொற்றினால் உயிரிழந்தமை குறித்து விசாரணை நடத்துமாறு சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அறிவுறுத்தியுள்ளார்.

எதிர்காலத்தில் இதுபோன்ற இறப்புகளைத் தடுக்க, இந்த துரதிர்ஷ்டவசமான சம்பவம் குறித்து சுகாதாரப் பிரிவுகள் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டுமென சுகாதார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, கொரோனா வைரஸ் இறப்புகள் குறித்த அறிக்கையைத் தொகுக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மத்திய மாகாணம் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.


அதன்படி, பேராதனை முருத்தலாவவில் 71 வயதான தந்தை ஜூன் 2 ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து 68 வயதான தாய் ஜூன் 17 ஆம் திகதியும், இவர்களது 39 வயது மகன் ஜூன் 23 ஆம் திகதியும் உயிரிழந்தனர். மூவரும் கொவிட் தொற்றுக் காரணமாக உயிரிழந்ததாக சுகாதாரத்துறையினால் அறிக்கையிடப்பட்டுள்ளது. இதனையடுத்தே, இம்மூவரும் இந்நோயினால் உயிரிழந்தமை குறித்து விசாரணை நடத்துமாறு சுகாதார அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# பூண்டுலோயாவில் பெண்ணொருவர் அடுப்பங்கரையில் சடலமாக மீட்பு

## படுகொலை செய்ததாக சந்தேகத்தில் இளைஞர் கைது



(பூண்டுலோயா செய்தியாளர்)

பூண்டுலோயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பழையதோட்டம் பகுதியில் 47 வயதுடைய பெண் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்ட நிலையில் அடுப்பங்கரையிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பொதுமக்களின் முறைப்பாட்டுக்கமைய பொலிஸாரால் நேற்று (29) சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பெண் படுகொலை செய்யப்பட்டு, சடலம் துணியால் சுற்றப்பட்டு வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் பூண்டுலோயா பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்துள்ளனர்.

பூண்டுலோயா பொலிஸார் குறித்த இடத்திற்கு விரைந்ததோடு, சந்தேகத்தின் பேரில் 27 வயதுடைய இளைஞரொருவரைக் கைதுசெய்துள்ளனர். இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கொட்டகலையில் மேலும் 26 பேருக்கு கொரோனா

(மனுர சுதத் செல்லஹேவா)

கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்துக்குட்பட்ட பகுதியில் கொரோனா தொற்றுக்குள்ளான 26 பேர் நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொட்டகலை வூட்டன் தோட்டத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த எண்மருக்கும், தலவாக்கலை கிறேக்வெஸ்டர்ன் தோட்டத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த எண்மருக்கும், போகாவத்தை தோட்டத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அறுவருக்கும், கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

மேலும், ரொசிட்டா தோட்டத்தில் இருவரும், கொட்டகலை நகரில் இருவரும் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதாக பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர்களுடன் தொடர்பில் இருந்தோரை தனிமைப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# சிறுத்தையை வேட்டையாடிய மூவர் வலப்பனையில் கைது

(கண்டி செய்தியாளர்)

வலப்பனை பிரதேசத்தில் சிறுத்தையொன்றை வேட்டையாடிய சந்தேகநபர்கள் மூவரை, நல்லதண்ணி வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், வட்ஸ்அப் புகைப்படம் மூலம் தகலறிந்து கைதுசெய்துள்ளனர்.

இவர்கள் மூவரும் வலப்பனை மூர்ஓயா தோட்டப்பகுதியில் பொறிவைத்து மேற்படி புலியைப் பிடித்து இறைச்சிக்காக விற்றுள்ளனர். அதில் ஒரு சந்தேக நபர் தனது நண்பருக்கு அனுப்பிய வட்ஸ்அப் படம் மூலம் நல்லதண்ணி வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிந்துகொண்டதையடுத்து, வலப்பனை பிரதேசத்தில் மேற்கொண்ட நடவடிக்கையின்போது சந்தேக



நபர்கள் கைதாகியுள்ளனர்.

ஒரு சந்தேகநபரிடமிருந்து உலரவிடப்பட்ட புலித்தோலும், மற்றைய சந்தேக நபரிடமிருந்து புலியின் பல்லும் அதிகாரிகளால் கைப்பற்றப்படுள்ளன. சந்தேக நபர்களை வலப்பனை நீதவான் முன்பு ஆஜர் செய்தபோது தலா ஒரு இலட்ச ரூபா சரீரப்பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணை செப்டெம்பர் 7 ஆம் திகதி இடம்பெறும்.

## துளிச் செய்திகள்

மாத்தளை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில், 150 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் 16 பேர் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களை தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கு சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஹட்டன் நகரில் மரக்கறிகளின் விலையில் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். இதனால் தாங்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாகயும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அதிக விலைக்கு மரக்கறிகளை விற்பனை செய்வோருக்கு எதிராக அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# எரிபொருள் விலையேற்றத்துக்கு யட்டிநுவரவில் பிரதேச சபை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்பு







(கண்டி செய்தியாளர்)

எரிபொருள் விலையேற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், எரிபொருள் விலையைக் குறைக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தும் யட்டிநுவர பிரதேச சபை எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று முன்தினம் மேற்கொண்டனர்.

இவர்கள் மாதாந்தக் கூட்டத்திற்கு வருகை தரும்போது துவிச்சக்கர வண்டியில் வருகை தந்ததுடன், பிரதேச சபை மாதாந்தக் கூட்டத்தில் கறுப்புப்பட்டி அணிந்து கலந்துகொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இவர்கள் அனைவரும் பிரதான வீதியில் ஊர்வலமாக வருவதையும், சபை அமர்வுகளில் கறுப்புப்பட்டி அணிந்து பங்குகொள்வதையும் படத்தில் காணலாம்.

# பெருந்தோட்டங்களில் நியமனம் பெற்ற தமிழ்மொழி மூல ஆசிரிய உதவியாளர்களை சேவையில் இணைத்துக்கொள்க!

## சப்ரகமுவ ஆளுநருக்கு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கடிதம்

பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு நியமனம் பெற்ற தமிழ்மொழி மூலமான ஆசிரிய உதவியாளர்கள் ஆறு வருடங்கள் கடந்தும் ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்ப்பு செய்யப்படவில்லை. இது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம், சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவுக்கு அவசர கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதித் தலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

2015 ஆம் ஆண்டு பெருந்தோட்டப் பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு 3 ஆயிரத்து 21 பேருக்கு ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் வழங்கப்பட்டது.

இந்த நியமனங்கள் பல கட்டங்களாக வழங்கப்பட்டதுடன், இவர்களுக்கான கொடுப்பனவானது முதலில் 6 ஆயிரம் ரூபாவாகவும், பின்னர் 10 ஆயிரம் ரூபாவாகவும் உயர்த்தப்பட்டது. வர்த்தமானி அறிவித்தல் பிரகாரம் ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்ப்பு செய்வதென்றால் ஆசிரியர் பயிற்சி அல்லது நியமன பாடத்தில் பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம்பெற வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது.

2005ஆம் ஆண்டு இவர்களுக்கு நியமனம் வழங்கிய நல்லாட்சி அரசாங்கம், ஒரே தடவையில் நியமனம் வழங்காமலும் அவர்களுக்கான பயிற்சி அல்லது பட்டம் பெறுவதற்கு வாய்ப்பை செய்து தராமலும் விட்டது இவர்களுக்கு இழைக்கப்பட்ட மிகப்பெரிய அநீதியாகும். இந்த ஆசிரிய உதவியாளர்கள் தமது உரிமையை வென்றெடுக்க ஆசிரியர் தொழிற்சங்கங்களுடன் ஒன்றிணைந்து பல பாரிய போராட்டங்களை முன்னெடுத்த போதிலும், அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கமும், மலையக அரசியல்வாதிகளும் இவ்விடயம் தொடர்பாக எவ்வித கவனமும் செலுத்தவில்லை என்பதை மிக வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதேவேளை நியமனம் பெற்ற அதிகளவான ஆசிரியர்கள் பயிற்சியை நிறைவு செய்து ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்ப்பு செய்யப்பட்டார்கள். எனினும், 2018/2019 கல்வி ஆண்டிற்கான ஆசிரியர் பயிற்சியை 2020/09/18 ஆம் திகதி நிறைவு செய்த ஆசிரிய உதவியாளர்களுக்கு 2021/05/10 ஆம் திகதி இறுதி ஆண்டு பரீட்சை நடைபெறும் என கல்வி அமைச்சு அறிவித்த போதிலும், பின்னர் காலவரையறையின்றி பிற்போடப்பட்டது.

கொரோனா நோய் பரவலால் ஒன்றரை வருட காலமாக இந்நாட்டின் கல்வி முழுமையாக பாதிப்படைந்துள்ளது. இச்சந்தர்ப்பத்தில் கல்வியை மீண்டும் கட்டியெழுப்ப சிரமத்திற்கு மத்தியில் ஆசிரியர் அதிகம் பற்றாக்குறையால் பாதிப்படைந்து காணப்படும் பெருந்தோட்டப் பாடசாலைகளில் 10000 ரூபா எனும் மிக குறைந்த கொடுப்பனவிற்கு பல வருடங்களாக சேவையாற்றும் இந்த ஆசிரியர்களுக்கு அநீதி நிகழ்ந்துள்ளது. இவர்களுக்குரிய இறுதிப் பரீட்சையை அவர்களின் சொந்த மாவட்டங்களில் நடத்துதல் அல்லது இவர்களின் துயர நிலையை கருத்தில் கொண்டு ஆசிரியர் சேவை தரம் 3-1 க்கு உள்ளீர்ப்பு செய்யப்படல் வேண்டும் என மிகப் பொறுப்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.



மேலும் சப்ரகமுவ மாகாணத்தில் சேவையாற்றும் ஆசிரிய உதவியாளர்களின் பிரச்சினை தொடர்பாக கவனம் செலுத்துவதுடன், சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு அவர்களுக்குரிய பரீட்சையை நடத்தி ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதுடன். இன்னும் பல விடயங்களைக் கலந்துரையாடுவதற்கு சம்பந்தப்பட்ட பிரதிநிதிகளுடன் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்திற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி தரவேண்டும் என கேட்டுக் கொள்கின்றோம்.

சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் மஹிந்த ஜயசிங்க கையொப்பம் இட்டுள்ளதோடு, இதன்பிரதியை மாகாண கல்வி செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# கூடாரங்களை கைவிட்டு லயக்குடியிருப்புக்கு செல்லுமாறு லெவண்ட் தோட்ட மக்களுக்கு நிர்வாகம் கடிதம் மூலம் அழுத்தம்

(அவிசாவளை நிருபர்)

எட்டியாந்தோட்டை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட லெவண்ட் தோட்டத்தில் கடந்த 5ஆம் திகதி பெய்த தொடர்மழையினால் தோட்டத்தில் லயக்குடியிருப்புக்கு அருகாமையில் மண்சரிவுக்கான அறிகுறி தென்பட்டதோடு, நிலத்தில் வெடிப்புக்களும் ஏற்பட்டிருந்தன.

இதனால் மண்சரிவு ஏற்படக்கூடுமென மக்கள் அச்சத்தில் இருந்தமையினால், 25 வீடுகளைக் கொண்ட லயக்குடியிருப்பில் உள்ள 149 பேர், தோட்ட நிர்வாகத்தின் உதவியுடன் தற்காலிக கூடாரங்களில் தங்கவைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தோட்ட மக்களும் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் இதுநாள்வரை தமது வாழ்க்கையை கழித்துவரும் சூழ்நிலையில், தற்பொழுது காலநிலை வழமைக்கு திரும்பியதும் மீண்டும் அம்மக்களை பழைய லயக்குடியிருப்பு செல்லுமாறும், அவ்வாறு செல்லாதவிடத்து அவர்களுக்கு தோட்ட நிர்வாகம் வேலை வழங்குவதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டு, அம்மக்களுக்கு எதிராக எட்டியாந்தோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் தோட்ட நிர்வாகத்தால் பதிவு செய்யப்பட்டிருந்தது.

இவ்வாறான பின்னணியில் தோட்ட மக்கள் மீண்டும் பழைய லயக்குடியிருப்புக்கு செல்வதில்லை என்று தீர்மானித்து தொடர்ந்து தமது கூடாரங்களிலேயே வசித்து வரும்நிலையில், தோட்ட நிர்வாகமானது கடிதம் மூலம் அனைவருக்கும் அழுத்தத்தை பிரயோகித்துள்ளது.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பின்வருமாறு:-

கடந்த சில தினங்களாக பெய்த கனமழையால் இலக்கம் 1லயக்குடியிருப்பு கட்டடத்தில்



ஏற்படவிருந்த மண்சரிவு அபாயத்தை ஒட்டி அங்கு குடியிருந்த உங்களுக்கும், உங்களை சார்ந்த அங்கத்தவர்களுக்கும் அங்கிருந்த கோயிலிலும், சிறுவர் பராமரிப்பு நிலையத்திலும், லயக்குடியிருப்புக்கு அருகாமையிலும் கூடாரங்கள் அமைத்து தங்கவைக்கப்பட்டீர்கள்.

ஆனாலும், தேசிய ஆய்வு மையத்தின் மண்சரிவு அவதான எச்சரிக்கை இடர் முகாமைத்துவ நிலைய கேகாலை மாவட்ட பணிப்பாளர் காரியாலயத்தால் மேற்குறிப்பட்ட இடமானது ஆய்வு செய்யப்பட்டபின் இப்பிரதேசம் மண்சரிவுக்குட்படாத பிரதேசமென சான்று வழங்கியுள்ளது. தற்பொழுது நிலவிவரும் சீரான காலநிலையில் நீங்கள் முன்னர் இருந்த குடியிருப்புக்கு மீள செல்லமுடியுமான போதிலும், நீங்கள் கடந்த 12ஆம் திகதி அனுமதியின்றி இறப்பர் பயிர்ச்செய்கை இடம்பெறும் தோட்டத்திற்குள் குடியிருக்க கட்டுமானப் பணிகளை தொடங்கியிருக்கின்றீர்கள். பலதடவை உங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டபோதிலும் அதனை கருத்தில்கொள்ளாது மீண்டும் 13ஆம் திகதி கட்டப்பட்ட கட்டுமானங்களை மீள்புதுப்பித்து வீடுகள் கட்ட முனைந்துள்ளீர்கள்.

இவ்வாறு தோட்ட நிர்வாகத்தின் அறிவித்தலை உதாசீனப்படுத்தி அரசிற்கு சொந்தமான கௌனிவெளி பெருந்தோட்ட கம்பனியால் நிர்வகிக்கப்படும் தோட்டத்துக்குள் அனுமதியின்றி கட்டப்பட்டு தோட்ட சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது. இந்த அனுமதியற்ற கட்டுமானத்தை நீக்கி, தோட்ட நிலங்களை விட்டு வெளியேறுமாறு பல தடவை எச்சரிக்கை விடுத்தும், அதனை கருத்தில் கொள்ளாதிருக்கும் உங்களுக்கு மீண்டும் பழைய குடியிருப்புக்கு செல்லும் காலம் வரை சம்பளமற்ற தொழில் நிறுத்தம் செய்யப்படுவதை அறியத்தருகின்றேன் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்வாறாக தோட்ட நிர்வாகத்தால் வேலை நிறுத்தப்பட்டுள்ளதால் தோட்ட வருமானத்தை இழந்து தவிக்கின்றனர். லயக்குடியிருப்பு அருகாமையில் மண்சரிவு அபாயம் இல்லையென சான்றுப்படுத்தப்பட்டாலும், தாம் வசித்து வந்த லயக்குடியிருப்பு மிகவும் பழைமை வாய்ந்ததாகவும், இடிந்து விழக்கூடிய நிலையில் இருப்பதாகவும் தமக்கு அரசாங்கத்தால் புதிய வீடமைப்பு கிடைக்கும்வரை இதே இடத்தில் இருக்கபோவதாக குறித்த தோட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக இ.தொ.கா. உப தலைவர் அண்ணாமலை பாஸ்கரனிடம் தோட்ட மக்கள் தமது பிரச்சினையை தெரிவிக்க, அவர் தோட்ட முகாமையுடன் கலந்துரையாடி புதிய வீடமைப்பு வரும்வரை அவர்களுக்கு அதே இடத்தில் இருக்க வழிசமைக்குமாறும், அவர்களுக்கு தொழிலை வழங்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார். படுகிறது.

# நெஸ்லே நிறுவனத்தின் மைலோ இலங்கையில் paper straw வை அறிமுகப்படுத்தும் முதன்முதல் Ready-to-Drink என்ற பெருமையை நிலைநாட்டியுள்ளது

## வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த முயற்சியினூடாக ஆண்டொன்றுக்கு 90 மில்லியன் plastic strawகளின் பாவனை அகற்றப்படும்




நெஸ்லே நிறுவனத்தின் தயாரிப்புகளில் நுகர்வோர் மத்தியில் மிகவும் அபிமானம் பெற்ற மைலோ வர்த்தகநாமம் அதன் பிரபலமான Ready-to-Drink (RTD) தயாரிப்பில் paper strawகளை அறிமுகப்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது. இலங்கையில் நுகர்வோர் சூழலின் பேண்தகமையைப் பேணுகின்ற வகையில் RTD பான வகை ஒன்றினால் முதன்முதலாக மேற்கொள்ளப்படுகின்ற ஒரு முயற்சியாகும். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த முயற்சியின் மூலமாக நிறுவனம் ஆண்டொன்றுக்கு 90 மில்லியன் plastic strawகளை அகற்ற இடமளிப்பதுடன், மேலும் அனைத்து புதிய மைலோ பொதியிடல் செயற்பாடுகளும் 100% மீள்சுழற்சி செய்யக்கூடியதாக மாறும். இந்த முயற்சி நெஸ்லே தனது பொதியிடல் செயற்பாடுகளின் மூலமாக ஏற்படுகின்ற தாக்கத்தைக் குறைக்க எடுக்கும் பல நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

மேலும், பால் அட்டைப்பெட்டிகளை மீள்சுழற்சி செய்வதற்கான தொழிற்சாலையொன்றும் அமைக்கப்பட்டுள்ளதுடன், இது Tetra Pak மற்றும் நெஸ்லே போன்ற உணவு மற்றும் பான வகை நிறுவனங்களின் துணையுடன் இயங்கும். இந்தத் தொழிற்சாலை மைலோ RTDஐ மீள்சுழற்சி செய்யும் என்பதுடன், இலங்கையிலுள்ள ஒட்டுமொத்த பான அட்டைப்பெட்டி தொழிற்றுறைக்கும் பயனளிக்கும். மைலோ RTD பானம் அருந்தி முடிக்கப்பட்ட பின்னர், அவற்றை பொறுப்புணர்வுமிக்க முறையில் அப்புறப்படுத்தல் மற்றும் மீள்சுழற்சிக்காக சேகரித்தல் தொடர்பான விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக கல்வியமைச்சு, மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபை மற்றும் உரிய மாநகர சபைகளுடன் இணைந்து நெஸ்லே நிறுவனம் தற்போது முன்னெடுத்து வருகின்ற பாடசாலைகள் கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் அனுகூலத்தை இதற்காக உபயோகிக்கும். இது 2021ஆம் ஆண்டின் இறுதிக்குள் 250 பாடசாலைகளை எட்டும். பிளாஸ்ரிக் பொதியிடல் கழிவுகளுக்கான சேகரிப்பு மற்றும் மீள்சுழற்சி செயற்றிட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில் நிறுவனம் பல முன்னேற்றகரமான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

"திறன்மிக்க கழிவு முகாமைத்துவத்தின் தேவை என்பது நாடு தற்போது எதிர்கொள்ளும் மிகப்பெரிய பிரச்சினைகளில் ஒன்றாகும். இந்த தயாரிப்பு வகையில் முதன்முதலாக paper strawகளை நெஸ்லே நிறுவனம் தானாகவே முன்வந்து, இலங்கை மக்கள் அனுபவித்து மகிழ இன்னும் கூடுதலான அளவில் பேண்தகைமை கொண்ட தயாரிப்புகளை வழங்குவதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். நாட்டின் மற்றும் அதன் மக்களின் நல்வாழ்வை உறுதிசெய்வதற்காக தூய்மையான மற்றும் பசுமையான இலங்கைக்கான அரசாங்கத்தின் நோக்கத்திற்கு இன்னும் அதிகமான நிறுவனங்கள் ஆதரவளிக்க முன்வருவதைக் காண்பதில் ஆவலாக உள்ளோம்" - என்று சுற்றுச்சூழல் அமைச்சரான மஹிந்த அமரவீர குறிப்பிட்டார்.

"நெஸ்லே நிறுவனம் பிளாஸ்ரிக் கழிவுகளை கையாள்வதற்கான சவாலை படிப்படியாக முன்னெடுத்துச் செல்வதிலும், சுற்றாடல் தொடர்பான எமது இலக்கினை நோக்கிய பயணத்தை விரைவுபடுத்துவதற்கும் உறுதிபூண்டுள்ளது. அடுத்த சில ஆண்டுகளில் நாங்கள் திட்டமிட்டுள்ள பல்வேறு முக்கியமான சுற்றாடல் முயற்சிகளில் இது முதல் முயற்சியாகும்.

2022ஆம் ஆண்டளவில் மைலோ பிளாஸ்ரிக் பாவனை மற்றும் அதன் அப்புறப்படுத்தல் தொடர்பில் நடுநிலைமையை அடையவும், மீதமுள்ள எமது தயாரிப்பு பொதியிடல்களை 2025ஆம் ஆண்டுக்குள் 100% மீள்சுழற்சி செய்யக்கூடியதாக மாற்றவும் திட்டமிட்டுள்ளோம். இலங்கையின் எதிர்காலத்தில் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் முக்கிய நடவடிக்கைகளை செயற்படுத்துவதில் நாம் பெருமிதம்கொள்வதுடன், எங்கள் நுகர்வோருக்கு மட்டுமல்லாது எமது பூமிக்கும் நன்மை பயக்கின்ற தயாரிப்புகளை உற்பத்தி செய்வதில் அர்ப்பணிப்புடன் உள்ளோம்" என்று நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான பேப்ரிஸ் காவலின் குறிப்பிட்டார்.

மேலும், நுகர்வோர் மத்தியில் இந்த மாற்றத்திற்கு உதவ, நடத்தை மாற்றத்தை ஊக்குவிப்பதற்கும் பொறுப்புணர்வுடன் அகற்றலை ஊக்குவிப்பதற்கும் பரந்தளவிலான நுகர்வோர் விழிப்புணர்வு பிரசாரங்களை நிறுவனம் ஆரம்பிக்கவுள்ளது.

"40 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையர்களின் அபிலாஷைகளை வளர்ப்பதில் அர்ப்பணிப்புடன் மைலோ செயற்பட்டு வந்துள்ளது. நாட்டில் புத்தம்புதிய பாலை கொள்வனவுசெய்து உள்நாட்டிலுள்ள பாற்பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தை நாம் மேம்படுத்தியுள்ளதுடன், விளையாட்டுகள் மற்றும் திறமையான விளையாட்டு வீரர்களை வளர்ப்பதற்கும் பல்வேறு வழிகளில் பங்களித்துள்ள நிலையில், தற்போது சுற்றாடல் தொடர்பில் துணிச்சலான முயற்சிகளை மேற்கொள்வதில் பெருமிதம்கொள்கிறோம். எங்கள் பூமியைப் பாதுகாக்க எங்கள் பங்கை ஆற்றுவதற்கு நாங்கள் ஆவலாக உள்ளோம்"- என்று நெஸ்லே லங்கா நிறுவனத்தின் மைலோ உற்பத்திப் பிரிவின் சந்தைப்படுத்தல் முகாமையாளரான மொஹமட் அலி குறிப்பிட்டார்.

நிறுவனத்தின் ஏனைய RTD தயாரிப்புகளான நெஸ்பிறே (Nespray) மற்றும் நெஸ்கபே (Nescafé) ஆகியவையும் இந்த ஆண்டிற்குள் paper strawகளை அறிமுகப்படுத்தி 100% மீள்சுழற்சி செய்யக்கூடியதாக மாற்றம் காணவுள்ளன.

தமிழன்
வணிக உலகம்
Business world
www.thamilan.lk

# புறக்கணிக்கப்பட்டுள்ள கடலுக்கு உதவி தேவைப்படும் தருணம் இது!





கடந்த தசாப்தத்தில் இலங்கையில் வருடந்தோறும் 1.59 மில்லியன் மெட்ரிக் தொன் பிளாஸ்ரிக் கழிவுகளை தவறாக நிர்வகித்து வந்ததனால், இது கடைசியில் கடல்களில் கொட்டப்படுகிறது. இந்து சமுத்திர பிராந்தியத்திலுள்ள 12 நாடுகளில் இலங்கை உள்ளிட்ட ஏழு நாடுகள் பிளாஸ்ரிக் கழிவுகளால் கணிசமாக மாசுபடுவதாகக் கருதப்படுகிறது. எம்.வி. எக்ஸ்-பிரஸ் பேர்ள் (MV X-Press Pearl) கப்பலில் அண்மையில் கொள்கலன் வெடித்ததால் கடல் மாசுபாட்டின் சிக்கலை அதிகப்படுத்தியுள்ளது.

உலகப் பெருங்கடல் தினம் ஜூன் மாதத்தில் கொண்டாடப்பட்டாலும், இந்த சோகம் இலங்கையின் நிலையான இலக்குகளை அடைவதற்கான பயணத்தை பின்னோக்கித் தள்ளியுள்ளது. இதன் காரணமாக, பிளாஸ்ரிக் நுகர்வு பொறுப்புடன் ஊக்குவிப்பதும் அப்புறப்படுத்துவதும் மிகவும் கடினமாகிவிட்டது.

### மீன்பிடித் தொழிலில் பிளாஸ்ரிக் கழிவுகள் பற்றிய கவனம் செலுத்துதல்

இலங்கை மீன்வள துறைமுகக் கழகத்தில் தற்போது 4900 முதல் 5000 வரை பல மீன்பிடிக் கப்பல்கள் / ஆழ்கடல் மீன்பிடிக் கப்பல்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இந்த மீன்பிடிக் கப்பல்கள் சுமார் 300-400 பிளாஸ்ரிக் பாட்டில்களை எடுத்துச்செல்வதாக தெரிவிக்கப்படுகிறது. சராசரியாக ஒரு நபர் சுமார் 15 போத்தல்களை பயன்படுத்துகிறார், அதில் 5 லீற்றர் போத்தல்கள் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன.

''1900களில், இந்தக் கப்பல்களில் நீர்த்தாங்கிகள் இருந்தன. அவை குடிப்பதற்கும் மீன்களை சுத்தம் செய்வதற்கும் தண்ணீரை எடுத்துச்செல்லக்கூடியவை. புதிய படகுகளிலும் இந்த வசதிகள் உள்ளபோதிலும், மீனவர்கள் கடலுக்குச் செல்லும்போது பிளாஸ்ரிக் போத்தில்களில் தண்ணீரை எடுத்துச் செல்லவே விரும்புகிறார்கள். 2000ஆம் ஆண்டில் இது ஒரு போக்காக மாறியது'' - என இலங்கை மீன்வள துறைமுகக் கழகத்தின் பொது முகாமையாளர் எம்.ஜனக்க பிரசன்ன தெரிவித்தார்.

இலங்கை மீன்வள துறைமுகக் கழகம், இலங்கை கடலோர காவல்படை (SLCG) மற்றும் மீன்வள மற்றும் நீர்வளத்துறை ஆகியவை கூட்டாக இணைந்து கடலுக்கு கொண்டுசெல்லப்படும் ஒவ்வொரு போத்தல் பற்றிய தகவல்களையும் கடலில் பிளாஸ்ரிக் போத்தல்களின் மோசமான விளைவுகளையும் பதிவுசெய்கின்றன. மீனவர்கள் கடலுக்கு எடுத்துச்செல்லும் ஒவ்வொரு போத்தலையும் திருப்பித் தர வேண்டும் அல்லது அவர்கள் மீண்டும் கடலுக்குச் செல்ல தடை விதிக்கப்படுவார்கள்.

பிளாஸ்ரிக் அகற்றும் முயற்சிகளை ஊக்குவிக்கும் பொருட்டு பிளாஸ்ரிக் கழிவுகளை அகற்றுவதற்காக மீன்பிடித் துறையில் மீள்சுழற்சி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கூடுதலாக, ஈகோ ஸ்பிண்டில்ஸ் (இலங்கையின் மிகப்பெரிய பிளாஸ்ரிக் மீள்சுழற்சி நிறுவனம்) கொக்கா கோலாவுடன் இணைந்து 10,000 முதல் 15,000 பிளாஸ்ரிக் போத்தல்களை சேகரிப்பதற்கான கூடைகள் மற்றும் சேகரிப்பு மையங்களை அமைத்துள்ளது.

''நாம் இந்த நடவடிக்கைகளை எடுத்துள்ளதனால் துறைமுகங்களை விட்டு வெளியேறும் மீனவர்களால் கடல் மாசடைவதை 75% குறைத்துள்ளோம். இதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பு தேவை. மக்கள் திமிங்கலத்தைப் பார்ப்பது அல்லது படகுப் பயணம் அல்லது படகு நிறுத்திவைக்கப்பட்டுள்ள இடங்களில் மீன்பிடித்தல் போன்ற பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபடுவதை சிந்தித்துப் பாருங்கள். அப்படியானால், நீங்கள் எடுத்துச்செல்லும் பிளாஸ்ரிக் கழிவுகளைத் திருப்பிக் கொண்டுவந்து பொருத்தமான தொட்டிகளில் போட வேண்டும் - என எம்.ஜனக்க பிரசன்ன மேலும் கூறினார்.

### கடலைப் பாதுகாக்க ஒன்றிணையுமாறு கோரிக்கை

6ஆவது சர்வதேச கடல்சார் குப்பைகள் மாநாட்டில் முன்வைக்கப்பட்ட ஆய்வில், இலங்கையின் கடற்கரையோரத்தில் கொட்டப்படும் கழிவுகளில் 93% பிளாஸ்ரிக் என தெரியவந்துள்ளது. நகரங்கள் மற்றும் ஆறுகளுக்கு அருகிலுள்ள கடற்கரைகளில் பிளாஸ்ரிக் கழிவுகள் அதிகளவில் கொட்டப்படுகின்றன எனவும் அந்த ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

''பாரிய சீரற்ற காலநிலைகளின்போது பிராந்திய நாடுகளிலிருந்து பிளாஸ்ரிக் கழிவுகள் இலங்கை கரையோரங்களில் ஒதுங்குகின்றன. இது பருவமழை காலநிலை நிலவும்போது, கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகள் பெரிதும் பாதிக்கப்படும்'' - என இலங்கை கடற்படை மற்றும் Green & Blue Domain Dockyard திட்டத்தின் முன்னாள் ஒருங்கிணைப்பாளர் லெப்டினன்ட் கொமாண்டர் கசுன் நுவரபக்ஷ கூறினார்.

இலங்கை கடற்படையின் கடல் பாதுகாப்பு கண்காணிப்புப் பிரிவு சேகரித்த பிளாஸ்ரிக் கழிவுகள் மீள்சுழற்சி செய்யப்பட்டு பொலியஸ்டர் நூல்கள் மற்றும் மோனோஃபிலமென்ட்களை உற்பத்திசெய்வதற்காக ஈகோ-ஸ்பென்டில்ஸுக்கு கொண்டுசெல்லப்படுகின்றன. முன் கூடியிருந்த பிளாஸ்ரிக் கழிவுகளை சேகரிக்க ஈகோ ஸ்பின்டில்ஸ் திருகோணமலை கப்பல் தளம், கற்பிட்டி மற்றும் மன்னார் கடற்படைத்தளங்களில் அமுக்க இயந்திரங்களை நிறுவியுள்ளது.

மக்களும் வர்த்தகர்களும் பொறுப்பற்ற முறையில் பிளாஸ்ரிக்கை அப்புறப்படுத்தினால் இலங்கை கடற்படை பிளாஸ்ரிக் கழிவுகளிலிருந்து கடலைப் பாதுகாக்க எடுக்கும் முயற்சிகள் தோல்வியடையும். இத்தகைய நிறுவனங்கள் கடல்வாழ் உயிரினங்களையும் கடல் வளத்தையும் பாதுகாக்க உதவும் பாதுகாப்புத் திட்டங்களை நிறுவ அல்லது ஆதரிக்க வேண்டிய தேவை அதிகரித்து வருகிறது.

### பிளாஸ்ரிக் கழிவுகளுக்கு ஒரு புதிய அர்த்தத்தை அளிக்கிறது

நாடு முழுவதிலுமுள்ள கடற்கரைகள், சேகரிப்பு மையங்கள் மற்றும் கடலில் இருந்தும் சுற்றுச்சூழலில் இருந்தும் சேகரிக்கப்பட்ட பிளாஸ்ரிக் போத்தல்கள் ஈகோ-ஸ்பென்டில்ஸ் மீள்சுழற்சி மையத்திற்கு கொண்டு வரப்படுகின்றன. இந்த வசதி மாதத்திற்கு சுமார் 75,00,000 - 90,00,000 PET பிளாஸ்ரிக் போத்தல் கழிவுகளை மீள்சுழற்சி செய்கிறது.

பிளாஸ்ரிக் கழிவுகளை துண்டாக்கப்பட்ட பின்னர், அது வண்ணம் மற்றும் வகை பிளாஸ்ரிக் மூலம் வரிசைப்படுத்தப்பட்டு, நெரிக்கப்பட்டு ஒரு இயந்திரத்திற்கு அனுப்பப்பட்டு போத்தல் மூடிகள் மற்றும் லேபிள்களை அகற்றுகிறது. அங்கு அவை PET துண்டுகளாக மாற்றப்படுகின்றன.

''பிளாஸ்ரிக் துண்டுகளாக்கப்பட்டவுடன், அதை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கிறோம். ஒருவகை பிரீமியம் கிரேட் ஆகும், இது நூல் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் மிக உயர்ந்த தரமான பிளாஸ்ரிக் துண்டுகள், மற்ற வகை மோனோஃபிலமென்ட்கள் தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது'' - ஈகோ ஸ்பின்டில்ஸ் மீள்சுழற்சி நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி மனோஜ் உதவத்தே கூறினார்.

''கடற்கரையிலிருந்து சேகரிக்கப்பட்ட பிளாஸ்ரிக்கிலிருந்து தயாரிக்கப்படும் நூல்களைப் பயன்படுத்த வர்த்தகர்கள் விரும்புகிறார்கள். ஏனெனில் இது கழிவுப் பிரச்சினையையும் கடலில் ஏற்படும் தாக்கத்தையும் குறைக்கிறது. எங்களிடம் ஈகோஸ் ஓசியானிக் உள்ளது, இது கடற்கரை சார்ந்த பிளாஸ்ரிக் பொலியஸ்டர் நூல் தயாரிப்பு'' - என உதவத்த மேலும் கூறினார்.

''ஈகோ ஸ்பின்டில்ஸ் போன்ற மீள்சுழற்சி நிறுவனங்களும் தொழில்நுட்பத்தை முழுமையாகப் பயன்படுத்துகின்றன மற்றும் கடற்கரையிலிருந்து சேகரிக்கப்பட்ட பிளாஸ்ரிக் கழிவுகளின் அளவைக் கணக்கிடுகின்றன. எங்கள் பிளாஸ்ரிக் கழிவு சேகரிப்பாளர்கள் சேகரிக்கப்பட்ட பிளாஸ்ரிக் அளவைக் கண்காணிக்கக்கூடிய ஒரு பயன்பாடு உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் சேகரிக்கப்படும் பிளாஸ்ரிக் கழிவுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், கடல் மற்றும் பெருங்கடல்களிலிருந்து கழிவுகளை அதிகளவில் அகற்றி வருகிறோம். குடிமக்களாகிய நாம் எப்போதும் கடலை சுத்தமாக வைத்திருக்க முயற்சிக்க வேண்டும்'' - என உதவத்த சுட்டிக்காட்டினார்.


கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB

சீட்டிழுப்பு இலக்கம்: 2785 சீட்டிழுப்பு திகதி: 29.06.2021

ஆங்கில எழுத்து: N
வெற்றி இலக்கங்கள்: 37 39 47 52

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 1 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 7 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 2,000.00 | 169 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 1,000.00 | 377 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 9483 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 6250 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 157147 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 28851 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 202,285
இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை ரூ. 7,333,260.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 73,892,414.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01,
தொலைபேசி: 0112-324324, 0114 607000
Fax: 0114 663416 Web: www.nlb.lk



சீட்டிழுப்பு இலக்கம்: 4490
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB

மஹஜன சம்பத
திகதி: 29.06.2021

வெற்றி எழுத்து: V
வெற்றி இலக்கங்கள்: 2 5 4 2 6 7

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | ■ 2 5 4 2 6 7 | ரூபா 2,000,000/- | 2 |
| 2ஆம் பரிசு | ■ ■ 5 4 2 6 7 | ரூபா 100,000/- | 7 |
| 3ஆம் பரிசு | ■ ■ ■ 4 2 6 7 | ரூபா 10,000/- | 109 |
| 4ஆம் பரிசு | ■ ■ ■ ■ 2 6 7 | ரூபா 1,000/- | 1073 |
| 5ஆம் பரிசு | ■ ■ ■ ■ ■ 6 7 | ரூபா 100/- | 10724 |
| 6ஆம் பரிசு | ■ ■ ■ ■ ■ ■ 7 | ரூபா 20/- | 106681 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | ■ 2 5 4 2 6 ■ | ரூபா 10,000/- | 15 |
| 8ஆம் பரிசு | ■ 2 5 4 2 ■ ■ | ரூபா 1,000/- | 115 |
| 9ஆம் பரிசு | ■ 2 5 4 ■ ■ ■ | ரூபா 100/- | 1057 |
| 10ஆம் பரிசு | ■ 2 5 ■ ■ ■ ■ | ரூபா 50/- | 10584 |
| 11ஆம் பரிசு | V ■ ■ ■ ■ ■ ■ | ரூபா 20/- | 42704 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 11,823,000.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்
தேசிய லொத்தர் சபை
32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01.
தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.
www.nlb.lk

# கல்முனையில் கொவிட் தடுப்பூசி வழங்காமையே கொரோனா தொற்று பரவல் தீவிரமடைய காரணம்

## முதல்வர் ஏ.எம்.றகீப் ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

*(சாய்ந்தமருது நிருபர்)*

கல்முனை மாநகர பிரதேசங்களில் கொரோனா தொற்று அதிகரித்து வருவதால், அதனைக் கட்டுப்படுத்தும் பொருட்டு அவசரமாக கொவிட் தடுப்பூசிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் கோரிக்கை விடுத்துள்ளார்.

இக்கோரிக்கையை வலியுறுத்தி அவர் நேற்று (29) ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள அவசர கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

எமது நாட்டில் தீவிரமாக பரவிவருகின்ற கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக அரசாங்கம் முன்னெடுத்து வருகின்ற ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை நான் வெகுவாகப் பாராட்டுகின்றேன்.

இதன் ஓர் அங்கமாக நீங்கள் மேற்கொண்ட முயற்சியினால் இம்மாத முற்பகுதியில் மாத்திரம் 04 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள் கொள்வனவு செய்யப்பட்டு, சுகாதார அமைச்சினால் அவை நாடுபூராகவும் மாவட்ட மட்டத்தில் ஏக காலத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டு, தேவையுடைய மக்களுக்கு வெற்றிகரமாக ஏற்றப்பட்டு வருகின்றன. அவற்றுள் கிழக்கு மாகாணத்தின் 03 சுகாதாரப் பிராந்தியங்களுக்கும் 75,000 சினோபார்ம் தடுப்பூசிகள் வழங்கப்பட்ட போதிலும், கல்முனை பிராந்தியம் உள்வாங்கப்படாமல் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டிருந்தது.



இப்புறக்கணிப்பானது இப்பகுதி மக்களிடையே பாரிய விமர்சனங்களையும் கவலையையும் ஏற்படுத்தியிருக்கிது. எனினும், அப்போது இங்கு கொரோனா வைரஸ் தொற்று வீதம் குறைந்தளவில் இருந்தமையினாலேயே கல்முனை பிராந்தியத்திற்கு தடுப்பூசி கிடைக்கவில்லையென பிராந்திய சுகாதாரத் தரப்பினரால் கூறப்பட்டது.

அதேவேளை, எமது திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.எம்.ஹரீஸ் மற்றும் பைசல் காசிம் ஆகியோர் இவ்விடயத்தை பிரதமரின் கவனத்திற்கு கொண்டு சென்றிருந்தனர். அதன்போது அடுத்த கட்டத்தில் கல்முனைப் பிராந்தியத்திற்கு தடுப்பூசிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமரினால் உறுதியளிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், கல்முனை மாநகர பிரதேசங்களில் கடந்த சில வாரங்களாக நாளுக்கு நாள் கொரோனா வைரஸ் தொற்று தீவிரமடைந்து வருவதுடன், மரணங்களும் நிகழ்ந்து வருகின்றன. தற்போது கல்முனையின் இந்த நிலவரமானது பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருக்கின்றது. இப்பகுதியில் தடுப்பூசி ஏற்றப்பட வேண்டியவர்களுக்கு அது கிடைக்காமல் தவிர்க்கப்பட்டதன் விளைவே இத்தொற்று பரவல் அதிகரிப்புக்கு காரணமாக இருக்கலாம் என அச்சம் வெளியிடப்படுகிறது.

ஆகையினால், இனியும் தாமதிக்காமல் இத்தொற்றிலிருந்து இப்பகுதி மக்களை பாதுகாப்பதற்காக கல்முனை மாநகர சபைக்கு போதியளவு தடுப்பூசிகள் கிடைப்பதற்கு அவசரமாக ஆவன செய்யுமாறு வேண்டிக் கொள்கின்றேன்- என முதல்வர் ஏ.எம்.றகீப் அக்கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

# அரசியல் கைதிகள் விடுதலை விடயத்தில் அரசின் நடவடிக்கையில் திருப்தியில்லை

## - இலங்கை மக்கள் தேசிய கட்சி கவலை!

(நூருல் ஹுதா உமர்)

கடந்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொதுஜன கூட்டணியில் 40 கட்சிகள் இணைந்து ஒப்பந்தம் செய்திருந்தோம். அப்போது எங்களுடன் சிறந்த புரிந்துணர்வுடன் நடந்து கொண்டவரே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பெசில் ராஜபக்ஷ. அந்த காலப்பகுதியில் எங்களுடனான பேச்சுவார்த்தைகளின்போது அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தினோம். அது இப்போது சாத்தியமாகியுள்ளது. பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பெசில் ராஜபக்ஷ சிறந்த நிர்வாகி. அவர் விரைவில் நாடாளுமன்ற உறுப்பினராகி, அதனூடாக அமைச்சுப் பதவியையும் பெற்று, நாட்டின் சகல பாகங்களுக்கும் சிறந்த முறையில் சேவையாற்ற வேண்டும். அதுவே நாட்டு மக்களின் எதிர்பார்ப்பாகும் என இலங்கை மக்கள் தேசிய கட்சியின் தலைவர் நாகராசா விஷ்ணுகாந்தன் தெரிவித்தார்.



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பங்காளிக் கட்சிகளின் ஊடகவியலாளர் சந்திப்பு கல்முனையில் நேற்று (29) மாலை நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு கருத்து வெளியிட்ட அவர்,

எரிபொருளின் விலையேற்றத்தை தீர்மானிப்பது அரசாங்கமில்லை. சர்வதேச விலைச்சுட்டியை அடிப்படையாக கொண்டே எரிபொருள் விலையேற்றமும், விலையிறக்கமும் தீர்மானிக்கப்படுகிறது. விலையேற்றத்தை சுட்டிக்காட்டி கோட்டாபய அரசைக் கலைக்க கோருபவர்கள் யாரை ஆட்சிபீடம் ஏற்ற முனைகிறார்கள்? அமைச்சர் உதய கம்பன்பில நாட்டை நேசிக்கும் சிறந்த அரசியல்வாதி. இந்த விலையேற்றத்தினூடாக கிடைக்கும் பணத்தை யாரும் வெளிநாட்டுக்குக் கொண்டுசெல்வதில்லை. எமது நாட்டுக்குள்ளேயே அது சுற்றிக்கொண்டிருக்கிறது. இதற்காக அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மாட்டுவண்டி சவாரி செய்வது, தீப்பந்தம் ஏந்துவதெல்லாம் முறையாகாது. காலாகாலத்திற்கும் வரும் சகல எதிர்க்கட்சிகளும் இதைத்தான் செய்கிறார்கள்.

எங்களின் அரசாங்கம் அரசியல் கைதிகளை விடுதலை செய்த விடயத்தில் மகிழ்ச்சியாக இருந்தாலும் எங்களுக்கு பூரண திருப்தியில்லை. அரசியல் கைதியாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுதாகரன், அவரது பிள்ளைகளின் எதிர்காலம் கருதி இம்முறை விடுதலை செய்யப்படுவார் என எல்லோரும் எதிர்பார்த்திருந்த நிலையில் அந்த எதிர்பார்ப்பு பொய்யாகியுள்ளது. அவரது மனைவி இறந்துள்ள நிலையில், பாட்டியிடம் வளர்ந்துவரும் சிறு பிள்ளைகளின் எதிர்காலத்தை கவனத்தில் கொண்டு அவரை விடுதலை செய்ய அரசாங்கம் முன்வர வேண்டும். சுதாகரன் போல பல்வேறு கதைகளை உடைய பல அரசியல் கைதிகளும் சிறையில் வாடுகிறார்கள். அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்றார்.

# ஒட்டமாவடியில் தனிமைப்படுத்தப்பட்ட 3 பகுதிகள் விடுவிப்பு

*(எச்.எம்.எம்.பர்ஸான்)*

கொரோனா தொற்றுப் பரவல் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவுக்குட்பட்ட மூன்று பிரதேசங்கள் நேற்று (29) விடுவிக்கப்பட்டுள்ளன.



கொரோனா தொற்றுப் பரவல் காரணமாக கடந்த 11 ஆம் திகதி மீராவோடை கிழக்கு, மீராவோடை மேற்கு மற்றும் மாஞ்சோலை ஆகிய மூன்று கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் முடக்கப்பட்டிருந்தன.

குறித்த மூன்று பிரதேசங்களும் 19 நாட்களின் பின்னர் நேற்று (29) விடுவிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில், தனிமைப்படுத்தல் பகுதியை விடுவிக்க உதவிய மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன் மற்றும் கடமையில் ஈடுபட்ட இராணுவத்தினர், பொலிஸார் ஆகியோருக்கு ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர் தனது நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

# பொத்துவில் அறுகம்பை மீன்பிடித்துறையில் காணாமல்போன மீனவர்கள் ஒரு வாரம் கடந்தும் இன்னும் வீடு திரும்பவில்லை

## குழந்தைகள் - உறவினர்கள் கவலை

*(எஸ்.அஷ்ரப்கான்)*

பொத்துவிலில் காணாமல்போன மீனவர்கள் இருவர் ஒரு வாரமாகியும் இன்னும் வீடு திரும்பவில்லையென மீனவர்களின் உறவினர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த 23 ஆம் திகதி அதிகாலை பொத்துவில் அறுகம்பை மீன்பிடித்துறையிலிருந்து OFRP -A- 1456- KMN எனும் இலக்க அடையாளம் கொண்ட இயந்திரப்படகில் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற இரு மீனவர்களே இவ்வாறு காணாமல் போயுள்ளதாக உறவினர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பொத்துவில் களப்புக்கட்டு பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையான மொகமட் தாஹா என்பவரும், பொத்துவில் பசரிச்சேனையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 32 வயதுடைய ஜௌபர் தாஜுதீன் என்ற இருவருமே ஒரு வாரமாகியும் வீடு திரும்பவில்லையென தெரிவிக்கப்படுகிறது.





தினமும் அதிகாலை கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றால் மதியம் வீடு வந்துவிடுவார்கள். அல்லது இறுதி நேரமாக பிற்பகல் இரண்டு மணிக்குள் வழமையாக வீடு திரும்புவார்கள். ஆனால், தற்போது ஒரு வாரமாகியும் எங்களது தந்தை வீடு திரும்பவில்லை என 6 பிள்ளைகள் கண்ணீரோடு தங்களது தந்தைகளை தேடி அலைகின்றனர்.

இதேவேளை கடலுக்கு மீன்பிடிப்பதற்காகச் சென்ற இருவரும் இன்றோடு (29) ஒரு வாரமாகியும் வீடு திரும்பவில்லை. என்னிடம் பணிபுரிந்த இவர்களின் இந்தப் பிரிவை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. வழமைபோல் கடந்த 23 ஆம் திகதி வீடு திரும்பாத எனது படகின் பணியாளர்கள் இன்று வருவார்களா, நாளை வருவார்களா என்ற எதிர்பார்ப்புடன் அவர்களின் வரவை காத்திருக்கின்றேன். அவர்கள் என்ன ஆனார்கள், அவர்களுக்கு என்ன நடந்தது என்று எந்தவொரு தகவலும் இதுவரை தெரியாத நிலையில், நானும் எனது பணியாளர்களின் குடும்பத்தினரும் ஆழ்ந்த கவலையில் இருக்கின்றோம்.

இவர்களை தேடித்தருமாறு துறைசார்ந்தோரிடமும் அரசியல்வாதிகளையும் அரசையும் கேட்டுக் கொள்கின்றேன் என காணாமல் போன பணியாளர்களின் படகினது உரிமையாளர் அயூப்கான் கவலை தெரிவிப்பதோடு, இது தொடர்பாக இவர்கள் தொடர்பில் அரசாங்கம் எங்களுக்கு சரியானதொரு தகவலைத் தரவேண்டும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, காணாமல்போன இருவரையும் இலங்கை கடற்படையினர் இதுவரை தேடி வருவதாகவும், மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

# சிங்கள – முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு எதிராகப் போராடிய தமிழ்த் தலைவர்கள் சீனர்களை எதிர்த்தும் போராடும் நிலை

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன்

*(வீரமுனை நிருபர்)*

வடக்கு-கிழக்கில் நில அபகரிப்புத் தொடர்பாக இதுவரை சிங்கள, முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு எதிராகவே தமிழ்த் தலைவர்கள் போராடினர். ஆனால், இனி சீனர்களுக்கு எதிராகவும் போராட வேண்டியுள்ளது என மட்டு. மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற இடங்களில் சீன நிறுவனம் கடலட்டை வளர்ப்புப் போர்வையில் நிலைகொண்டமை தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

வடகிழக்கு தமிழ்பேசும் மக்களின் உரிமைப் போராட்டம் 73 வருடங்களாக நில அபகரிப்பு, அத்துமீறிய குடியேற்றம், பயிர்ச்செய்கை என பலதரப்பட்ட நெருக்குவாதங்கள் சிங்கள அரச தலைவர்களாலும், அரசாலும் திட்டமிட்டு கொண்டு வரப்பட்டபோது பல போராட்ட நடவடிக்கைகளைத் தமிழ்த் தேசிய அரசியல் தலைவர்கள் முன்னெடுத்தனர்.

இதேபோல் 1990ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலத்தில் சில முஸ்லிம் அரசியல்வாதிகளால் மேற்கொள்ளப்பட்ட காணி அபகரிப்புகளுக்கு எதிராகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வரலாறுகள் தமிழ்த் தேசிய அரசியல் தலைமைகளுக்கு இருந்தது. இவை எல்லாமே இலங்கையைச் சேர்ந்த மக்களாகவே இருந்து, அத்துமீறல்கள் மேற்கொள்ளும்போது தட்டிக்கேட்க வேண்டிய கடப்பாடு காரணமாக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்த வரலாறுகளும் தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கு உண்டு.

தற்போதும் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்களின் பூர்வீக மேய்ச்சல் தரைகளாக இருந்த மயிலத்தமடு, மாதவனை மற்றும் கெவிளியாமடு போன்ற இடங்களில் சிங்கள மக்களைக் குடியேற்றி சேனைப்பயிர், முந்திரிச் செய்கை என்ற போர்வையில் நில அபகரிப்பு இடம்பெறுகிறது.

இதனைத் தடுக்கும் முயற்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இவைகளைத் தாண்டி இப்போது புதிதாக இன்னுமொரு தலையிடி எமக்கு ஏற்பட்டுள்ளது.

சீன நாட்டின் பொருளாதார வரவு என்ற போர்வையில் கொழும்புத்துறைமுகத்தின், கொழும்பு நகரின் சில தேவைகளுக்காக அரசினால் வரவழைக்கப்பட்ட சீன முதலீட்டாளர்கள், இப்போது கொழும்பு நகரைத் தாண்டி, கொழும்பு மாவட்டத்தையும் தாண்டி, வடக்கு மாகாணத்தில் காலூன்றி கடலோர வளங்களை ஆக்கிரமிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

இதனால் எமது கடல் தொழிலாளர்களின் தொழில் பாதிப்படைவதுடன், நில வளங்களும் சுரண்டப்படும் நிலையுள்ளது. இது இன்னும் சில காலத்தில் கிழக்கு மாகாணத்திலும் சீனர்களின் தொல்லைகளால் எமக்கு பாதிப்புக்கள் ஏற்படும். வெறுமனே கொழும்பு மட்டும் என்ற நிலை மாறி இலங்கையிலுள்ள 24, மாவட்டங்களிலும் ஏதோ ஒரு வகையில் பாதிப்புக்கள் வளரீதியாக ஏற்படப்போகின்றன.

வேறு எந்த மாவட்டங்களிலும் அபிவிருத்தி என்ற போர்வையில் விரும்பியவைகளை செய்யட்டும். ஆனால் வடக்கு-கிழக்கு பகுதிகளில் மேற்கொள்ளும் இவ்வாறான அத்துமீறல்களை அனுமதிக்கமுடியாது.

இதுவரை காலமும் தமிழ்த் தேசிய தலைமைகள் சிங்கள மற்றும் முஸ்லிம் அரசியல்வாதிகளின் காணி அபகரிப்புக்கு எதிராகவே போராடிய வரலாறு உண்டு. இனி சீன நாட்டு முதலீட்டாளர்களுக்கு எதிராகவும் போராட வேண்டிய நிலையுள்ளது என்பது உண்மை எனவும் கூறினார்.

# ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தில் மருதமுனை அபிவிருத்திக்காக 38 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

*(றாசிக் நபாயிஸ்)*

ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷவின் எண்ணக்கருவில் உருவான சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தின் கீழ் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலில் நாடுதழுவிய "ஒரு இலட்சம் கிலோ மீற்றர்" வீதி அபிவிருத்திப் புரட்சியில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மருதமுனை கிளைத் தலைவர் அல்ஹாஜ் எம்.எல்.எம்.முஸ்தபாவின் விடாமுயற்சி காரணமாக, மருதமுனை பிரதேச அபிவிருத்திக்காக 38 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதி ஒதுக்கீடு கிடைக்கத் தேவையான நடவடிக்கைகளை செய்த சிவில் பாதுகாப்பு அமைச்சர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அம்பாறை மாவட்ட முஸ்லிம் மத்திய குழுவின் தலைவரான எஸ்.எம்.எம்.இர்ஸாத் அதாப் மற்றும் இந்த அபிவிருத்தி விடயத்தில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மருதமுனை கிளைத் தலைவர் அல்ஹாஜ் எம்.எல்.எம்.முஸ்தபா நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அம்பாறை மாவட்ட முஸ்லிம் மத்திய குழுவின் தலைவரான எஸ்.எம்.எம்.இர்ஸாத் அதாப் சிபாரிசின் பேரில் அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களுக்கென மொத்தமாக 25 கோடி ரூபா வீதி அபிவிருத்திக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதில் ஒரு பகுதியாகவே மருதமுனை பிரதேசத்தின் அபிவிருத்திக்கென 38 மில்லியன் ரூபா கிடைத்திருப்பதாக கிளைத் தலைவர் தெரிவித்தார்.

# மரணதண்டனைக் கைதிகளின் விடுதலை செயற்பாடானது நாட்டின் சுயாதீன நீதியை இல்லாமல் செய்கின்ற வழியாகும்

## அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கலையரசன்

*(வீரமுனை நிருபர்)*

இலங்கையில் தமிழ் அரசியல் கைதிகள் நீண்ட காலமாக விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்தார்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

யுத்தம் நிறைவுற்று 12 வருடங்கள் கடந்த நிலையிலும் அதிக தமிழ் அரசியல் கைதிகள் தற்போது வரைக்குமாக விடுதலை செய்யப்படவில்லை. இருந்தும் பொசன் பௌர்ணமி தினத்தினை முன்னிட்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பொது மன்னிப்பின் அடிப்படையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நீண்ட காலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 16 தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்திருப்பதென்பது வரவேற்கத்தக்கதாக இருந்தாலும், கடும் மோசமான குற்றங்களைப் புரிந்த மரண தண்டனைக் கைதி விடுதலையானதென்பதும் சுட்டிக்காட்டப்பட வேண்டும்.

எது எவ்வாறு இருப்பினும், 15 வருட காலத்திற்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற சிறைக்கைதிகள், இந்த 16 பேர் விடுதலையை ஒரு வழியாக கருத்திற்கொண்டு ஏனைய தமிழ் அரசியல் கைதிகளையும் அரசாங்கம் விடுதலைசெய்ய வேண்டும்.



விடுதலைப் புலிகளாக இருந்து போரை தலைமை தாங்கி நடத்திய தலைவர்களெல்லாம் நாட்டில் பல்வேறு பதவிகளுடன் சுதந்திரமாக நடமாடுவதும், தலைமையின் கீழ் இருந்து செயற்பட்டவர்கள் சிறையில் வாடுவதென்பது நாட்டின் ஜனநாயக நீதிச் சூழலை கேள்விக்குட்படுத்துகிறது. எனவே, அரசாங்கம் 16 பேரை விடுதலை செய்ததோடு, நின்றுவிடாது ஏனைய தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்வதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தால் தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய சூழல் ஏற்படும்.

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் நீண்ட காலமாக போராட்டத்தை முன்னெடுத்து வருகிறார்கள். காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்குரிய தீர்வுகளும் வழங்கப்பட வேண்டும்.

எனவே, பொதுமன்னிப்பு விடுதலையில் நீதித்துறையை மதிக்கின்ற ஒரு செயற்பாட்டை அரசாங்கம் கையாள வேண்டும். ஆனால், பாரிய கொலைக்குற்றங்களைப் புரிந்தவர்கள் பொதுமன்னிப்பு விடுதலையிலேயே முன்னுதாரணமாக விடுதலை செய்யப்பட்டுள்ள செயற்பாடு, நாட்டின் சுயாதீன நீதியினையும், ஏனைய நாடுகள் எம் மீது வைத்துள்ள நேரிய நோக்கத்தை இல்லாமல் செய்கின்ற ஒரு வழி வகையாகவும் அமைந்துள்ளது.


ஆகவே, சுயாதீன ஜனநாயக சட்ட நீதித்துறையினை கவனத்திற்கொண்டு ஏனைய தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தால் இலங்கையரசின் நல் நோக்கமாகப் பார்க்கப்படும் என்றார்.

# கல்முனையில் 24 மணிநேரத்தில் 48 பேருக்கு கொரோனா; பிராந்தியத்தில் அவதானமிக்க 05 பிரதேசங்கள் அடையாளம்

(நற்பிட்டிமுனை நிருபர் சிராஜுதீன்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவுக்குட்பட்ட 13 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நேற்று காலையுடன் முடிந்த 24 மணிநேரத்தில் கொரோனா தொற்றுக்குள்ளான 48 பேர் இனங்காணப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜீ.சுகுணன் தெரிவித்துள்ளார்.

மிக முக்கியமாக மருதமுனை, காரைதீவு, நிந்தவூர், அட்டாளைச்சேனை, இறக்காமம் மற்றும் பொத்துவில் பிரதேசங்கள் மிக அவதானத்திற்குரிய பிரதேசங்களாக மாறியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.



கொரோனா தொற்று காரணமாக இதுவரை கல்முனை பிராந்தியத்தில் 37 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தொற்றுக்குள்ளான 48 பேரில் கல்முனை தெற்கில் 6 பேரும், காரைதீவில் 7 பேரும், கல்முனை வடக்கில் 3 பேரும், பொத்துவிலில் 18 பேரும், திருக்கோயிலில் 4 பேரும், அட்டாளைச்சேனையில் ஒருவரும், அக்கரைப்பற்றில் 4 பேரும், ஆலையடிவேம்பில் ஒருவரும், நிந்தவூரில் ஒருவரும், சம்மாந்துறையில் ஒருவரும் மற்றும் இறக்காமத்தில் இருவரும் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வலையில் சிக்கிய 270 கிலோ எடையுள்ள கொப்பூர் மீன்



(பாறுக் ஷிஹான்/ நூருல் ஹுதா உமர்)

அம்பாறையில் 270 கிலோ எடையுள்ள கொப்பூர் மீன் மீனவர்களின் வலையில் சிக்கியுள்ளது.

அம்பாறை மாவட்ட சாய்ந்தமருது முகத்துவாரத்து கடற்கரையில் நேற்று எச்.எம்.மர்சூக் (பியூட்டி பலஸ்) என்பவருக்குச் சொந்தமான ஆழ்கடல் வள்ளத்தில் கடலுக்கு சென்ற மீனவர்கள் சுமார் 270 கிலோ எடையுள்ள கொப்பூர் மீன் ஒன்றை பிடித்து கரைக்கு கொண்டுவந்து சேர்த்துள்ளனர்.

இந்த மீன் ஒரு இலட்சத்து 70 ஆயிரம் (1,70,000) ரூபாவுக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அட்டாளைச்சேனையில் 100 குடும்பங்களுக்கு உலருணவுப் பொருட்கள் வழங்கிவைப்பு





(பொத்துவில் நிருபர்)

கொரோனா அச்சுறுத்தலினால் நாட்டில் ஏற்படுத்தப்பட்ட பயணத்தடை காரணமாக அட்டாளைச்சேனை கோணாவத்தை பிரதேசத்தில் வருமானத்தினை இழந்து நிர்க்கதிக்குள்ளான 100 குடும்பங்களுக்கு உலருணவுப் பொருட்களை வழங்கும் வேலைத்திட்டமொன்றை அட்டாளைச்சேனை அல்-நஜா விளையாட்டுக் கழகம் முன்னெடுத்துள்ளது.

மேற்படி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு குறித்த உலருணவுப் பொருட்களை வழங்கிவைக்கும் முதலாம் கட்ட நிகழ்வு கழகத்தின் தலைவர் எஸ்.எம்.இத்ரீஸ் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அல்-நஜா விளையாட்டுக் கழகத்தின் ஆலோசகரும், ஊடகவியலாளருமான ஏ.எல்.றியாஸ், கழகத்தின் உப தலைவர் எஸ்.எல்.எம்.முஸம்மில், முகாமையாளர் ஏ.எல்.றிம்சான் உள்ளிட்ட கழக உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

தொழிலின்றி நாளாந்த வருமானத்தை இழந்த குடும்பங்கள் மற்றும் பள்ளிவாசல்களில் கடமை புரிபவர்கள் உள்ளிட்ட 50 குடும்பங்களுக்கு இந்நிகழ்வின்போது உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

கொரோனா தாக்கத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது அலையின் போதும், அட்டாளைச்சேனை பிரதேசத்தில், பாதிக்கப்பட்டு வருமானத்தை இழந்த குடும்பங்களுக்கு அல்-நாஜா விளையாட்டுக் கழகம் உலருணவுப் பொருட்களை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# குச்சவெளி கல்லராவ கடற்கரையில் இறந்த நிலையில் கரை ஒதுங்கிய சுறா



(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை குச்சவெளி கல்லராவ கடற்கரையில் இறந்த நிலையில் சுறா ஒன்றின் உடல் கரையொதுங்கியுள்ளது.

15 அடியுடைய பெரிய சுறா ஒன்று நேற்றுக் காலை இவ்வாறு கரையொதுங்கியுள்ளது.

மீனவர்கள் இறந்த சுறாவின் உடலை அகற்றி கரைக்கு கொண்டுவந்துள்ளதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் 10இற்கும் மேற்பட்ட சுறாக்கள் உயிருடன் கரையொதுங்கியதும் குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் கிழக்கு மாகாண பிரதிப் பணிப்பாளராக ஜாபீர் நியமனம்

(சாய்ந்தமருது)



இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பாளராக கடமையாற்றிவரும் ஆதம்பாவா அப்துல் ஜாபீர் கிழக்கு மாகாணத்திற்குப் பொறுப்பான (கடமை நிறைவேற்று) பிரதிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். கிழக்கு மாகாணத்திற்கு முதன்முதலாக இப்பதவிக்கு நியமிக்கப்படும் அதிகாரியும் இவராவார்.

2010ஆம் ஆண்டு இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையில் உதவிப் பணிப்பாளராக இணைந்துகொண்ட ஜாபீர் பின்னர் 2020ஆம் ஆண்டு பிரதிப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்றார்.

இதுவரை மேற்படி அதிகாரசபையின் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலும், தலைமை அலுவலகத்திலும் கடமையாற்றியுள்ள இவர் தற்போது அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பாளராக பணிபுரிகின்ற இந்நிலையிலேயே தற்போதைய கடமைக்கு மேலதிகமாக மாகாணத்திற்கு பொறுப்பான பிரதிப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

சாய்ந்தமருதைச் சேர்ந்த ஏ.ஏ.ஜாபீர், கல்முனை சாஹிரா கல்லூரியின் பழைய மாணவரும் பேராதனை பல்கலைக்கழக விவசாய விஞ்ஞான பட்டதாரியாவர். அத்துடன், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவனத்தில் பொது நிர்வாகத்துறையில் முதுமானிப் பட்டம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு மண்முனை பகுதியில் கட்டாக்காலி கால்நடைகளால் அசௌகரியம்





(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென்எருவில்பற்று பிரதேச சபைக்குபட்பட்ட பிரதான வீதிகளில் சிலர் பொறுப்பற்ற விதத்தில் கட்டாக்காலியாக அவர்களது கால்நடைகளை விட்டுள்ளனர். அவை பகல் மற்றும் இரவு வேளைகளிலும் வீதிகளில் திரிவதனால் பிரயாணிகளும், பொதுமக்களும் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு கட்டாக்காலியாக மாடுகள், மற்றும் நாய்கள் உள்ளிட்ட கால்நடைகளை விடுபவர்களுக்கு மண்முனை தென்எருவில்பற்று பிரதேச சபையால் பலமுறை தெரிவித்தும் அவர்கள் இவ்வாறு தமது கால்நடைகள் பொறுப்பற்ற விதத்தில் விட்டுள்ளதாக பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறு கால்நடைகள் பகலில் மாத்திரமன்றி இரவு வேளைகளிலும், வீதிகளில் திரிவதனாலும், உறங்குவதனாலும், வீதி விபத்துகளும், அடிக்கடி ஏற்படுவதாக அதனை நேரில் அவதானிக்கும் வர்த்தகர்களும், தெரிவிக்கின்றனர்.

எனவே, மண்முனை தென்எருவில்பற்று பிரதேச சபையினர் இவ்வாறு கட்டாக்காலியாக கால்நடைகளை விடும் உரிமையாளர்களுக்கு எதிராக உரிய சட்டநடவடிக்கை எடுக்கப்படும் பட்சத்திலேயே இதனை தடுக்க முடியும் என்பதோடு பாதசாரிகள் தடையின்றிப் பயணிக்கவும் முடியும் எனவும் பொதுமக்களும், பிரயாணிகளும் அங்கலாய்க்கின்றனர்.

மண்முனை தென்எருவில்பற்று பிரதேச சபைக்குட்பட்ட மட்டக்களப்பு – கல்முனை பிரதான வீதி, களுவாஞ்சிக்குடி வைத்தியசாலை வீதி, பட்டிருப்பு சந்தி, மணல் வீதி, பொதுச்சந்தை பகுதி உள்ளிட்ட பல பகுதிகளிலும் இவ்வாறு கால்நடைகள் கட்டாக்காலியாக திரிவதை அவதானிக்க முடிகின்றது.

# மக்கள் ஒன்றுகூடல்களை தவிர்த்து ஒத்துழைப்பு வழங்குமாறு அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி வேண்டுகோள்

(அக்கரைப்பற்று நிருபர் – எம்.எல்.சரிப்டீன்)

பயணக்கட்டுப்பாடுகள் நீக்கப்பட்ட பின்னர் பொதுமக்கள் கொரோனா அபாயத்தை மறந்து மைதான விளையாட்டுகள், குடும்ப நிகழ்வுகள், திருமண ஒன்றுகூடல்கள், பொதுக்கூட்டங்கள் என பல நிகழ்வுகளில் கலந்து சுகாதார விதிமுறைகளை மீறிவருகின்றனர்.

இதன் காரணமாக ஏற்படும் கொரோனா தொற்றின் பரவலை கட்டுப்படுத்த இந்நிகழ்வுகளில் கலந்துகொள்பவர்களுக்கு பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜன் பரிசோதனைகளை மேற்கொள்ளவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதுடன், அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜன் பரிசோதனைகள்



மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வெளியில் செல்லும் மக்கள் சுகாதார விதிமுறைகளை பேணி முகக்கவசங்களை அணிவது கட்டாயமானதாகும். பொது நிகழ்வுகள், ஒன்றுகூடல்கள், மைதான விளையாட்டுகளில் ஈடுபடாமல் போதிய இடைவெளி பேணி, முகக்கவசம் அணிந்து சுகாதார வழிமுறைகளை பின்பற்றி நடப்பதன் மூலமே கொரோனா பரவலை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியும்.

எனவே, தொடர்ந்து அலட்சியமாக நடந்துகொள்வதை தவிர்த்து, பொறுப்புடன் நடந்து இந்த அபாயகரமான கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த ஒத்துழைப்பு வழங்குமாறும் அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி எப்.எம்.ஏ.காதர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# தமிழ் அரசியல் கைதிகள் 16 பேரை விடுதலை செய்ததுபோல் ஏனையவர்களையும் விடுவிக்க இதே மாதிரியான ஓர் அணுகுமுறையை எடுத்துக்கொள்ள வேண்டும்

## கருத்தொற்றுமைக்கான இலங்கை உடன்பாட்டு ஒன்றியம் அரசாங்கத்திடம் கோரிக்கை

(கனகராசா சரவணன்)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சந்தேகநபர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கி அவர்களை விடுவித்த ஜனாதிபதியின் தீர்மானம், உலக சமுதாயத்திற்கு பௌத்த தர்மத்தின் சமாதானம் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றின் செய்தியை ஊர்ஜிதப்படுத்தும் விதத்தில் முன்னெடுக்கப்பட்ட வரவேற்கத்தக்க ஒரு குறியீட்டுச் சம்பவமாகும். எனவே, தடுப்புக்காவலில் உள்ளவர்களை இதேமாதிரியான ஓர் அணுகுமுறையை சாதகமான விதத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென கருத்தொற்றுமைக்கான இலங்கை உடன்பாட்டிற்கான ஒன்றியம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது

கருத்தொற்றுமைக்கான இலங்கை உடன்பாட்டு ஒன்றியம் நேற்று ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

மரணதண்டனையை ஆயுள்தண்டனையாக மாற்றியமைப்பது, சர்வதேச ரீதியில் மரணதண்டனை சட்டவிரோதமாக்கப்பட்டிருக்கும் ஒரு பின்புலத்தில் தேசிய ரீதியிலும், உலகளாவிய ரீதியிலும் முக்கியத்துவம் பெறுகின்றது. கருத்தொற்றுமைக்கான இலங்கை உடன்பாட்டிற்கான ஒன்றியம், கீழே கையொப்பமிடும் உறுப்பினர்களாகிய நாங்கள், ஏனைய சம்பவங்கள் தொடர்பாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பவர்கள் தொடர்பாகவும் இதே மாதிரியான ஒரு அணுகுமுறையை சாதகமான விதத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென அரசாங்கத்திடம் வலிந்து கேட்டுக்கொள்கிறோம்.

ஒரு கொலைச் சம்பவம் தொடர்பாக நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்டு, அக்குற்றத் தீர்ப்பு உச்ச நீதிமன்றத்தினால் ஊர்ஜிதம் செய்யப்பட்டிருந்த நிலையில், சிறையில் அடைக்கப்பட்டிருந்த முன்னைய நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கும் பொது மன்னிப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

ஆனால், இந்தச் செயல், வழக்கு விசாரணைகள் எவையும் இல்லாமல், சந்தேகநபர்களுக்கு எதிராக எத்தகைய சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாத நிலையில், நீண்டகாலம் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த ஆட்கள் விடுதலைசெய்யப்பட்ட சம்பவத்திற்கு எவ்விதத்திலும் இணையாக முடியாது என்ற விடயத்தை நாங்கள் குறிப்பிட விரும்புகின்றோம். குற்றவியல் நீதித்துறையில் அரசியல் தலையீடு இடம்பெறுவதனையும், அரசியல் அல்லது ஏனைய காரணங்களின் நிமித்தம் குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கும் ஆட்களை தன்னிச்சையான முறையில் விடுதலைசெய்வதனையும் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

நீண்டகாலமாக சிறையில் அடைக்கப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சிறைக்கைதிகளை விடுதலைசெய்வதற்கான தீர்மானம், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய ஓர் உரையை அடுத்து இடம்பெற்றுள்ளது.

தான் இதுவரையில் வாழ்ந்திருக்கும் காலத்திலும் பார்க்க அதிக காலம் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் அந்த இளைஞர்களின் இளமைப்பருவத்தின் இழப்பு குறித்து அமைச்சர் அச்சந்தர்ப்பத்தில் கவலை தெரிவித்திருந்தார். அதே தினத்ததன்று நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்திய முன்னைய இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவும் 15 வருடங்களுக்கு முன்னர் யுத்த காலத்தின்போது தன்னை படுகொலைசெய்ய முயன்ற ஆட்களில் ஒருவர் தான் சிறைவாசம் அனுபவித்தபோது சிறையில் அடைக்கப்பட்டிருந்ததாகவும், அவருடைய வழக்கு நீதிமன்றத்திற்கு எடுத்து செல்லப்படாத நிலையில் அந்த நபர் இன்னமும் தொடர்ந்து சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் என்று குறிப்பிட்டதுடன், அவரை விடுவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டதனையும் நாங்கள் இங்கு பாராட்ட விரும்புகின்றோம்.

வழக்கு விசாரணை எவையும் இல்லாமல் ஆட்கள் இவ்விதம் நீண்ட காலம் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் நிலை தோன்றுவதற்கான மூல காரணம் பயங்கரவாத தடைச்சட்டமாகும். எமது பொருளாதாரத்திற்கு பெருமளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்து வரும் GSP 10 தீர்வைச் சலுகையை இலங்கைக்கு வழங்க மறுப்பது தொடர்பாக ஐரோப்பிய யூனியன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலும் இந்தச் சட்டமே மையப் புள்ளியில் இருந்துவந்துள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டம் பிடிவிறாந்துகள் இல்லாமல் ஆட்களை கைதுசெய்வதற்கு வாய்ப்பளிப்பதுடன், அவ்விதம் கைதுசெய்யப்படும் ஆட்களை, அரசாங்கம் உடன்பட்டாலேயொழிய, நீதிபதிகளிடமிருந்து பிணையை பெற்றுக்கொள்வதற்கு அறவே வாய்ப்பில்லாத ஒரு நிலையில் வைக்கின்றது.

1979ஆம் ஆண்டில் இச்சட்டம் நிறைவேற்றப்பட்ட காலம் தொடக்கம் தொடர்ந்து துஷ்பிரயோகம் மற்றும் அநீதி என்பவற்றுக்கான ஒரு மூலமாக இருந்து வந்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சந்தேகநபர்களுக்கு எதிராக மட்டுமன்றி, ஜேவிபி கிளர்ச்சிக் காலத்தின்போதும், மிக அண்மையில் உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்களின் பின்னர் சந்தேக நபர்களை சிறையில் அடைப்பதற்கும் பயங்கரவாத தடைச்சட்டமே பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், ஆட்சியிலிருக்கும் அரசாங்கத்திற்கு எதிரான விதத்தில் அரசியல் அபிப்பிராயங்களைக்கொண்டிருப்பவர்கள் தொடர்பாகவும் இச்சட்டம் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

கருத்தொற்றுமைக்கான இலங்கை உடன்பாட்டிற்கான ஒன்றியம் கீழே கையொப்பமிட்டிருக்கும் உறுப்பினர்களாகிய நாங்கள், தண்டனை விலக்குரிமையுடன் கூடிய விதத்தில் துஷ்பிரயோகங்களுக்கு இடமளித்திருக்கும் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

வழக்கு விசாரணைகள் எவையும் இல்லாமல் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தடுப்புக் காவல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறோம். இந்த அறுவறுப்பான சட்டத்தின் கீழ் நீண்ட காலம் சிறைக் கைதிகளாக இருந்து வருபவர்களை விடுவிப்பது மட்டுமன்றி, இச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

# அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கல்முனையில் மக்கள் விடுதலை முன்னணியினரால் போராட்டம்

## தீப்பந்தமேந்தி – கோஷங்களையெழுப்பி முன்னெடுப்பு






(பாறுக் ஷிஹான்)

மக்கள் விடுதலை முன்னணியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் அடங்கிய பிரமுகர்கள் அம்பாறை மாவட்டம் கல்முனை நகரில் தீப்பந்தமேந்தி போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

எரிபொருள் விலையேற்றம், அரிசி விலை, பசளை உட்பட அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு தொடர்பில் அரசுக்கு எதிரான கோஷங்களுடன் மக்கள் விடுதலை முன்னணி, அம்பாறை மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் அடங்கிய பிரமுகர்கள் தீப்பந்த போராட்டத்தை அம்பாறை மாவட்டம் கல்முனை நகரில் நேற்று முன்தினம் (28) இரவு முன்னெடுத்தனர்.

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை, கல்முனை, சாய்ந்தமருது போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவாளர்கள் ஒன்றிணைந்து அரசைக் கண்டித்து கோஷங்களையும், அமைச்சர்கள் சொகுசு வாகனங்களில் - அப்பாவி மக்கள் எண்ணெய் சட்டிக்குள், போதும் போதும் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவோம், விலை ஏற்றி ஏழைகளின் வயிற்றில் அடிக்காதே போன்ற கோஷங்களை எழுப்பி அரசை வீட்டுக்கு அனுப்புவோம் என்று குரலெழுப்பினர். இதன்போது அரிசி விலை உட்பட அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு, எரிபொருள் விலைகளை பற்றியும் பல்வேறு கோஷங்களை எழுப்பினர்.



# மட்டக்களப்பில் வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள்





(ந.குகதர்சன்)

நாடளாவிய ரீதியில் கொவிட்-19 தொற்று காரணமாக ஏற்படுத்தப்பட்டிருந்த பிரயாணத்தடையால் மட்டக்களப்பு மாவட்டத்திலும் வாழ்வாதாரத்தை இழந்த மக்களுக்கு நிவாரண உதவிகள் நேற்று முன்தினம் (28) திங்கட்கிழமை வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொவிட் பயணத்தடையால் பாதிக்கப்பட்டு மிகவும் வறிய நிலையிலுள்ள, வாழ்வாதாரத்தை இழந்த பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளரின் சொந்த நிதியிலிருந்து கடந்த சில நாட்களாக நிவாரணப் பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டு வருகின்றன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளரும், மட்டக்களப்பு மாவட்ட தமிழ்ப் பிரதேச செயலகங்களுக்குரிய அபிவிருத்திக் குழுக்களின் பிரதித் தலைவருமான பரமசிவம் சந்திரகுமாரின் சொந்த நிதியிலிருந்து குறித்த உலருணவுப் பொருட்கள் மாவட்டத்தின் சில பகுதிகளுக்கு வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

கட்டங்கட்டமாக மாவட்டம் பூராகவும் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுவரும் நிலையில், போரதீவுப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சில கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும், களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்திற்குட்பட்ட களுதாவளை கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் தெரிவுசெய்யப்பட்ட பல குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் நேற்றைய தினம் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.



இதன்போது கட்சியின் மகளிர் அணித்தலைவி திருமதி எஸ்.காந்தரூபி மற்றும் மகளிர் அணியின் உறுப்பினர்கள் உள்ளிட்ட கட்சியின் முக்கிய பிரமுகர்களும் கலந்துகொண்டிருந்ததுடன், நிவாரண உதவிகளையும் வழங்கிவைத்திருந்தனர்.

# ஒந்தாச்சிமட கடற்கரையில் மற்றொரு கடலாமை இறந்த நிலையில் மீட்பு



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு – ஒந்தாச்சிமடம் கடற்கரையில் இறந்த நிலையில் மற்றுமொரு கடல் ஆமை கரையொதுங்கியுள்ளது.

அண்மைக்காலமாக கிழக்குக் கடற்கரையிலும் கடல்வாழ் உயிரினங்கள் இறந்த நிலையில் கரையொதுங்கி வருகின்ற நிலையில், நேற்று முன்தினம் (28) மாலை மட்டக்களப்பு மாவட்டம் ஒந்தாச்சிமடம் கடற்கரையில், இறந்த நிலையில் கடல் ஆமையொன்று கரை ஒதுங்கியுள்ளது.

இதுதொடர்பில் வெல்லாவெளி வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினருக்கு தெரியப்படுத்தியதை அடுத்து, அதன் உத்தியோகத்தர்கள் ஸ்தலத்திற்கு விஜயம் செய்து, ஆமையின் உடலைப் பார்வையிட்டு பரிசோதனைகளுக்காக எடுத்துச் சென்றுள்ளனர்.

# பாலமுனை – அட்டாளைச்சேனை கடற்கரை வீதி புனரமைப்புப் பணிகள் ஆரம்பித்து வைப்பு



(கே.எ.ஹமிட்)

ஒலுவில், பாலமுனை தொடக்கம் அட்டாளைச்சேனை வரையிலான கடற்கரை வீதிகளுக்கு காபட் இடும் பணி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நாட்டிலுள்ள ஒரு இலட்சம் கிலோ மீற்றர் வீதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் 41 மில்லியன் ரூபா செலவில் ஒலுவில், பாலமுனை தொடக்கம் அட்டாளைச்சேனை வரையிலான கடற்கரை வீதிகளுக்கு காபட் இடும் வேலைத்திட்டம் நேற்று முன்தினம் (28) நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வானது பாலமுனை பிரதேசத்தின் மின்ஹாஜ் வட்டாரத்தின் செயற்பாட்டாளர் எம்.ஏ.அபூபக்கர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை மற்றும் அட்டாளைச்சேனை பிரதேச சபை தவிசாளர் ஏ.எல.எம்.அமானுல்லாஹ், உப தவிசாளர் எஸ்.எம்.எம்.ஹனிபா ஆகியோர் உட்பட மேலும் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.



கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கிவைப்பு



(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை பொது மருத்துவமனையில் ஸ்ட்ரீட் சைல்ட் (STREET CHILD) நிறுவனத்தின் அனுசரணையுடன் ஜனாதிபதி செயலணியின் திருகோணமலை மாவட்ட கொவிட்-19 பதிலிறுத்தலுக்கான இணைப்பாளர் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் சம்மேளனத்தினுடாகவும் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான சில மருத்துவம் சாராத உபகரணப்பொருட்கள், திருகோணமலை பொது மருத்துவமனைப் பணிப்பாளர் டொக்டர் ஜகத் விக்ரமரத்னவிடம், திருகோணமலை மாவட்ட கொவிட்-19 பதிலிறுத்தலுக்கான இணைப்பாளர் டொக்டர் என்.ரவிச்சந்திரன் மற்றும் ஸ்ட்ரீட் சைல்ட் திட்ட முகாமையாளர் அ.கஜேந்திரன் ஆகியோரது கரங்களால் நன்கொடையாக வழங்கிவைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் ஜனாதிபதி செயலணியின் கொவிட்-19 பதிலிறுத்தலுக்கான திருகோணமலை மாவட்ட இணைப்பாளரும், திருகோணமலை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் சம்மேளனத் தலைவருமான டொக்டர் என். ரவிச்சந்திரனுடன், திருகோணமலை பொது மருத்துவமனை பணிப்பாளர் டொக்டர் ஜகத் விக்ரமரத்ன, ஸ்ட்ரீட் சைல்ட் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் அ.கஜேந்திரன், அதே நிறுவனத்தின் தொண்டர் சேவையாளர் என்.பிருந்தாவனன் மற்றும் பொது மருத்துவமனையை சேர்ந்த டொக்டர் ஜீ.பெர்னாட், டொக்டர் நசாயா, தாதி உத்தியோகத்தர் விமலசாந்தன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# திருகோணமலை – சாந்திபுரம் வீதியை புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை



(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை - சாந்திபுரம் வீதியை புனரமைத்துத் தருமாறு அப்பகுதியிலுள்ள மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருகோணமலை - ஹொரவப்பொத்தானை பிரதான வீதியில் சாந்திபுரம் கிராமம் அமைந்துள்ளது. கடந்த யுத்த காலத்தின்போது சொந்த இடங்களை விட்டுச்சென்று, மீண்டும் பூர்வீக இடத்தை நோக்கி வந்த இக்கிராம விவசாய மக்கள், மீள்குடியேற்றப்பட்ட இக்கிராமத்தில் தமது சொந்த வீடுகளுக்கு செல்வதற்காக பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும், அவசர நேரத்தின்போது கர்ப்பிணித் தாய்மாரைக் கூட வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் காலங்களில் மாத்திரம் அரசியல்வாதிகள் தமது பிரதேசங்களுக்கு வருகை தந்து, தமக்குரிய முக்கிய தேவைகளான வீதிப் புனரமைப்பு மற்றும் இதர தேவைகளை நிறைவேற்றித் தருவதாக கூறிச்சென்ற போதிலும், மழைக்காலங்களில் வீதியில் மழைநீர் தேங்கி நிற்கும் சந்தர்ப்பத்தில் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வரும் பட்சத்தில், அதிகாரிகள் கண்டும் காணாதது போல் செயற்பட்டு வருவதாகவும் கிராம மக்கள் தங்களது கவலையை வெளிப்படுத்தியுள்ளனர்.

மொரவெவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சாந்திபுரம் கிராமத்திற்கு செல்லும் வீதி மோசமாக பாதிக்கப்பட்டு காணப்படுகின்ற நிலையில், குறித்த வீதியை அவசரமாக புனரமைத்து தருவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனவும் அப்பகுதியிலுள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# கடல்சார் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையமொன்று அமைக்கப்படவேண்டியது அவசியம்

## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பான விசேட கலந்துரையாடலில் நீதியமைச்சர் தெரிவிப்பு




எக்பிரஸ் பேர்ள் கப்பலினால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு இழப்பீடுகளை பெற்றுக் கொள்வதற்கான பணிகள் விரைவுபடுத்தப் பட்டுள்ளதாகவும், நாட்டில் கடல்சார் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையமொன்று அமைக்கப்பட வேண்டியது அவசியமென்றும் நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தினால் நாட்டுக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல் மற்றும் பாதிப்பு தொடர்பில் இலங்கை அரசாங்கத்தால் இதுவரையில் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவுப்படுத்துல் மற்றும் சர்வதேச நிபுணர்களின் உதவியை பெற்றுக்கொள்வதற்காக சர்வதேச அமைப்பு மற்றும் வெளிநாட்டு சர்வதேச அமைப்பு ஆகியவற்றுடனான விசேட கலந்துரையாடல் சூம் தொழில்நுட்பத்தினூடாக நீதியமைச்சர் அலி சப்ரி தலைமையில் நேற்று நீதியமைச்சின் காரியாலயத்தில் இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இந்த கலந்துரையாடலில் இராஜாங்க அமைச்சர் கலாநிதி நாலக கொடஹேவா, இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜயசேகர மற்றும் சட்டமா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்ஜெய் ராஜரட்ணம் ஆகியோர் இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீப்பரவல் காரணமாக நாட்டுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கான இழப்பீட்டை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகளுக்காக சர்வதேச நிபுணர்களின் உதவி அவசியமாகும்.

இந்தக் கப்பல் இவ்வாறு விபத்துக்குள்ளாகியமையினால் மீனவ மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு காரணமாக அவர்களின் வாழ்வாதாரத்தை வழமைக்குக் கொண்டு வரும் நடவடிக்கைகள் ஜனாதிபதியின் ஆலோசனைக்காக விரைவுபடுத்தப் பட்டுள்ளன. குறுகிய, மத்திய மற்றும் நீண்ட கால அடிப்படையில் இதனால் ஏற்பட்ட பாதிப்புகளை சரிசெய்து கொள்ளுதல் மற்றும் அனைத்து சுற்றுச்சூழல் கட்டமைப்பையும் இயல்புநிலைக்கு கொண்டு வருவதற்கு சர்வதேச நிபுணர்களின் உதவி கட்டாயமானதாகும். அதேபோன்று கடல்சார் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையமொன்றை அமைக்க வேண்டியதும் முக்கியமாகும் என்றார்.

இச்சந்திப்பில், துறைமுக அதிகார சபையின் தலைவர் கெப்டன் நிஹால் கெப்பெட்டபொல, இழப்பீடு பெற்றுக்கொள்வது தொடர்பில் சட்ட ஆய்வுகளை மேற்கொள்வதற்கான குழுவின் தலைவர் சட்டத்தரணி சந்தக ஜயசுந்தர, எக்பிரஸ் பேர்ள் கப்பலினால் ஏற்பட்ட பாதிப்பு தொடர்பில் ஆய்வு செய்தல் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழுவின் பிரதானி ஹசன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.




நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்றுள்ள முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆசி வேண்டி புத்தளம் ஸ்ரீ பத்தினி அம்மன் கோவிலில் விசேட பூஜையொன்று இடம்பெற்றது. புத்தளம் தொகுதி ஐ.தே.கட்சி அமைப்பாளர் மோசஸ் ஜேசுதாசன் இந்த பூஜையை ஏற்பாடு செய்திருந்தார். (படங்கள் - புத்தளம் நிருபர்)

# நடுத்தர தொழில்முனைவோரின் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை ஆராய்வதற்கு எதிர்பார்ப்பு!



இலங்கைக்கான அமெரிக்க தூதர், அலைனா பி.டெப்லிட்ஸுக்கும் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரும், டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான நாமல் ராஜபக்ஷவுக்குமிடையிலான கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.

இதன்போது, இலங்கையில் டிஜிட்டல் மயமாக்கல் மூலம் கிடைக்கும் வாய்ப்புகள் மற்றும் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை கட்டியெழுப்பும் வழிகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், நாட்டில் முதலீட்டு வாய்ப்புகளை அதிகரிப்பதோடு, சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோரின் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை ஆராய்வதற்கு எதிர்பார்ப் பதாகவும், இதுதொடர்பில் கலந்துரையாடப் பட்டதாகவும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# துமிந்த சில்வாவின் விடுதலையைக் காரணம் காட்டி அரசாங்கத்தை விமர்சிக்க முடியாது

## ஜகத் குமார எம்.பி. சுட்டிக்காட்டு



துமிந்த சில்வாவின் விடுதலையை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கத்தை விமர்சிக்க முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார நேற்று தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இன்று எதிர்க்கட்சியினர் சிறிய விடயங்களைப் பிடித்துக்கொண்டு அரசியல் செய்கின்றனர். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கருத்து வெளியிடுவதுபோல் சரியான விடயத்தையும் அவர் செய்துகாட்டுகின்றார். அதனை 69 இலட்ச மக்களும் அதனை ஏற்றுக்கொண்டாலும் எதிர்கட்சியினர் ஏற்றுக்கொள்வதாக இல்லை.

துமிந்த சில்வாவுடன் இன்னும் சிலர் விடுதலை செய்யப்பட்டனர். அவர்களில் பலர் நாட்டில் பயங்கரவாத தாக்குதலை நடத்தியவர்கள். நாட்டை அழித்து இரண்டாகப் பிளவடையச் செய்ய முயற்சித்தவர்கள். இருப்பினும் அரசியலமைப்பிற்கமைய ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில்கூட சில ஆளுநர் களுக்கும் பொதுமன்னிப்பளிக்கப் பட்டது. அவ்வாறு விடுதலை கொடுத்தவர்களே இன்று எம்மைப் பற்றி விமர்சிக்கின்றனர். இதனை அறியாமல் அமெரிக்கத் தூதுவர் விமர்சம் வெளியிட்டுள்ளார். ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலை குறித்து ஜனாதிபதியின் கால்களில் விழாத குறையாக முயற்சித்தவர்கள் இன்று துமிந்த சில்வாவுக்கு வழங்கப்பட்ட பொதுமன்னிப்பை எதிர்க்கின்றனர். இதுதொடர்பில் எம்மை விமர்சிக்க முடியாது.

எமது அரசாங்கம் சுயாதீனமானது. முன்னாள் ஜனாதிபதி மைத்தரிபால சிறிசேனவும் ரோயல் பார்க் படுகொலை வழக்கில் ஒருவரை பொதுமன்னிப்பின் கீழ் விடுவித்தார். இந்த நிலையில், ஊழல் மோசடியாளர்களுக்கு ஜனாதிபதி விடுதலையளிக்கவில்லை. அன்று ரஞ்சன் உள்ளிட்டவர்கள், நீதிமன்றக் கட்டமைப்பிற்கு அழுத்தம் கொடுத்தமை உள்ளிட்ட யுகத்திற்கு நாட்டை மீண்டும் போகச்செய்ய இடமளிக்கப்பட மாட்டாது. ரணில் விக்கிரம சிங்கவின் கட்சியிலிருந்து எவரையும் மக்கள் நாடாளுமன்றத்திற்கு அனுப்பவில்லை. சில மாதங்களில்தான் அவரே நாட்டுத்தலைவராவதற்கு தகுதியுடையவர் என்று ஐக்கிய தேசியக்கட்சியினர் தெரிவிப்பதானது மிகப்பெரிய நகைச்சுவையாகும். அவர் எல்லா பக்கங்களிலும் தோல்வியடைந்தவர்.

அந்த வகையில் அடுத்த ஜனாதிபதி தேர்தலிலும் ரணிலை தெரிவுசெய்ய மக்கள் சிந்திக்கமாட்டார்கள். அந்த வகையில் இந்த வருடத்திற்குள் 65 வீதமானவர்களுக்கு தடுப்பூசி அளிக்கப்படும். அபிவிருத்திப் பணிகள் உட்பட எதிர்காலத் திட்டத்திற்குத் தலைமை பெறவே பெசில் ராஜபக்ஷ மீண்டும் வருகின்றார். 2015ஆம் ஆண்டில் மஹிந்த ராஜபக்ஷ குறித்து மக்கள் மத்தியில் பொய்யான விடயங்களைப் பரப்பியமைக்காகவே அன்று அரசாங்கத்தை தோல்வியடையச் செய்ய நேரிட்டது. குற்றச்சாட்டுக்களை முன்வைக்கலாம். அவற்றை நிரூபிப்பது கடினமாகும். 7.3 வீத பொருளாதார வளர்ச்சி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் இருந்த போதிலும், 2015ஆம் ஆண்டில் மாற்றத்தை செய்ய முடியாமல் போனதால் மக்கள் மீண்டும் எம்மை சுற்றிக்கொண்டனர்.

கிராம மக்களும் பெசில் ராஜபக்ஷவை கேட்கின்றனர். அவரது பணிகளை 2015 இற்கு முன்னதாக மக்கள் கண்டார்கள். இன்று காணப்படுகின்ற நிலைமையில் அவர் நாடாளுமன்றத்திற்கு வருவார் என்று தெரிவித்தார்.

# நூரியில் புதிய பொலிஸ் நிலையம் திறந்து வைப்பு

சீதாவக்க பிரிவுக்குட்பட்ட எட்டாவது பொலிஸ் நிலையமாக தெரணியகலை, நூரி பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கம்பனித் தோட்டங் களைச் சீர்திருத்தல்,பெருந்தோட்ட தொழிற்சாலைகளை நவீனமயப் படுத்தல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிகிரி கொப்பேகடுவ, மாவட்ட அரசியல் பிரமுகர்கள், சப்ரகமுவ மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.




# வேகக் கட்டுப்பாட்டை இழந்ததால் முச்சக்கர வண்டி விபத்து



(பலாங்கொடை)

பலாங்கொடை, எல்லபோல பிரதேசத்தில் நேற்று (29) காலை வேகக் கட்டுப்பாட்டை இழந்தமையினால் முச்சக்கர வண்டியொன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

பதுளை - கொழும்பு பிரதான வீதியில் பலாங் கொடை எல்லபோல பிரதேசத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து ஏற்படும்போது முச்சக்கர வண்டியில் சாரதி மாத்திரமே பயணித்துள் ளதுடன், சாரதி உயிர் தப்பியதாக பலாங் கொடை பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் முச்சக்கர வண்டி பாரியளவில் சேதமாகி யுள்ளது.

# வெலிமடையில் இரு பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவுகளுக்கு புதிய கட்டடங்கள்

## ஆளுநர் முஸம்மில் தலைமையில் அடிக்கல் நாட்டல்




வெலிமடை முஸ்லிம் மகா வித்தியாலயம் மற்றும் வெலிமடை விஜய மகா வித்தியாலயம் ஆகியவற்றின் ஆரம்பப் பிரிவுகளுக்கு புதிய இரண்டு மாடிக் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் தலைமையில் இடம்பெற்றது.

இதற்கமைய சுமார் 100 மில்லியன் ரூபா செலவில் குறித்த இரு பாடசாலைகளுக்கும் 110 x 25 அளவிலான இரண்டு மாடிக் கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது. எதிர்வரும் 6 மாத காலத்தினுள் இரு கட்டடங்களினதும் கட்டுப்பணப்பணிகளை நிறைவு செய்து, அடுத்த வருடத்திற்கான ஆரம்பப் பிரிவை புதிய கட்டடத்தில் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகே, நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக, ஊவா மாகாண சபையின் தலைவர் ஏ.எம்.பூத்ததாஸ, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாமிக பூத்ததாஸ, வெலிமடை பிரதேச சபை தலைவர் எஸ்.ஏ.ஆர். பந்துசேன, வெலிமடை பொதுஜன பெரமுன அமைப்பாளர் சம்பத் ஜயசுந்தர, மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சந்தியா அபன்வெல, ஆளுநரின் செயலாளர் எம்.எம்.விஜயநாயக உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 455 பேர் கைது

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் நேற்றுக் காலை வரையான 24 மணித்தியாலத்தில் 455 பேர் கைதுசெய்யப் பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட் டுள்ளதாவது,

பயணக் கட்டுப்பாடு நீக்கப்பட்டிருக்கின்ற போதிலும் மக்கள் தனிமைப்படுத்தல் சட்டங்களுக்குட்பட்டிருக்க வேண்டும். இது தொடர்பான நடைமுறைகள் சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் கடந்த 20 ஆம் திகதி வெளியிடப்பட்டன.

அதனடிப்படையில் இதுவரையில் தனிமைப் படுத்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் 45 ஆயிரத்து 99 பேர் கைதுசெய்யப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.






தனியார் பல்கலைக்கழகங்களை சட்டத்துக்குட்படுத்துமாறு கோரியும், கல்வியை இராணுவமயமாக்கும் கொத்தலாவல சட்டத்தை இல்லாதொழிக்குமாறு தெரிவித்தும், முன்னிலை சோஷலிச கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் நேற்று கண்டி, பொலன்னறுவை, கதுருவல மற்றும் தங்கல்லை ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்றன.

# இருவேறு தொழிற்சாலைகளில் 103 பேருக்கு கொரோனா தொற்று

## நோயாளர்களுடன் தொடர்பு பேணியவர்களைத் தேடி விசாரணைகள் ஆரம்பம்



(ஜூட் சமந்த)

சிலாபம் - கீரியன்கல்லிய பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் 21 பணியாளர்களுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக முந்தல் சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட 21 பேரும் சிகிச்சை மத்திய நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் முதல்நிலை தொடர்பாளர்களைத் தேடி விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவிக்கின்றனர்

இதேவேளை, புத்தளம், மதுரன்குளி பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் பீங்கான் வகையான பொருட்களை உற்பத்திசெய்யும் தொழிற்சாலையில் 40 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக முந்தல் சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயம் தெரிவித்துள்ளது.

இந்த நோயாளர்களின் முதல்நிலை தொடர்பாளர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் மேலும் 42 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கிவைப்பு



(அஷ்ரப் ஏ சமத்)

கொழும்பிலுள்ள ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தூதரகத்தினால் வழங்கப்பட்ட உலருணவுப் பொதிகள் அமைச்சர் சரத் வீரசேகர மற்றும் அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்தன ஆகியோரினால் கொவிட்- 19 தொற்றுப்பரவல் மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களிடம் கையளிக்கப்பட்டன.




களுத்துறை மற்றும் கொழும்பு மாவட்ட மக்களுக்காக இந்த உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நன்கொடைகள் டுபாயிலுள்ள டார் அல்பர் சங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

கொலன்னாவ மற்றும் வெல்லம்பிட்டி ஆகிய பிரதேசங்களில் வெள்ளத்தினாலும் கொவிட்-19 வைரஸ் தொற்றினாலும் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்த மக்களுக்கும் களுத்துறை மாவட்ட மக்களுக்கும் நேரடியாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிகாரிகளும் அமைச்சர்களும் இந்த உலருணவுப் பொதிகளை வழங்கினர்.

# உயிரிழந்த நிலையில் கடலாமை மீட்பு



ஆராச்சிக்கட்டுவ - முதுபந்திய தீவுப்பகுதியில் உயிரிழந்த நிலையில் கடலாமையொன்றின் சடலம் மீட்கப்பட்டதாக அந்த பிரதேச மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்தினம் இந்த ஆமையின் சடலம் கரையொதுங்கியுள்ளது. இவ்வாறு உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்ட கடலாமையின் சடலம் ஆனவிலுந்தாவ வனஜீவராசிகள் அதிகாரிகளிடம் ஒப்படைக்க முதுபந்திய தீவைச் சேர்ந்த மீனவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# புத்தளம் மாவட்டத்துக்கு புதிய செயலாளர் நியமனம்



(வீரசொக்கன், அப்துல் நமாஸ்)

புத்தளம் மாவட்டத்தின் புதிய மாவட்ட செயலாளராக உள்நாட்டு அமைச்சின் மேலதிக செயலாளராக கடமையாற்றிய கே.ஜி.விஜேசிறி நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இலங்கை பரிபாலன சேவையில் கடந்த 3 வருட காலமாக கடமையாற்றி வந்த சிரேஷ்ட உத்தியோகத்தர் ஆவர்.

இவர் 1998ஆம் ஆண்டு கடற்றொழில் அமைச்சின் உதவிப் பணிப்பாளராக கடமையாற்றியுள்ளதுடன் வெலிகம உதவி பிரதேச செயலாளராக இருந்துள்ளார்.

புத்தளம் மாவட்டம் புதிய செயலாளராக பதவியேற்பதற்கு முன் உதவி பிரதேச செயலாளராகவும் ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட உதவிச் செயலாளராகவும் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

# காட்டு யானை தாக்கி பெண் பலி

**(ஜூட் சமந்த)**

**காட்டு யானை தாக்கி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக நவகத்தேகம பொலிஸார் தெரிவித்தனர்.**

**நவத்தேகம, ரச்சிராகம, மலீகமயைச் சேர்ந்த எம்.எம்.ரம்மெனிக (78 வயது) என்றழைக்கப்படுவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.**

**இவ்வாறு காட்டு யானை தாக்கலுக்குள்ளான பெண், வீட்டில் தனியாக இருந்துள்ளதுடன் நேற்றுக் காலை 4 மணியளவில் வீட்டிலிருந்து வெளியே வந்துள்ளார். அந்தச் சந்தர்ப்பத்தில் அவர் இவ்வாறு யானையால் தாக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். தாக்குதலுக்குள்ளான பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.**

# வீதி விபத்தில் காயங்களுக்குள்ளான பொலிஸ் அதிகாரியொருவர் வைத்தியசாலையில் அனுமதி




மோட்டார் சைக்கிள் மற்றும் லொறியொன்றும் மோதி இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் அதிகாரியொருவர் காயங்களுக்குள்ளான நிலையில் ஆனமடுவ மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் ஆனமடுவ - சிலாபம் வீதியில் வெந்தகாடுவ பிரதேசத்தில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

நுரைச்சோலை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் உப பொலிஸ் பரிசோதகர் ஜயரத்ன என்பவரே இவ்வாறு விபத்துகளாகியுள்ளார்.

இவ்வாறு காயங்களுக்குள்ளாகியுள்ள உப பொலிஸ் பரிசோதகர் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்துள்ளார்.

இதன்போது, வீதியோரத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த லொறியின் பின்னால் மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பில் பல்லம பொலிஸ் போக்குவரத்து பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



**இந்தியாவின் கொவிஷீல்ட் தடுப்பூசிகள் வழங்கப்பட்டவர்களுக்கு ஜிந்துப்பிட்டி அரச வைத்தியசாலையில் பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜன் பரிசோதனைகள் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டன. (படங்கள் - ஏ.எஸ்.எம்.ஜாவித்)**

# இலங்கை - அமெரிக்கா - ஜப்பான் ஆகியவற்றுக்கிடையிலான கடற்படைகளின் கூட்டுப்பயிற்சிகள் திருகோணமலையில்!

## இன்று இறுதி நாள் பயிற்சிகள்



இலங்கை, அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் கடற்படையினர் பங்குகொள்ளும் நீர்வழி தயார்நிலை, ஒத்துழைப்பு மற்றும் பயிற்சி தொடர்பான கூட்டுப் பயிற்சி நடவடிக்கையின் இரண்டாவது கட்டம் திருகோணமலை கடற்பரப்பில் கடந்த 26ஆம் திகதி ஆரம்பமானதாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த கூட்டுப் பயிற்சியில் இலங்கை கடற்படையின் ஆழ்கடல் ரோந்து கப்பல்களான சயுரல, கஜபாஹு ஆகிய கப்பல்களும் இலங்கை விமானப்படையின் பெல் 212,412 ரக ஹெலிகொப்டர்கள், டீ 200 ரக பீச் கிராப்ட் விமானம், அமெரிக்காவின் 7ஆவது கடற்படை குழுமத்திற்கு சொந்தமான யூஎஸ்எஸ் சார்ள்ஸ்டன் கப்பல் என்பன பங்குகொள்வதாக கடற்படை மேலும் தெரிவித்துள்ளது.

இதற்கு மேலதிகமாக இந்த கூட்டுப் பயிற்சியில் வான் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக அமெரிக்கவின் 7ஆவது கடற்படை குழுமத்துக்கு சொந்தமான பி-8 பொசிடன் போயிங் ரக கடல் சார் ரோந்து விமானம் மற்றும் எஸ்எச்-60 ரக ஹெலிகொப்டர் என ஆகியன பங்குகொள்வதாக கடற்படைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கூட்டுப் பயிற்சியில் பிராந்திய தந்திரோபாயங்கள் மற்றும் இராக்கால தொடர் பயிற்சிகளின் போதான கடல் அணுகுமுறைகள், சோதனை நடவடிக்கைகள் என்பன கடந்த 26ஆம் திகதி இடம்பெற்ற அதேவேளை, கடந்த 27ஆம் திகதி இடைவெட்டு பயிற்சிகள் மற்றும் இடைமறிப்பு பயிற்சிகள் தொடர்பான கூட்டு பயிற்சிகள் செயற்படுத்தப்படவுள்ளதாக கடற்படை தகவல்கள் தெரிவிக்கின்றன.

கப்பலில் தரையிறங்குவது தொடர்பான பயிற்சிகளில் சார்ள்டன் அமெரிக்க கடற்படைக் கப்பலின் எம்எச் 60 எஸ் ஹெலிகொப்டர் மற்றும் விமானப்படையின் பெல் 212 ரக ஹெலிகொப்டர் என்பன கஜபாகு கடற்படைக் கப்பலில் தரையிறங்கவுள்ள அதேவேளை, அமெரிக்க கடற்படைக் கப்பலின் எம்எச் 60எஸ் ஹெலிகொப்டர், விமானப்படையின் பெல் 412 ஹெலிகொப்டர் என்பன சயுரல கடற்படை கப்பலில் குறுக்கு தரையிறக்கம் செய்யப்பட உள்ளன.

இதேவேளை, இந்த கூட்டுப் பயிற்சியின் அடுத்தகட்டமாக தடங்களை கண்டறியும் பயிற்சி நடவடிக்கை நாளை தொடரவுள்ளது. இதில் இலங்கை கடற்படையின் ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களான சயுரல மற்றும் கஜபாகு என்பனவும் இலங்கை விமானப்படையின் டீ 200 ரக பீச் கிராப்ட் விமானமும், அமெரிக்காவின் 7ஆவது கடற்படை குழுமத்திற்கு சொந்தமான யூஎஸ்எஸ் சார்ள்ஸ்டன் கப்பலும் பி-8 பொசிடன் போயிங் கடல்சார் ரோந்து விமானமும் ஜப்பான் கடற்படையின் ஜேடிஎஸ் யூகிரி நாசகாரி கப்பலும் எம் எச் -60ஆர் ஹெலிகொப்டரும் பங்குபற்றும் என எதிர்பார்ப்பதாக கடற்படை மேலும் தெரிவித்துள்ளது.

பல்தரப்பு கடற்படைகளின் இந்த கூட்டுப்பயிற்சி, இலங்கை கடற்படையின் எதிர்கால நடவடிக்கைகளில் பயனளிக்கத்தக்க நவீன அறிவு, தந்திரோபாயங்கள் மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதற்கான வாய்ப்பையும் வழங்கவுள்ளது.

எதிர்வரும் 30ஆம் திகதிவரை இடம்பெறவுள்ள இந்த பல பரபரப்பு கடற்படை கூட்டுப் பயிற்சி, சுகாதார வழிமுறைகளுக்கமைய முன்னெடுக்கப்படுகின்றதாக கடற்படை உறுதிப்படுத்தியுள்ளது.



**தேயிலை செடிகளுக்கான உரத்தைப் பெற்றுக்கொடுக்குமாறு கோரி நெலுவ பிரதேசத்தில் நேற்று சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்கவும் கலந்துகொண்டார்.**

# சீன நிறுவனத்திற்கு வடக்கில் கடலட்டை வளர்ப்பதற்கு நல்லாட்சி அரசே அனுமதி வழங்கியது

## கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(கிளிநொச்சி நிருபர்)

கடந்த நல்லாட்சி காலத்தில் அரியாலையில் சீன நிறுவனம் கடலட்டை வளர்க்க அனுமதி வழங்கப்பட்டது. இதன் ஒரு பிரிவுதான் தற்போது கௌதாரிமுனையில் இயங்கி வருகிறது. அந்தப் பகுதி கடற்றொழிலாளர் சங்கத்துடன் கதைத்து செய்வதாகத்தான் ஒரு கதையுள்ளது. சீன நிறுவனத்துடனான உடன்படிக்கையில் கௌதாரிமுனை மீனவர்கள் கையொப்பமிட்டிருக்காவிட்டாலும், அவர்களுக்கு சீன நிறுவனம் தனிப்பட்ட ரீதியில் ஏதும் வழங்கியதோ தெரியவில்லை – என கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

பூநகரி, கௌதாரிமுனையில் சீன நிறுவனமொன்று சட்டவிரோதமாக கடலட்டை வளர்ப்பதாக எழுந்துள்ள சர்ச்சை தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்து தெரிவிக்கையிலேயே இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அதில் ஒரு குழப்பம் ஒன்றுள்ளது. அவை சொல்லினம் அந்த திணைக்களத்தின் அனுமதி எடுத்ததாக. செய்தியில் சொன்னதுதான் எனக்கு தெரியும். நான் இந்த கிழமை அங்கு வருவேன். நேரில் வந்து பார்த்த பின்னரே என்னால் முடிவெடுக்க முடியும்.

கடற்றொழில் அமைச்சின் நட்டா நிறுவனத்தின் அனுமதி பெற்றே வந்துள்ளதாக சொல்லப்படுகிறது. யாழ்ப்பாணம் அரியாலையில் கடந்த ஆட்சியில் இந்த நிறுவனம் செயற்பட தொடங்கியது. அதன் ஒரு பிரிவுதான்- கௌதாரிமுனை கடற்றொழிலாளர் சங்கத்துடன் கதைத்து செய்வதாகத்தான் அந்த கதையுள்ளது. நான் அங்கு நேரில் வந்து பார்த்துவிட்டுத்தான் என்ன செய்யலாமென்பதை யோசிக்கிறேன்.



கௌதாரிமுனை கடலட்டை பண்ணை ஒப்பந்தத்தில், கடற்றொழிலாளர் சங்கங்கள் இதுவரை ஒப்பமிடவில்லை, எனினும், பண்ணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது பற்றி கேள்வியெழுப்பப்பட்டபோது, அந்த ஒப்பந்தத்தில் அவர்கள் ஒப்பமிடாவிட்டாலும், சீன நிறுவனம் தனிப்பட்ட ரீதியில் எதுவும் வழங்கியதோ தெரியவில்லை. ஏனெனில், அவர்களின் ஒத்துழைப்பில்லாமல் அங்கு கடலட்டை பண்ணையை ஆரம்பித்திருக்க முடியாது.

பக்கத்து கிராம மக்களே, இந்த பகுதி மக்களின் அனுமதியில்லாமல் ஒன்றும் செய்ய முடியாது என்ற நிலையில், இந்த பண்ணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்றால், அந்த பகுதி கடற்றொழிலாளர் சங்கத்தினதோ அல்லது அதன் ஒரு பகுதியினதோ ஏதோ ஒருவிதமான அங்கீகாரம் இருந்திருக்க வேண்டும்.

நேரில் வந்து பார்த்துவிட்டுத்தான் கதைப்பது நல்லதென நினைக்கிறேன். ஊடகங்கள் சுயலாப அடிப்படையில், உள்நோக்கத்தினடிப்படையில் இதில் பல விடயங்களை வெளியிடுகிறார்கள் - என்றார்.

# எரிபொருள் விலையேற்றத்திற்கு எதிராக கண்டன சைக்கிள் பேரணி









எரிபொருள் விலையேற்றம் மற்றும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்தி எதிர்ப்பை வெளியிட்டு யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு முன்பாக இருந்து கண்டன சைக்கிள் பேரணி நேற்றுக் காலை இடம்பெற்றது.

வடக்கு மீனவர் சமாசம் மற்றும் மானிப்பாய் பிரதேச சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இப்பேரணியில் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், இலங்கை தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மற்றும் வலி. தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் அ.ஜெபநேசன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், சாவகச்சேரி முன்னாள் நகர சபை உறுப்பினர் ஞா.கிஷோர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலரும் இப்பேரணியில் கலந்துகொண்டிருந்தனர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக முன்றலில் ஆரம்பித்த இப்பேரணி மானிப்பாய் பிரதேச சபை முன்றலில் நிறைவடைந்தது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# யாழில் கொரோனா தொற்று அதிகரிப்பு; ஏனைய மாவட்டங்களில் குறைவு

யாழ்ப்பாணத்தில் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர் தொகை தொடர்ந்து அதிகரித்து வருகின்ற அதேவேளை, ஏனைய மாவட்டங்களில் தொற்று நோய் குறைந்து வருவது சுகாதார அமைச்சின் அண்மைய தரவுகளிலிருந்து தெரியவருகிறது.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமையும் 121 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டது.

அதேவேளை, முல்லைத்தீவில் -06, வவுனியாவில் - 09, மன்னாரில் - 03 மற்றும் கிளிநொச்சியில் - 02 பேருக்கே நேற்று முன்தினம் தொற்று உறுதிசெய்யப்பட்டதாக கொவிட் 19 பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான தேசிய செயலணி நேற்றுக் காலை வெளியிட்டுள்ள தொற்று நோய் நாளாந்த நிலைவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றுடன் வடக்கில் மொத்தம் 141 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளது.

புதிய தொற்று நோயாளர்களுடன் யாழ்ப்பாணத்தில் இதுவரை தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 5,760ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் கிளிநொச்சியில் – 1,421, முல்லைத்தீவில் - 1,286, வவுனியாவில் - 1,417, மன்னாரில் - 941 பேருக்கு இதுவரை தொற்று உறுதியாகியுள்ளதாகவும் கொவிட் - 19 பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான தேசிய செயலணி விடுத்துள்ள புள்ளிவிபர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பருத்தித்துறையில் ஒரே குடும்பத்தில் 15 பேருக்கு தொற்று உறுதி

யாழ்ப்பாணம் வடமராட்சி - பருத்தித்துறையில் ஒரே குடும்பத்தில் 15 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ள நிலையில், அப்பகுதியில் மேலும் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுகாதார தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்டு முன்னதாக தொற்றாளராக அடையாளம் காணப்பட்ட ஒருவருடன் தொடர்புபட்டு, தும்பளை - கணக்கிலாவத்தை பகுதியில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஒரே குடும்பப் பின்னணி கொண்ட

5 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

இவ்வாறு தனிமைப்படுத்தப் பட்டிருந்தவர்களிடமிருந்து பெறப்பட்ட மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதில் 15 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து இவ்வாறு தொற்று உறுதிசெய்யப்பட்டவர்களை கொரோனா சிறப்பு சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பிவைக்கும் நடவடிக்கையை பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, குறித்த தொற்றாளர்களது குடியிருப்புக்கு அண்மையாக உள்ள வீட்டில் வசிக்கும் சிலருக்கு காய்ச்சல் உள்ளிட்ட அறிகுறிகள் கடந்த சில நாட்களாக ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த தொற்றாளர்களது வீட்டிற்கு அண்மையாக வசித்துவந்த முதியவர் ஒருவர் கடந்த சில மாதங்களாக வயது மூப்பு காரணமாக ஏற்பட்ட நோய் பாதிப்பிற்குள்ளாகி இருந்த நிலையில் நேற்று அதிகாலைவேளை உயிரிழந்திருந்தார்.

தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் 15 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டிருந்த காரணத்தினால் குறித்த முதியவரது உடல் பருத்தித்துறை சுகாதாரப் பிரிவினரால் பொறுப்பேற்கப்பட்டு பிசிஆர் பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுசெல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த முதியவரின் பரிசோதனை முடிவுகளின் பின்னரே அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பில் முடிவெடுக்க முடியும் என பருத்தித்துறை சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பின்னணியில் குறித்த பகுதியில் மேலும் பல தொற்றாளர்கள் அடையாளம் காணப்படும் அபாயம் உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடமாகாண ஆளுநர் தலைமையில் ஆயுர்வேத வைத்தியர்களுடனான விசேட கலந்துரையாடல்



வடமாகாணத்திலுள்ள ஆயுர்வேத வைத்திய சாலைகள் மற்றும் அங்கு கடமையாற்றும் வைத்தியர்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல் வடமாகாண ஆளுநர் திருமதி பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் ஆளுநரின் செயலாளர் மற்றும் ஆயுர்வேத வைத்தியர்களும் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலில் கலந்துகொண்ட ஆயுர்வேத வைத்தியர்களின் பிரதிநிதிகள், அடிப்படை வசதியற்று இயங்கிக்கொண்டிருக்கும் வைத்தியசாலைகளின் பிரச்சினைகள், சேவைப்பிரமாணக் குறிப்பிலுள்ள பிரச்சினைகள், ஆளணி தொடர்பான பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆளுநருக்கு எடுத்துக் கூறினர்.

இங்கு கருத்து தெரிவித்த ஆளுநர்,

தற்போது மக்கள் மத்தியில் பாரம்பரிய உணவு பழக்க வழக்கம் மற்றும் வாழ்க்கை முறை என்பன மிக அரிதாகி வருகின்றன. இதற்கு முக்கிய காரணம், ஆயுர்வேத திணைக்கள சேவைகளின் குறைபாடுகளே. ஆயுர்வேதத்திற்கு முக்கியமளிக்கும் வகையில் ஆயுர்வேத மருத்துவ வசதிகளை கிராம மட்ட மக்கள் மத்தியிலும் கொண்டுசென்று வீட்டில் மூலிகைத் தோட்டங்களை உருவாக்கவும், இணையவழி வர்த்தகம், கண்காட்சிகள் போன்ற செயற்பாடுகளினை சமுதாய மருத்துவ உத்தியோகத்தர்கள் மூலமாக தொற்றா நோய்களை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் விழிப்புணர்வுகளை மேற்கொள்ளவும் வேண்டும் – என்றார்.

மேலும் தற்கால இளம் சமுதாயத்தை தூண்டக் கூடிய வகையில் இயற்கை முறையிலான வாசனைத் திரவியம் மற்றும் முகப்பவுடர்கள் கிடைப்பதற்கான வசதிகளை ஏற்பாடு செய்யவும் அறிவுறுத்தப்பட்டதுடன், அவற்றின் உற்பத்தி அதிகரிக்க பிரபல நிறுவனங்களுடன் இணைந்து செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அறிவுறுத்தினார்.

அடுத்த வருடத்திற்கான ஆயுர்வேத திணைக்கள செயற்பாடுகளுக்கான திட்டத்தை சமர்ப்பிக்கவும், ஆயுர்வேத நடமாடும் வைத்தியசாலை செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அறிவுறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பசும் மரங்களில் ஆணி அறையும் நிறுவனங்களின் செயற்பாட்டுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும்

## நகர சபை உறுப்பினர் தர்சன் வலியுறுத்து

(சாவகச்சேரி நிருபர்)

தென்மராட்சி பகுதியில் வீதியோரங்களில் காணப்படும் பசும் மரங்களில் ஆணி அறைந்து விளம்பரங்களைக் காட்சிப்படுத்தும் நிறுவனங்களின் செயற்பாட்டுக்கு எதிராக உள்ளூராட்சி மன்றங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் – என சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் க.தர்ஷன் வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி நகர சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின்போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்;

தென்மராட்சியில் பல இளைஞர் அமைப்புகள் வீதியோரங்களில் நிழல் மரக்கன்றுகளை நாட்டி அதனை பராமரித்து வருகின்றனர். ஏ-9 வீதியோரங்களில் சாவகச்சேரியிலிருந்து மீசாலைவரை அதனை அவதானிக்க முடிகிறது. இவ்வாறு இளைஞர்களின் பராமரிப்பில் வளர்க்கப்படும் பசும் மரங்களில் சில தனியார் நிறுவனங்கள் தமது விளம்பரப் பதாகைகளை காட்சிப்படுத்துகின்றன. இவ்வாறான பொறுப்பற்ற செயற்பாடுகள் இளைஞர்களின் ஆர்வமான செயற்பாட்டை மலினப்படுத்துவதாக அமைகின்றன.

எனவே, சாவகச்சேரி நகர சபை எல்லைக்குள் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுமாயின் குறித்த நிறுவனத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் – என்றார்.

# கொவிட்-19 விடுமுறைக் காலத்தில் நஞ்சற்ற விவசாயமுறையால் வீட்டுத்தோட்டம்

**சிவகுமார் திவியா**

கொவிட் - 19 விடுமுறைக் காலத்தை ஜனாதிபதியின் நஞ்சற்ற விவசாய முறையால் வீட்டுத் தோட்டம் அமைத்து பயனுள்ளதாக மாற்றியமைத்துள்ளனர் கணவனும் மனைவியும்.

கொவிட் -19 தாக்கம் காரணமாக பல்வேறு கைத்தொழில் துறைகளும், உற்பத்திகளும் பாதிப்படைந்துள்ள நிலையில், உலக ஒழுங்கமைப்பையே அது மாற்றியமைத்திருக்கின்றது.

சுயதேவை பொருளாதார கட்டமைப்பை வலுவடையச் செய்யவேண்டிய தேவையை அது ஏற்படுத்தியிருக்கின்றது. ஒவ்வொருவரும் விவசாயம் மற்றும் தோட்டச் செய்கை தொடர்பில் கவனம் செலுத்தவேண்டிய நிலையை உருவாக்கியுள்ளது. அந்தவகையில், கொவிட் -19 தாக்கம் காரணமாக நடைமுறையில் இருந்த ஊரடங்குச் சட்டம் மற்றும் விடுமுறை என்பவற்றை கணவன் - மனைவி பயனுள்ளதாக பயன்படுத்தி இன்று பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளனர்.

அவர்கள் பற்றிய பார்வையே இது.

வவுனியா, பண்டாரிக்குளம் கிராமசேவையாளர் பிரிவில் யோகன் செல்வராணி தம்பதிகள் ஜனாதிபதியின் திட்டமான நஞ்சற்ற விவசாயமுறையால் வீட்டுத் தோட்டம் மூலம் பயனுள்ளதாக சிறப்பாக இயற்கை முறையில் வீட்டுத் தோட்டச்செய்கையில் ஈடுபட்டு ஏனையோருக்கு முன்னுதாரணமாக மாறியுள்ளனர்.





தனது வீட்டுடன் கூடிய நிலத்தை தெரிவுசெய்து, கச்சான், மரவள்ளி, வாழை, மரக்கறி வகைகளை பயிரிட்டுள்ளார். அத்துடன், ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைவாக ஜனாதிபதியின் திட்டமான நஞ்சற்ற விவசாயமுறையால் வீட்டுத் தோட்டம் மூலம் பயனுள்ளதாக மாற்றிவருகின்றனர்

கச்சான் வாழை கத்தரி, பயத்தை, வெண்டி, புடோல், அவரை, பூசணி, கீரை, மிளகாய், மரவள்ளி என 20இற்கும் மேற்பட்ட மரக்கறி வகைகளை பயிரிட்டு வீட்டுக் கழிவுகளைக்கொண்டு கூட்டுப் பசளை தயாரித்து அத்துடன் மாட்டுச்சாணம், ஆட்டுச்சாணம் பயிர்களுக்கு பயன்படுத்தி தற்போது அறுவடை செய்து வருகின்றார்.

வீட்டுத் தோட்டப் பயிர்களுக்கு நோய்த்தாக்கம் ஏற்படாமல் இருக்க இயற்கையாக வீட்டில் தயாரித்து வைத்துள்ள மருந்தை விசிறி வருகின்றனர். மாட்டுச் சலம், வேப்பிலை, வேப்பம் விதை, இஞ்சி, உள்ளி என்பவற்றைக்கொண்டு குறித்த இயற்கை மருந்து தயாரிக்கப்பட்டுள்ளது.

கொவிட்-19 ஆரம்பித்தபோது உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் என்ற ஐயத்தில் உருவாக்கிய வீட்டுத் தோட்டம் மூலம் இன்று குறித்த குடும்பம் தமக்குத் தேவையான மரக்கறிகளைப் பெறுவதுடன், தமது கிராமத்தினருக்கும் விற்பனை செய்து வருகின்றனர்.

இயற்கைப் பசளைகளைக்கொண்டு நஞ்சற்ற முறையில் வீட்டுத் தோட்டச் செய்கையில் வெற்றிகண்டுள்ளனர் இவர்கள். அந்தவகையில், காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளும் முயற்சியாளர்கள் தோற்பதில்லை என்பதற்கு இவர்களது வீட்டு தோட்டச்செய்கை ஓர் எடுத்துக்காட்டாகும்.

# இந்திய செய்திகள்

## நான்கு மொழிகளில் வெளியாகிறது 'டாக்டர்'




நான்கு மொழிகளில் நேரடியாக ஓடிடி தளத்தில் வெளியிடப்படவுள்ளது தயாராகிவருகிறது 'டாக்டர்' திரைப்படம்.

கே.ஜே.ஆர். ஸ்டூடியோஸ் நிறுவனத்துடன் சிவகார்த்திகேயனின் எஸ்.கே.புரொடக்ஷன் நிறுவனமும் இணைந்து 'டாக்டர்' திரைப்படத்தை தயாரித்துள்ளன.

சிவகார்த்திகேயன் நடிப்பில் உருவாகியுள்ள இப்படத்தை 'கோலமாவு கோகிலா' படத்தை இயக்கிய நெல்சன் இயக்கியுள்ளார்.

தெலுங்கில் கேங்ஸ்டர் படத்தில் நடித்து பிரபலமான பிரியங்கா மோகன் இப்படத்தில் சிவகார்த்திகேயனுக்கு ஜோடியாக நடித்துள்ளார். மேலும் யோகிபாபு, வினய் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இப்படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். கடந்த மார்ச் மாதமே வெளியாகவிருந்த இப்படம், தமிழக சட்டசபைத் தேர்தல் மற்றும் கொரோனா ஊரடங்கு போன்ற காரணங்களால் தள்ளிப்போனது.

இந்நிலையில், 'டாக்டர்' படம் விரைவில் நேரடியாக ஓடிடியில் வெளியிடப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இப்படத்தின் ஓடிடி உரிமையை ஹாட்ஸ்டார் நிறுவனம் கைப்பற்றியுள்ளது. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய 4 மொழிகளில் இப்படம் வெளியிடப்படவுள்ளது. இதுகுறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இந்தியாவின் 12 மாநிலங்களை ஆக்கிரமித்த 'டெல்ட்டா ப்ளஸ்'

### தமிழகத்தில் 10 பேருக்கு தொற்று உறுதி

இந்தியாவின் 12 மாநிலங்களில் டெல்ட்டா ப்ளஸ் வைரஸ் தொற்று உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

ஐசிஎம்ஆர் அளித்த தரவுகளின்படி இதை தெரிவித்துள்ள மத்திய அரசு, ஏப்ரல் முதல் இதுவரை 45 ஆயிரத்திற்கும் அதிகமான மாதிரிகளை சோதித்ததில், 48 பேருக்கு டெல்டா ப்ளஸ் தொற்று உறுதியானதாக தெரிவித்துள்ளது.

டெல்ட்டா பிளஸ் நாட்டில் ஒட்டுமொத்தமாக பரவவில்லை எனவும் மகாராஷ்டிரா, கேரளா மற்றும் மத்திய பிரதேசத்தில் மட்டுமே அதன் பரவல் அதிகமாக இருப்பதாகவும் ஐசிஎம்ஆர் தரவுகள் தெரிவிக்கின்றன.

இதற்கு முன்பு உள்ள மரபணு மாற்ற வைரஸுகளை விடவும் அதிவேகத்தில் டெல்ட்டா ப்ளஸ் பரவும் என்றும், பல நாடுகளிலுள்ள தடுப்பூசி மற்றும் மருந்துகளையும் எதிர்த்துப் பரவும் திறன் அதற்கு உண்டு எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தமிழகத்தில் 10 பேருக்கு டெல்ட்டா ப்ளஸ்**

தமிழகத்தில் மேலும் ஒருவருக்கு, டெல்ட்டா ப்ளஸ் தொற்று உறுதியாகியுள்ள நிலையில், இதுவரை டெல்ட்டா ப்ளஸ் தொற்றுக்குள்ளானோரில் எண்ணிக்கை 10 ஆக அதிகரித்துள்ளது.

**அலட்சியம் வேண்டாம் - விஜயகாந்த்**

இந்நிலையில், "தளர்வுகளில் அலட்சியம் காட்டினால் டெல்ட்டா ப்ளஸ் பரவ வாய்ப்புள்ளது. இதனால் மீண்டும் ஊரடங்கு அமுல்படுத்தப்படும் நிலை உருவாகும்" என தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"ஊரடங்கு உத்தரவுகள் அறிவிக்கப்பட்டுள்ளதால் வழிபாட்டுத் தலங்கள், வணிக வளாகங்கள் போன்ற பகுதிகளில் மக்கள் அதிகம் கூடுவதைத் தவிர்க்க வேண்டும். மேலும், முகக்கவசம் அணிந்து அனைவரும் தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டும். பாதுகாப்பு நடைமுறைகளைக் கடைப்பிடிக்காமல் அலட்சியம் காட்டினால் கொரோனா மூன்றாவது அலை, டெல்ட்டா ப்ளஸ், கருப்புப் பூஞ்சை போன்ற தொற்று நோய்கள் அதிகளவில் பரவி பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

ஊரடங்கு தளர்வை மக்கள் நன்கு புரிந்துகொண்டு பாதுகாப்புடன் இருப்பதுடன், அனைவரையும் பாதுகாத்திட வேண்டும். மக்கள் தங்கள் பொறுப்புகளை உணர்ந்து டெல்ட்டா போன்ற வைரஸ் தொற்று பரவாமல் தவிர்க்க ஒவ்வொருவரும் வெளியே செல்லும்போது முகக்கவசம் அணிய வேண்டும். போதிய தடுப்பூசிகளின்றி மக்கள் பாதிக்கப்படுவதைக் கருத்திற்கொண்டு தடுப்பூசி பற்றாக்குறையைப் போக்க மத்திய, மாநில அரசுகள் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தளர்வுகளில் அலட்சியம் காட்டினால் உடல்நலம் பாதிக்கப்பட்டு துயிர்ச்சேதம் ஏற்படுவதுடன், மீண்டும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டு, தொழில் முடங்கி, வேலைவாய்ப்பின்றி வருமானம் இழந்து மிகப்பெரிய ஒரு பிரச்சினையை மக்கள் சந்திக்க வேண்டிய சூழல் ஏற்படக்கூடும். எனவே, தொற்றிலிருந்து நம்மைப் பாதுகாத்துக்கொள்ள மக்கள் அனைவரும் விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும். அதுவே வீட்டுக்கும் நாட்டுக்கும் நல்லது."

- இவ்வாறு விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

## காஷ்மீர் - லடாக்கை காணவில்லை




### ட்விட்டர் வெளியிட்ட இந்தியாவின் தவறான வரைபடத்தால் மீண்டும் சர்ச்சை

புதிய டிஜிட்டல் விதிகளை ஏற்பதில் ஏற்கனவே மத்திய அரசுடன் உரசல் போக்கை மேற்கொண்டுவரும் ட்விட்டர், இந்தியாவின் தவறான வரைபடத்தை பிரசுரித்து மீண்டும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ட்விட்டரின் இணையதளத்தில் வேலைவாய்ப்புகள் தொடர்பான பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் ஜம்மு காஷ்மீரையும், லடாக்கையும் காணவில்லை.

ஜம்மு - காஷ்மீரை தனிநாடாகவும் லடாக்கை சீனாவிலுள்ளது போன்றும் காட்சி இருந்தது. இதற்கு இந்தியாவில் கடும் எதிர்ப்பு எழுந்தது.

இந்தியாவின் வரைபடத்தை தவறாக பிரசுரிப்பதை ட்விட்டர் வாடிக்கையாகவே வைத்துள்ளது. கடந்த ஆண்டு லடாக் தலைநகரான லே-வை சீனாவின் பகுதியாக ட்விட்டர் சித்திரித்து அதற்கு இந்தியாவின் தரப்பில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஜம்மு - காஷ்மீர் மற்றும் லடாக் ஆகிய பகுதிகளை தனிநாடாக சித்திரித்து ட்விட்டர் நிறுவனம் வெளியிட்ட இந்திய வரைபடம் கடும் எதிர்ப்பு எழுந்ததால் நீக்கப்பட்டது.

## நிச்சயமாக மீண்டும் நான் வருவேன்..!

### என் கண் முன்னே கட்சி வீணாவதை பார்த்துக்கொண்டு இருக்கப்போவதில்லை - சின்னம்மா சசி



அ.தி.மு.க. மிகவும் மோசமான நிலைக்கு சென்று கொண்டிருப்பதாக முன்னாள் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் தோழி சசிகலா விமர்சித்துள்ளார்.

கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக அ.தி.மு.க. நிர்வாகிகள் பலருடன் சசிகலா தொலைபேசியில் உரையாடும் ஒலிப்பதிவு வெளியாகி அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது. இந்நிலையில், தன்னுடைய ஆதரவாளரான தேனி கர்ணனுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசிய சசிகலா, கட்சியின் தற்போதைய நிர்வாகம் மிக மோசமான நிலையில் இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அடிமட்ட தொண்டர்களை நீக்குவது தவறான போக்கு என்றும் அவர் கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

இதுகுறித்து சசிகலா உரையாடியதாவது;

"நிச்சயமாக நான் வருவேன். தற்போது கடிதங்களை பார்க்கும்போது மனம் மிகவும் வருத்தமடைகிறது. இதன் காரணமாகவே நான் அனைவரையும் தொடர்புகொண்டு உரையாடி வருகிறேன். நான் நிச்சயமாக வந்துவிடுவேன். என் கண் முன்னே கட்சி வீணாவதை நான் இனி பார்த்துக்கொண்டு இருக்கப்போவதில்லை.

ஏனெனில், அ.தி.மு.க. மிகவும் மோசமான நிலைக்கு சென்றுகொண்டிருக்கிறது. கட்சியின் வேர்கள்தான் அடிமட்ட தொண்டர்கள். அவர்களை வெட்டுவதுபோன்று கட்சியிலிருந்து நீக்குவது அ.தி.மு.கவிற்கு நல்லதல்ல. முழுமையாகவே நிர்வாகம் தவறாக சென்றுகொண்டிருக்கிறது" என்று குறிப்பிட்டார்.

சசிகலாவுடன் உரையாடும் அ.தி.மு.க. தொண்டர்களை கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்தே நீக்குவது குறிப்பிடத்தக்கது.

### ஜம்மு விமானப்படைத் தளத்தில் தாக்குதல்: தேசிய புலனாய்வு அமைப்பு விசாரணை

## லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாத அமைப்பின் தலைவர் நதீம் அப்ரார் உட்பட 2 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை



ஜம்மு விமானப்படைத் தளத்தில் ஆளில்லா சிறிய ரக விமானங்கள் மூலம் குண்டுவெடிப்புத் தாக்குதல் நடத்திய வழக்கு தேசிய புலனாய்வு அமைப்புக்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஜம்மு - காஷ்மீரில் பாதுகாப்புப் படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே தொடர்ந்தும் நடைபெற்ற மோதலில் லஷ்கர் அமைப்பின் முக்கிய தீவிரவாதிகள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

ட்ரோன் விமானங்கள் மூலம் வெடிகுண்டுகள் வீசி தாக்குதல், முன்னாள் காவல் அதிகாரி, மனைவியுடன் சுட்டுக் கொலை ஆகிய அடுத்தடுத்த அசம்பாவிதங்களால் ஜம்மு - காஷ்மீர் முழுவதும் கடந்த 3 நாட்களாக பதற்றம் நிலவிவருகிறது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் ஸ்ரீநகரில் தீவிரவாதிகள் சிலர் பதுங்கியிருப்பதாக இராணுவத்தினருக்குக் கிடைத்த தகவலையடுத்து தேடுதல் வேட்டை தீவிரப்படுத்தப்பட்டது. அப்போது வீடொன்றில் பதுங்கியிருந்த தீவிரவாதியை இராணுவத்தினர் சுற்றிவளைத்து கைதுசெய்தனர். விசாரணையில் அது லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாத கொமாண்டர் நதீம் அப்ரார் என தெரியவந்துள்ளது. அப்போது மல்ஹுரா பரிம்போரா என்ற இடத்தில் வீடொன்றில் ஆயுதங்களை மறைத்துவைத்திருப்பதாக நதீம் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து அங்கு சென்ற பாதுகாப்புப் படையினர் மீது வீட்டில் மறைந்திருந்த தீவிரவாதிகள் சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர். இராணுவம் தரப்பிலும் பதில் தாக்குதல் நடத்தப்பட்டது. அதிகாலைவரை நீடித்த துப்பாக்கிச்சூட்டியின் முடிவில் லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாத அமைப்பின் தலைவர் நதீம் அப்ரார் உள்ளிட்ட 2 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்தத் துப்பாக்கி மோதலில் இராணுவ வீரர்கள் 3 பேர் படுகாயமடைந்துள்ளனர். தீவிரவாதிகள் பதுங்கியிருந்த வீட்டிலிருந்து ஏராளமான ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

புல்வாமா மாவட்டத்தில் முன்னாள் பொலிஸ் அதிகாரி, அவரது மனைவி ஆகியோரை தீவிரவாதி நதீம் தான் கொலைசெய்ததாக கூறப்படும் நிலையில், அவரை இராணுவம் சுட்டுக் கொன்றுள்ளது.

**ஜம்மு விமானப்படைத் தள தாக்குதல்**

இதேவேளை, ஜம்மு விமானப்படைத் தளத்தில் ஆளில்லா சிறிய ரக விமானங்கள் மூலம் குண்டுவெடிப்புத் தாக்குதல் நடத்திய வழக்கு தேசிய புலனாய்வு அமைப்புக்கு மாற்றப்பட்டுள்ளது.

ஜம்மு-காஷ்மீர் விமான நிலையத்திலுள்ள விமானப்படைத் தளத்தில் பயங்கரவாதிகள் ட்ரோன்கள் மூலமாக இரட்டை வெடிகுண்டுகளை வெடிக்கச்செய்ததில் ஞாயிற்றுக்கிழமை விமானப்படை வீரர்கள் இருவர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலில் லஷ்கர்-இ-தொய்பா பயங்கரவாத அமைப்புக்கு தொடர்பிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சட்டவிரோதச் செயல்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் ஜம்மு-காஷ்மீர் காவல்துறையினர் வழக்கு பதிவுசெய்துள்ளனர்.

இந்நிலையில், இந்த வழக்கை தேசிய புலனாய்வு அமைப்புக்கு மாற்றி மத்திய உள்துறை அமைச்சர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

### 'ஸ்லிம்'முக்கு இதுதான் காரணமாம்...



உடல்நலத்தைப் பேணுவதில் அக்கறை கொண்ட ஸ்டாலின், நடைப்பயிற்சி, சைக்கிள் ஓட்டுதல், ஜிம்மில் உடற்பயிற்சி செய்வதை வழக்கமாகக்கொண்டுள்ளார்.

இந்நிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உடற்பயிற்சி செய்யும் வீடியோவொன்று வெளியாகியுள்ளது.

தேர்தல் பிரசாரத்தின்போதும் நடைப்பயிற்சி மேற்கொண்டவாறே அவர் வாக்குச் சேகரித்தார். இந்நிலையில், ஸ்டாலின் ஜிம்மில் உடற்பயிற்சி செய்ய வீடியோ ஒன்று வைரலாகிவருகிறது.



ஒரே நாளில் எல்லாம் கோவிந்தா...

"மாஸ்க் அணியாமல்,நெருக்கமாக நின்று, பூசகர் கையால் திருநீறு பூசி, எல்லாத்தப்பையும் நாமேதான் செய்வோம் பழியை மட்டும் கடவுள் மீது போடுவோம்"

-சென்னையில் கோவில் திறந்த முதல் நாள்

# மேதகு; தொடக்கம்தான், முடிவல்ல

உலகத் தமிழர்களின் ஒருங்கிணைப்புடன் இதுவரை எவரும் கையில் எடுக்காத உன்னத முயற்சியாக 'மேதகு' திரைப்படம் வெளிவந்துள்ளது. புத்தம் புதியவர்களால் தீர்க்கமாக எப்படி இதைச் சாதித்துக் காட்ட முடிந்தது என்கிற ஆச்சரியம் ஏற்படுகிறது. இந்த உலகுக்கு உண்மையைக் கூறினால், மக்களருக்குப் பிடித்த வகையில் அதைக் கூறினால் எதையும் ஏற்றுக் கொள்வார்கள் என்பதற்கு சிறந்த உதாரணம் - மேதகு.

ஓடிடி சுதந்திரத்தின் காரணமாக சென்சார் கட்டுப்பாடுகளின்றி சொல்லவேண்டிய உண்மைகளை ஆதாரங்களுடனும் கட்டுப்பாடுகளுடனும் கட்டாயம் சொல்ல வேண்டியதை அப்பட்டமாகவும் 'மேதகு' படம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் வரலாற்றைக் கூறியபடி ஒரு கிராமத்தில் தெருக்கூத்துக்குத் தயாராகும் காட்சியுடன் படம் தொடங்குகிறது. மிகவும் போற்றப்பட்டவரும் அதேசமயம், விமர்சிக்கப்பட்டவருமான விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவரான பிரபாகரனின் வரலாற்றைக் கூறும் திரைப்படமாகவும் வீரக்குழுக்கள் உருவாகும் விதமும் அவர்களுடைய போராட்டத்தை விவரித்திடும் வகையிலும் இப்படம் அமைந்துள்ளது.

வல்வெட்டித்துறை 1954 என்கிற எழுத்துப் பின்னணியுடன் பிரபாகரன் பிறப்புமுதல் அவர் பாடசாலைப்பருவம், போராட்டச் சூழல், பகத்சிங் படம், சேகுவேரா உள்ளிட்ட புத்தகங்களுடனும் கேள்விகளுடனும் சிறப்பாகத் தன்னை வெளிப்படுத்துகிறார் பிரபாகரனாக நடித்த குட்டி மணி.

நேர்த்தியான கதாபாத்திரங்கள் தெரிவு, கூர்மையான வசனங்கள், இயல்பான இசை, சிறப்பான ஒளிப்பதிவு எனக் கூட்டிணைந்து தி. கிட்டு இயக்கத்தில் படத்தைச் சிறப்பாக உருவாக்கியிருக்கிறது தமிழீழத் திரைக்களம். பிரபாகரனை தம்பி என்று அழைப்பதற்கான காரணத்தை தொடக்கத்திலேயே கூறி படம் முழுவதும் அதை வெளிப்படுத்தியுள்ளனர்.

தமிழர்களுக்கு தமிழர்களே எதிரி, எட்டப்பர்களே மாவீரனின் அழிவுக்குக் காரணம் என்பதை நாடறியும். இந்தக் கதை சுவாரஸ்யமாக படமாக்கப்பட்டுள்ளது. ஒரு திரைப்படப் பிரபலத்தின் துணையுடனோ போராட்டங்களில் கலந்துகொண்டவர்களின் துணையுடனோ இந்தப் படம் எடுக்கப்படவில்லை. உலகத் தமிழர்களின் உதவியுடன் படத்தை எடுத்து அவர்களுடைய பெயர்களை திரைப்படத்தின் இறுதியில் வெளிப்படுத்தியுள்ளார்கள்.




இலங்கையை ஆண்டது புத்தபிக்குகள்தான் என்பதை ஆணித்தரமாகக் கூறுவதுடன், தமிழர்கள் தமக்குக் கீழாக இருப்பதுதான் நமக்குப் பாதுகாப்பு, அவர்களின் கீழ் நாம் பணியாற்றக்கூடாது என்று பேசியபடி தமிழர்களுக்கு ஆதரவாக இருந்த பண்டாரநாயக்கவை ஒரு புத்தபிக்கு துப்பாக்கியால் சுடும் காட்சி பதற்றத்தை ஏற்படுத்துகிறது. ஓடிடி சுதந்திரத்தினால்தான் இந்தக் காட்சி சாத்தியமாகியுள்ளது. தமிழ் காவலர் ஒருவர் விசாரணைக்காக தமிழர் வீட்டிற்கு வந்து அந்த வீட்டுப் பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்யும்போது கொடுமை தாங்காமல் காவலரை அந்தப் பெண் தாக்கும் காட்சியும் தமிழாராய்ச்சி மாநாட்டை சிதைக்கும் யாழ்ப்பாண மேயர் அல்பிரட் துரையப்பாவை பிரபாகரன் கொல்லும் காட்சியும் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன.

'மேதகு' படத்தின் சிறப்பம்சம், படம் எழுப்பும் கேள்விகளும் அதன் வசனங்களும்தான். "நாம ஏன் திருப்பி அடிக்கல, உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன்... ஆனால், உயிரினும் உன்னதமானது எமது உரிமை, எமது சுதந்திரம், எமது கௌரவம், இனி அதிகாரம் அவர்களிடத்தில் இருக்காது... வெறும் பயம் மட்டுமே பையில் இருக்கும்..., அமைதியாகப் போராடினால் பலன் கிடைக்கும் என்று நம்புவது உலகின் மிகப்பெரிய மூட நம்பிக்கை, எந்த ஆயுதத்தால் எதிரிகள் தாக்குகிறானோ அதே ஆயுதத்தை நாமும் கையில் எடுக்கணும், பயம் ஒன்று மட்டுமே இன்னொருவர் மனதில் அடிமைத்தனத்தை ஆழமாக விதைக்கும், முதல்ல பதற்றத்தை உருவாக்குவோம்... பயம் தானா உருவாகும்" என்பன போன்ற வசனங்கள் கூர்மையாக உள்ளன.

படத்தில் இலங்கைத் தமிழர்களின் கடவுளாக முருகன் வணங்கப்படுவது, பிரபாகரன் பீரோவில் பகத்சிங் புகைப்படம், அவர் படிக்கும் புத்தகங்களாக சேகுவேரா, நெப்போலியன் போன்றோரின் வாழ்க்கை வரலாறுகள் என பல விடயங்கள் நுண்ணியமாகவும் மிகவும் கவனத்துடனும் கையாளப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மேயர் அல்பிரட் துரையப்பாவைக் கொல்லும் பிரபாகரன், காட்டுக்குள் மறைவதுடன் முதல் பாகம் முடிவு பெறுகிறது.

'மேதகு'; தொடக்கம்தான், முடிவல்ல...

# 18.22 கோடியை கடந்த உலக கொரோனா பாதிப்பு

- **அமெரிக்காவில் குறையும் அல்பா; அதிகரிக்கும் டெல்ட்டா; பீதியில் மக்கள்**
- **அவுஸ்திரேலியாவை தீண்டிய 'டெல்ட்டா'; பிரதான நான்கு நகரங்கள் முடக்கம்**
- **பிரிட்டன் விமானங்களுக்கு ஹொங்கொங் தடை**
- **ரஷ்யாவில் உச்சத்தை தொட்ட உயிரிழப்புகள்; மக்கள் கூடும் பகுதிகளில் கடுமையான கட்டுப்பாடுகள்**

உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 18.22 கோடியை கடந்துள்ளதுடன், 39.47 இலட்சத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

சீனாவின் வூஹான் நகரில் கடந்த 2019ஆம் ஆண்டு இறுதியில் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ் உலகம் முழுவதுமுள்ள 222 நாடுகள் மற்றும் பெரு நகரங்களில் பரவி பெரும் மனிதப் பேரழிவை ஏற்படுத்தி வருகிறது.

இந்நிலையில், கொரோனாவை கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூகள் கண்டுபிடிக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதுடன், கொரோனாவின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

உலகம் முழுவதும் கொரோனா பாதிப்பு மற்றும் உயிரிழப்பு விகிதங்களின்படி அமெரிக்கா, இந்தியா, பிரேஸில் ஆகிய நாடுகள் முன்னிலையிலுள்ளன.

இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனாவால் இதுவரை (பத்திரிகை அச்சுக்குச் செல்லும் வரை) 18,22,52,246 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 39,47,017 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, உலகம் முழுவதும் கொரோனா தொற்றுக்குள்ளானோரில் 16,67,98,821 பேர் இதுவரை குணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், கொரோனா தொற்றுக்குள்ளானோரில் 1,15,06,408 பேர் உலகம் முழுவதுமுள்ள பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருவதுடன், அவர்களில் 80,396 பேரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### அமெரிக்காவில் அதிகரிக்கும் டெல்ட்டா பாதிப்பு

இந்நிலையில், அமெரிக்காவில் டெல்ட்டா வகை கொரோனா வைரஸால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது.

அமெரிக்காவில் தற்போது கொரோனா வைரஸ் தாக்கம் படிப்படியாக குறைந்து வருகிறது. கடந்த ஏழு நாட்களாக அமெரிக்காவில் சாதாரண கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் குணமாகிவரும் நிலையில், இரண்டு வாரங்களாக 35.6 சதவீத குடிமக்கள் டெல்ட்டா வைரஸால் பாதிப்படைந்து வருகின்றனர்.

அமெரிக்காவின் கோவ்ஸ்பெக்ட்ரம் ட்ராக்டர் உதவியுடன் இந்தத் தகவல் ட்ராக் செய்யப்பட்டுள்ளது. கடந்த ஜூன் 16ஆம் திகதிமுதல் தினசரி 11,500 அமெரிக்க குடிமக்கள் வைரஸ் தாக்கத்திற்குள்ளாகியதாக அமெரிக்க நோய்த் தடுப்புத்துறை தெரிவித்துள்ளது. 10 இலட்சம் பேரில் சராசரியாக 3.5 சதவீதம் பேர் நோய்த் தாக்கத்திற்குள்ளாகின்றனர்.

அமெரிக்கா முழுவதும் கொரோனாவால் இதுவரை 3,45,11,636 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 6,19,595 பேர் உயிரிழந்துள்ளனர்.

பைசர்-பயான்டெக் தடுப்பு மருந்து 2 டோஸ் செலுத்தப்பட்ட பின்னர் நோயாளிக்கு 88 சதவீதம் பாதுகாப்பளிக்கிறது. ஆனால், ஒரு டோஸ் தடுப்பு மருந்து செலுத்தப்பட்ட நோயாளிகளுக்கு வெறும் 33 சதவீதம் மட்டுமே பாதுகாப்பு கிடைக்கிறது.

இதனால் டெல்ட்டா வகை வைரஸ் தாக்குதலுக்குள்ளானவர்கள் அமெரிக்காவில் தற்போது அபாயத்திலுள்ளார்கள்.

அமெரிக்காவில் தற்போது கோடை காலம் தொடங்கிவிட்டதால் வெப்பம் தாங்க முடியாமல் குடிமக்கள் பலர் வீட்டிற்குள்ளேயே முடங்கியுள்ளனர்.



### அவுஸ்திரேலியாவை தீண்டிய டெல்ட்டா

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் டெல்ட்டா வகை கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 150 ஆக அதிகரித்துள்ளது.

அவுஸ்திரேலியாவில் டெல்ட்டா வகை கொரோனா வேகமாக பரவி வருவதையடுத்து 4 நகரங்களில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகரில் நேற்று மாலை 3 மணிமுதல் ஊரடங்கு அமுலுக்கு வந்துள்ளது. அங்கு ஊரடங்கு கட்டுப்பாட்டின்கீழ் சுமார் ஒரு கோடி பேர் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேபோன்று அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் ஜூலை 9ஆம் திகதி வரையிலும், டார்வின் நகரில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரையிலும் முழு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. குயின்ஸ்லாந்து மாகாணத்தின் ஒருசில பகுதிகளில் அடுத்த 3 நாட்களுக்கு ஊரடங்கு அமுலில் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா முழுவதும் சுமார் 80 சதவீத மக்கள் ஊரடங்கு கட்டுப்பாடுகளால் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

இதேவேளை, அவுஸ்திரேலியாவில் இதுவரை கொரோனாவால் 6,50,324 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 10,701 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### பிரிட்டன் விமானங்களுக்கு ஹொங்கொங் தடை

டெல்ட்டா வகை கொரோனா அச்சுறுத்தலால் பிரித்தானியாவிலிருந்து வரும் பயணிகள் விமானங்களுக்கு ஹொங்கொங் தடை விதித்துள்ளது.

பிரித்தானியாவில் டெல்ட்டா வகை கொரோனா வைரஸ் பரவியுள்ளது. இதனால், கடந்த சில நாட்களாகவே அந்நாட்டில் தொற்று பாதிப்பு தொடர்ந்து அதிகரித்துவருகிறது. குறிப்பாக, நேற்று கடந்த 24 மணிநேரத்தில் 22 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு தொற்று பாதிப்பு உறுதிசெய்யப்பட்டது. கொரோனா அச்சுறுத்தல் காரணமாக பிரித்தானியாவிலிருந்து வரும் பயணிகள் விமானங்களுக்கு ஹொங்கொங் தடை விதித்துள்ளது.

எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் இந்தத் தடை அமலுக்கு வரும் என்று ஹொங்கொங் அரசு தெரிவித்துள்ளது. டெல்ட்டா வகையிலிருந்து உருமாற்றம் அடைந்த L452R வைரஸ் பாதிப்பு, பிரித்தானியாவிலிருந்து வந்த பயணிகள் மூலமாக ஹொங்கொங்கிலும் பரவியுள்ளதாகவும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. ஏற்கனவே இந்தியா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, நேபாளம், பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து பயணிகள் விமானம் வர ஹொங்கொங் தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### உயரும் ரஷ்ய உயிரிழப்புகள்

அத்தோடு ரஷ்யாவில் தினசரி கொரோனா உயிரிழப்புகள் புதிய உச்சத்தை எட்டியதால் கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்டுள்ளன.

ரஷ்யாவில் நேற்று நிறைவடைந்த 24 மணிநேரத்தில் 652 பேர் கொரோனாவால் உயிரிழந்த நிலையில், 21,650 பேருக்கு புதிதாக தொற்று உறுதிசெய்யப்பட்டது.

தலைநகர் மொஸ்கோவில் இதுவரை இல்லாதளவிற்கு ஒரேநாளில் 124 பேர் கொரோனாவால் உயிரிழந்ததால் மக்கள் கூடும் பகுதிகளில் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, ரஷ்யா முழுவதும் இதுவரை 54,93,557 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதுடன், 1,34,545 பேர் உயிரிழந்துள்ளனர். கொரோனா தொற்றுக்குள்ளானோரில் 74,975 பேர் ரஷ்யா முழுவதுமுள்ள பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருவதுடன், அவர்களில் 2,300 பேரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், ரஷ்யாவில் தேநீர் விடுதிகள் மற்றும் உணவகங்களில் கூட தடுப்பூசி சான்றிதழ் கட்டாயமாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஹொங்கொங் பிரபல ஜனநாயக ஆதரவு பத்திரிகையான 'ஆப்பிள் டெய்லி'யின் மூத்த ஆசிரியர் கைது



ஹொங்கொங்கின் பிரபல ஜனநாயக ஆதரவு பத்திரிகையான 'ஆப்பிள் டெய்லி'யின் மூத்த ஆசிரியர் பஃங் வுய் ஹொங் (வயது 57) நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார்.

ஹொங்கொங்கிலிருந்து விமானம் மூலம் பிரித்தானியாவுக்கு செல்ல முயற்சித்தவேளை ஹொங்கொங் விமான நிலையத்திலேயே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். வெளிநாட்டு சக்திகளுடன் இணைந்துகொண்டு நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருப்பதாக மூத்த ஆசிரியர் பஃங் வுய் ஹொங் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தேசிய பாதுகாப்புச் சட்டத்தை சீன அரசு ஹொங்கொங்கில் கடந்த ஆண்டு அமுல்படுத்தியது. இந்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து ஹொங்கொங் ஜனநாயக ஆதரவாளர்கள் மீது சீன அரசு கடும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஹொங்கொங்கை சீனா தனது தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் மூலமாக முழுமையாகக் கட்டுப்படுத்த முயற்சி மேற்கொண்டு வருகிறது.

இதனையடுத்து ஹொங்கொங்கிலுள்ள ஜனநாயக ஆதரவாளர்கள் பலர் பொது இடங்களில் ஒன்றுகூடி கடந்த இரண்டு ஆண்டுகளாக போராட்டங்களை நடத்தி வருகின்றனர். சீன அரசு ஹொங்கொங் அரசின் எதிர்ப்பையும் மீறி கம்யூனிஸ்ட் கட்சியின் அத்துமீறலுக்கு எதிராக குரல் கொடுக்கும் பத்திரிகையாளர்கள், கேலிச்சித்திர கலைஞர்கள், சட்ட வல்லுநர்கள் உள்ளிட்ட பலரை கைதுசெய்து வருகிறது.

இந்நிலையில், ஹொங்கொங்கின் பிரபல ஜனநாயக ஆதரவு பத்திரிகையான 'ஆப்பிள் டெய்லி' யின் முக்கிய நிர்வாகிகளை தற்போது சீன அரசு கைதுசெய்து வருவதால் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி வருகிறது. 'ஆப்பிள் டெய்லி' பத்திரிகையின் நிறுவனத் தலைவர் ஜிம்மி லேயை ஹொங்கொங் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இந்த பத்திரிகையின் தலைமை செய்தி ஆசிரியர் ரயான் லா (வயது 47) மற்றும் நிர்வாக இயக்குநர் கிம் ஹங் (வயது 59) உள்ளிட்ட 5 பேரை கடந்த சில தினங்களுக்கு முன் கைதுசெய்தனர்.

மேலும், அந்த பத்திரிகை நிறுவனத்திற்கு எதிராக பல்வேறு நடவடிக்கைகளை ஹொங்கொங் நிர்வாகம் எடுத்தது. இதற்கிடையில் பத்திரிகையின் சொத்துகள் அனைத்தும் முடக்கப்பட்டதால் 'ஆப்பிள் டெய்லி' பத்திரிகை தனது பதிப்பை கடந்த வாரம் நிறுத்தியது. மேலும், சீன அரசின் சர்வாதிகாரத்திற்கு எதிராக கட்டுரை எழுதிய இந்தப் பத்திரிகையின் அலுவலகம் 500 சீன பொலிஸாரால் சோதனையிடப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட இந்தப் பத்திரிகையின் ஆசிரியர்கள் மீது தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் அடிப்படையில் வழக்கு பதியப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு பிணை வழங்க நீதிமன்றம் மறுத்துவிட்டது. அடுத்தகட்ட விசாரணை இன்னும் ஒன்றரை மாத விசாரணைக்குப் பின்னர் எதிர்வரும் ஒகஸ்ட் 13ஆம் திகதி இந்த வழக்கு நீதிமன்றத்திற்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனநாயக ஆதரவு பத்திரிகையான 'ஆப்பிள் டெய்லி' பத்திரிகை உலகம் முழுவதும் ஜனநாயக ஆதரவாளர்களால் அதிகமாக வரவேற்கப்படுவது குறிப்பிடத்தக்கது. சீன அரசியல் சாசனத்தை விமர்சிக்கும் வகையில் இந்த பத்திரிகையில் பலவித கட்டுரைகள் வெளியானதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கம்யூனிஸ அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் 'ஆப்பிள் டெய்லி' பத்திரிகையின் மூத்த ஆசிரியர் பஃங் வுய் ஹாங் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார்.

## உலக செய்திகள்

## பறக்கும் தட்டுகளால் உலகுக்கு பெரும் அச்சுறுத்தல்




**"பறக்கும் தட்டின் மர்மம் குறித்து தெளிவான விளக்கம் அளிக்க முடியாது; அதேநேரம், அதனை வேற்றுக்கிரக வாசிகளுடையது என்பதை ஒப்புக்கொள்ளவும் முடியாது" - என முதல்கட்ட ஆய்வறிக்கையில் அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.**

**அமெரிக்காவில் கடந்த 1966ஆம் ஆண்டு, முதல் முறையாக வானில் பறக்கும் தட்டு போன்ற அடையாளம் தெரியாத மர்ம பொருள் (யூஎவ்ஓ) பறந்ததை பார்த்ததாக விமானப்படையினர் தெரிவித்தனர். இதனிடையே, அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் கடந்தாண்டு ஏப்ரல் மாதம் கடற்படையினர் எடுத்த யூஎவ்ஓ குறித்த 3 வீடியோக்களை வெளியிட்டு, இது குறித்து ஜூன் மாத இறுதியில் அறிக்கை வெளியிடப்படும் என்று தெரிவித்தது.**

**அதன்படி, பென்டகன் அமெரிக்க நாடாளுமன்றத்தின் ஆயுத சேவைகள் குழுவுக்கு அளித்த 9 பக்கங்கள் அடங்கிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:**

**கடந்த 2004ஆம் ஆண்டுமுதல் 2021ஆம் ஆண்டுவரை அமெரிக்க விமானப்படை யூஎவ்ஓ குறித்து 144 அறிக்கைகள் வெளியிட்டுள்ளது. அவற்றில் 21 அறிக்கைகளில் பறக்கும் தட்டு புரியாத புதிராக இருப்பதாக கூறப்பட்டுள்ளது.**

**இந்த பறக்கும் தட்டுகள், உயரத்தில் பறப்பது, காற்றுக்கு எதிராக நகர்வது, திடீரென சுழல்வது அல்லது குறிப்பிட்ட வேகத்தில் நகர்வது என்று எந்தவொரு தெளிவான வழிமுறைகளும் இல்லாமல் வானில் தோன்றி மறைந்தது. சிலநேரங்களில் மட்டும் அவற்றிலிருந்து ரேடியோ அதிர்வலை வெளிப்பட்டதாக விமானப்படையினர் தெரிவித்துள்ளனர். இதன்மூலம், அவை காற்றினால் இயக்கப்படவில்லை என்பதும், அவற்றிலிருந்து ரேடியோ அதிர்வலை ஏற்பட்டதால், எலக்ட்ரோமேக்னடிக் மூலம் இயக்கப்பட்டிருக்கலாம் என்றும் தெரியவருகிறது.**

**ஆனால், இவை விமானங்களின் பாதுகாப்பு, தேச பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவுள்ளது. பறக்கும் தட்டு மர்மமாக இருப்பதால் அது குறித்து சரியாக அறிய முடியவில்லை."**

**- இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

## எப்புடியிருந்த கிம் இப்படியாயிட்டாரே..?



அதிரடி நடவடிக்கைகளுக்கும் சர்ச்சைகளுக்கும் பெயர் பெற்றவர் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன். அவ்வப்போது திடீரென மாதக்கணக்கில் காணாமல்போவார். பிறகு ஊடகங்கள் முன்பு தோன்றுவார்.

உலகமே கொரோனாவுடன் போராடிக்கொண்டிருக்கையில் அணுஆயுத சோதனைகள் நடத்திக்கொண்டிருப்பார். இதுபோன்ற கிம்மின் நடவடிக்கைகளால் வடகொரிய மக்கள் அவர் மீது கடும் கோபத்தில் இருப்பார்கள் என்று சர்வதேச நாடுகள் நினைத்துக் கொண்டிருக்கின்றன. ஆனால், கிம்மின் எடை குறைவுக்கு வட கொரியர்கள் கண்ணீர் சிந்துகிறார்கள் என்று அந்நாட்டு 'ஸ்டேட் ரிவி' செய்தி வெளியிட்டுள்ளது.

"கிம்மின் எடை குறைந்த புதிய தோற்றத்தைப் பார்த்த பிறகு வடகொரிய மக்களின் இதயம் வலிக்கிறது. ஒவ்வொருவரின் கண்களிலும் தானாகவே கண்ணீர் பெருகுகிறது" என்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொரோனா ஊரடங்கு காரணமாக வடகொரியாவில் பொருளாதாரம் மோசமடைந்துள்ளது. அதனை சீர்திருத்தும் நடவடிக்கைகளில் ஓய்வில்லாமல் உழைப்பதாலேயே எடை குறைந்துவிட்டது என்றும் பல வடகொரியர்கள் கண்ணீர் வடிக்கிறார்களாம்.

சில தொலைக்காட்சிகள் இதற்கு முன்பு கிம் நடந்துவரும் வீடியோவையும், தற்போதைய வீடியோவையும் ஒப்பிட்டு செய்திகள் வெளியிட்டுள்ளன. சிலர் இன்னும் ஒரு படி மேலே போய் கிம் வாட்ச் கட்டியிருப்பதில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் நுட்பமாகக் காட்டியுள்ளது. இந்த எடை குறைப்பு இத்தனை தீவிரமாக விவாதிக்கும் அளவுக்கு பெரிய விஷயம் ஒன்றுமில்லை.

இத்தனைக்கும் 170 செ.மீ. உயரமுள்ள கிம் 140 கிலோ எடை கொண்டவர். இதில் 10 முதல் 20 கிலோ வரையிலும் உடல் எடை குறைந்திருக்கலாம். இதற்குத்தான் இத்தனை அலப்பறை.

"தனது எடையை பராமரிப்பதற்காக டயட்டை கிம் பின்பற்ற தொடங்கியிருக்கலாம். 10 கிலோ எடை குறைப்பு என்பது இத்தனை தீவிரமாக விவாதிக்குமளவு பெரிய விடயமல்ல. வடகொரியாவில் வேறு எத்தனையோ பிரச்சினைகள் உள்ளன" என்று சியோலிலுள்ள அரசியல் பார்வையாளர்கள் இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ளனர்.

அதிகப்படியான குடிப்பழக்கம் மற்றும் புகைப்பழக்கத்திற்கு பெயர் பெற்ற கிம், இதய பிரச்சினைகள்கொண்ட ஒரு குடும்பத்திலிருந்து வந்தவர் என கூறப்படுகிறது. அவருக்கு முன் வடகொரியாவை ஆண்ட அவரது தந்தை மற்றும் தாத்தா இருவரும் இருதய பிரச்சினைகளால் இறந்தனர். அவரது எடை இருதய நோய்களுக்கான சாத்தியத்தை அதிகரிக்கும் என்று நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.




# இளம் வயதில் உலகை விட்டு பிரிந்த கட்டாரின் தடகள வீரர்

கட்டார் நாட்டின் 24 வயதுடைய இளம் தடகள வீரரான அப்தலெலாஹ் ஹாரோன் கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார். கடந்த 2017ஆம் ஆண்டு நடைபெற்ற உலக தடகள சம்பியன்ஷிப் போட்டியில், 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் கலந்துகொண்ட அப்தலெலாஹ் ஹாரோன் வெண்கலப் பதக்கம் வென்றார்.

அப்தலெலாஹ் ஹாரோன் கடந்த 2015ஆம் ஆண்டில் நடைபெற்ற 20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் தனது 18ஆவது வயதில் சாதனை படைத்துப் பிரபலமானார். தொடர்ந்து 2016ஆம் ஆண்டு போர்ட்லேண்டில் நடைபெற்ற தடகளப் போட்டியொன்றில் ஆசிய அளவில் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

சூடான் நாட்டைப் பிறப்பிடமாக கொண்ட அப்தலெலாஹ் ஹாரோன் சிறுவயதில் குத்துச்சண்டை மற்றும் கால்பந்துப் போட்டிகளில்தான் ஆர்வம் காட்டினார். அதன் பின்னர் அவரது 16ஆவது வயதில் ஆசிரியர் ஒருவரால் அவரது தடகளத் திறமை வெளிப்பட்டது. அதன் மூலமாகத்தான் உலகளவில் அவர் ஒரு தடகள வீரராக மாறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

அப்தலெலாஹ் ஹாரோனின் மறைவுக்கு முன்னாள் வீரர்கள், தற்போதைய வீரர்கள் என அனைவரும் சமூக வலைத்தளங்களில் ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்து வருகின்றனர்.

# இலங்கை வீர, வீராங்கனைகளுக்கு நாளாந்த, விசேட கொடுப்பனவுகள்




இன்னும் மூன்று வாரங்களில் ஆரம்பமாகவுள்ள ‘2020 டோக்கியோ ஒலிம்பிக்’ போட்டிகளில் பங்கேற்கும் இலங்கை வீர, வீராங்கனைகளுக்கு நாளாந்தம் 40 அமெரிக்க டொலர் கொடுப்பனவுடன், 10 ஆயிரம் டொலர் விசேட கொடுப்பனவொன்றையும் வழங்குவதற்கு விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஆலோசனையொன்றை முன்வைத்திருந்தார்.

இந்நிலையில் இக்கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாக அமைச்சின் அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கவுள்ள இலங்கை வீர, வீராங்கனைகளுக்காக வணிக வகுப்பு விமான சேவை வசதிகளை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பயிற்றுவிப்பாளர்களுக்கு 5 ஆயிரம் அமெரிக்க டொலர்களுடன், நாளாந்தம் 40 டொலர் கொடுப்பனவு வழங்குவதற்கும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

EURO CUP 2020

# நடப்பு உலக சம்பியன் பிரான்ஸ் வெளியேற்றம்



யூரோ கிண்ண கால்பந்துத் தொடரின் 16 அணிகள் பங்கேற்ற நொக்அவுட் சுற்று போட்டிகள் தற்போது நிறைவடைந்துள்ளன. இதில் எதிர்பார்த்த அணிகள் தொடரில் இருந்து வெளியேறியிருக்கும் நிலையில், எதிர்பாராத புதிய அணிகள் காலிறுதிப் போட்டிகளுக்குத் தகுதி பெற்றிருக்கின்றன. இவ்வாறான நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு நடைபெற்ற மிக முக்கியமான போட்டியில் நடப்பு பீபா உலக சம்பியனான பிரான்ஸ் மற்றும் சுவிட்ஸர்லாந்து அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியின் 15ஆவது நிமிடத்தில் சுவிட்ஸர்லாந்து வீரர் ஹாரிஸ் செபிரோவிக் முதல் கோலை அடித்தார். இந்த கோலுடன் முதல் பாதி ஆட்டநேர முடிவில் 1-0 என்ற அடிப்படையில் சுவிட்ஸர்லாந்து அணி முன்னிலை வகித்தது. இரண்டாம் பாதி ஆட்டத்தில் பிரான்ஸ் அணியின் நட்சத்திர வீரரான கரிம் பென்சிமா 57 மற்றும் 59ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து இரு கோல்களை அடித்து பிரான்ஸ் அணியை முன்னிலைப்படுத்தினார்.

பிரான்ஸ் அணியின் நட்சத்திர வீரரான போல் போக்பா, 75ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடிக்க 3-1 என்ற அடிப்படையில் பிரான்ஸ் முன்னிலை பெற்றிருந்தது. இந்நிலையில் பரபரப்புக்கு மத்தியில் நடைபெற்றுக்கொண்டிருந்த போட்டியில் 81ஆவது நிமிடத்தில் சுவிட்ஸர்லாந்து அணி வீரர் ஹாரிஸ் செபிரோவிக் மற்றுமொரு கோலினை அடித்தார். போட்டியின் இறுதி நிமிடத்தில், அதாவது 90ஆவது நிமிடத்தில் சுவிட்ஸர்லாந்து அணி வீரர் மரியோ கவ்ரனோவிக் கோலினை அடிக்க போட்டி 3-3 என்ற அடிப்படையில் சமநிலையில் நிறைவடைந்தது.

நொக்அவுட் சுற்றுப் போட்டி என்பதால் போட்டியின் வெற்றியை தீர்மானிக்க வேண்டும் என்பதற்காக மேலதிகமாக 30 நிமிடங்கள் வழங்கப்பட்டன. அந்த மேலதிக நிமிடங்களில் இரு அணிகளினாலும் கோல் எதனையும் பெறமுடியவில்லை. அதன்படி வெற்றியாளரைத் தீர்மானிப்பதற்கு பெனால்டி முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. இதில் சுவிட்ஸர்லாந்து அணி 5-4 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிப் போட்டிக்கு முன்னேற, நடப்பு உலக சம்பியனான பிரான்ஸ் அணி அதிர்ச்சித் தோல்வி கண்டு தொடரிலிருந்து வெளியேறியது. இதற்கு முன்னர் நடப்பு யூரோ சம்பியனான போர்த்துக்கல் அணி தொடரில் இருந்து வெளியேறியமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.அ.இராச்சியம், ஓமானுக்கு மாற்றப்படும் T20 உலகக்கிண்ணம்

## ஒக்டோபர் 17 ஆம் திகதி தொடர் ஆரம்பம்

ஏழாவது ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரை நடத்தும் உரிமையை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கொண்டுள்ள நிலையில், எதிர்வரும் ஒக்டோபர் - நவம்பர் மாதமளவில் தொடரை நடத்துமாறு சர்வதேச கிரிக்கெட் பேரவையானது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு பணிப்புரை வழங்கியிருக்கிறது. தங்களுடைய




ஏற்பாட்டில் நடைபெறுகின்ற தொடரை தங்களுடைய சொந்த நாட்டிலேயே நடத்துவதற்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை முயற்சிகளை மேற்கொண்டு வந்தது.

எனினும், இந்தியாவில் கொரோனா வைரஸ் தாக்கம் மிக அதிகமாக இருப்பதன் காரணமாக அனைத்து அணிகளும் இந்தியாவுக்குச் சென்று போட்டிகளில் விளையாடுவது என்பது சாதாரண விடயமாகக் காணப்படவில்லை. இந்நிலையில், போட்டியை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை சர்வதேச கிரிக்கெட் பேரவை இந்திய கிரிக் கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு விடுத்திருந்தது.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை யானது போட்டிகளை இந்தியாவில் நடத்த முடியும் என்ற நிலைப்பாட்டில், ஐ.சி.சி.யிடம் சற்று காலஅவகாசம் கேட்டிருந்தது. அதன்படி கடந்த ஜூன் 28 ஆம் திகதி வரையில் கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறான நிலையில் நேற்று முன்தினத்துடன் காலஅவகாசம் நிறைவடைந்த நிலையில், 2021ஆம் ஆண்டுக்கான ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரானது ஐக்கிய அரபு இராச்சியம், ஓமானுக்கு மாற்றப்படுவதாக சர்வதேச கிரிக்கெட் பேரவை உத்தியோகபூர்வாமாக நேற்று அறிவித்தது.

அதன்படி எதிர்வரும் ஒக்டோபர் 17 முதல் நவம்பர் 14 ஆம் திகதி வரை ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடர் நடைபெறவுள்ளது.




# சனியன்று காலிறுதி போட்டிகள் ஆரம்பம்




## COPA America 2020

தென்னமெரிக்காவைச் சேர்ந்த 10 நாடுகள் பங்கேற்கின்ற கோப்பா அமெரிக்க கால்பந்து தொடரின் லீக் சுற்று போட்டிகள் அனைத்தும் நிறைவடைந்துள்ள நிலையில், காலிறுதிப் போட்டிக்கு 8 அணிகள் தகுதி பெற்றுள்ளன. நேற்று அதிகாலை இரண்டு இறுதி லீக் போட்டிகள் நடைபெற்றன. ஒரு போட்டியில் உருகுவே மற்றும் பராகுவே அணிகள் மோதின. இப்போட்டியில் உருகுவே அணி 1-0 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று குழு ‘ஏ’ விற்கான புள்ளிப் பட்டியலில் இரண்டாமிடத்தை பிடித்தது. மற்றுமொரு போட்டியில் ஆர்ஜென்டின அணி, பொலிவியாவை 4-1 என்ற கோல்கள் கணக்கில் இலகுவாக வீழ்த்தி குழு ‘ஏ’ விற்கான புள்ளிப்பட்டியலில் முதலிடத்தை இறுதி செய்தது.

இதனடிப்படையில் காலிறுதிப் போட்டிகளில் மோதும் அணிகளின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

சனி அதிகாலை 2.30 மணி
பராகுவே VS பெரு
சனி அதிகாலை 5.30 மணி
பிரேசில் VS சிலி
ஞாயிறு அதிகாலை 3.30 மணி
உருகுவே VS கொலம்பியா
ஞாயிறு காலை 6.30 மணி
ஆர்ஜென்டீனா VS ஈக்வடோர்

# யாழ்ப்பாணம் – களுத்துறை இடையிலான சினேகபூர்வ சதுரங்கப் போட்டி


தினோத் அபேரத்ன

(களுத்துறை என்.ஜெயரட்னம்)

களுத்துறை சுப்பர் ஃபைட்டர் சதுரங்க விளையாட்டுக் கழகம் மற்றும் யாழ்ப்பாணம் யாழ் சதுரங்க விளையாட்டுக் கழகம் ஆகியவற்றுக்கிடையிலான சினேகபூர்வ ஒன்லைன் ரெபிட் செஸ் போட்டியில், களுத்துறை சுப்பர் ஃபைட்டர்ஸ் சதுரங்க விளையாட்டுக் கழகம் ஒட்டுமொத்த போட்டி சம்பியனாக முடிசூட்டப்பட்டது.


வைஷ்ணவி


பியூமி உத்பலா

களுத்துறை சுப்பர் ஃபைட்டர்ஸ் சதுரங்க விளையாட்டுக் கழகத்தினால் இணையத்தளம் மூலம் வெற்றிகரமாக ஏற்பாடு செய்யப்பட்ட 7 சுற்றுக்களைக் கொண்ட இப் போட்டியில், தினோத் அபேரத்ன 7.7 புள்ளிகளைப் பெற்று ஆண்கள் பிரிவில் சம்பியன் பட்டத்தை தக்கவைத்துக் கொண்டார். இரண்டாமிடத்தை யாழ். சதுரங்க விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த டி.அன்பரசன் கைப்பற்றினார்.

இதற்கிடையில் பெண்கள் பிரிவில் பியூமி உத்பலா 4.6 மதிப்பெண்களுடன் அதிசிறந்த வீராங்கனையாகவும், யாழ் சதுரங்க விளையாட்டுக் கழகத்தின் வைஷ்ணவி சிவாஸ்கரன் அதிசிறந்த இரண்டாம் நிலை வீராங்கனையாகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

முடிவுகளின் அடிப்படையில் முதல் 5 வீரர்களின் இறுதி நிலைகள் மற்றும் அவர்களின் புள்ளிகள் பின்வருமாறு:-

1. தினோத் அபேரத்ன (சுப்பர் ஃபைட்டர்ஸ்) 7.7 புள்ளிகள்
2. டி.அன்பரசன் (யாழ் சதுரங்க வி.க) 5.5 புள்ளிகள்
3. கே.தருஷிகா சில்வா (சுப்பர் ஃபைட்டர்ஸ்) 5.5 புள்ளிகள்
4. கோசலா சந்தீபா அமரதுங்க (சுப்பர் ஃபைட்டர்ஸ்) 5.0 புள்ளிகள்
5. செனித் ரன்மிகா அமரசிங்க (சுப்பர் ஃபைட்டர்ஸ்) 5.0 புள்ளிகள்


டி.அன்பரசன்

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7